THRU THE DESERT (Tamil)

பாலைவனப் பயணம்

(ஒரு மிஷனரியின் இதயத்திலிருந்து)

ஜேசன்

சூழ்நிலைகளில் தேவனின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்

பாலைவனப் பயணம்

(ஒரு மிஷனரியின் இதயத்திலிருந்து)

ஜேசன்
மிஷனரி,
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

தமிழாக்கம்
அருண்
மிஷனரி,
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

வெளியிடுவோர்

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர், 632 006, இந்தியா.
Tel : 00 91 416 / 2242943 / 2248943
< hq@bymonline.org >
www.bymonline.org

THRU THE DESERT (Tamil) - பாலைவனப் பயணம்

Copyright : 2013 JASON

First Edition : May 2013

No. of Copies : 7,000

Available in English also.

Typing : Mrs. R. Latha

Page setting & Design : Six Star Xerox,
Perambur, Chennai-11.
Tel : 9445253780

Proof Reading : Mr. Francis Antony
Mr. John Ebenezer

Printed By : New Shenbagam Offset,
Sivakasi

Distributed by : Blessing Literature Centre
21/11, West Coovam River Road,
Chintadripet, Chennai - 600 002.
Tel : 00 91 44 - 28450411
< blc@bymonline.org>

அர்ப்பணிப்பு

தேவனோடு என் வாழ்க்கைப்

பயணத்தை துவக்க உதவி

செய்த என் தாயாருக்கு ...

உள்ளடக்கம்

மதிப்புரை

என்னுரை

முன்னுரை

01.	சிவந்த சமுத்திரம் – எப்பக்கத்திலும் நெருக்கம்!	17
02.	மாரா – நொறுக்கப்படுதல் நல்லது!	31
03.	ஏலீம் – சர்வ வல்லவரின் நிழல்!	41
04.	சீன் வனாந்தரம் – புலம்பலின் மத்தியில்!	49
05.	ரெவிதீம் – தேவனை சோதித்தல்!	59
06.	ஓரேப் – மறுரூப மகிமை!	67
07.	கிப்ரோத் அத்தாவா – எகிப்தின் மோகம்!	77
08.	ஆஸ்ரோத் – பந்தமே பகை!	87
09.	பாரான் வனாந்தரம் – வீணான அலைச்சல்!	95
10.	காதேஸ் – மோசேயும் மனிதனே!	105
11.	மோவாபின் வெளிகள் – எல்லாம் நன்மைக்கே!	113
12.	பிஸ்கா – மகிமையை நோக்கி!	123

இறுதியுரை

மதிப்புரை

எனது தொலைபேசி ஒலித்தது. மறுமுனையில் மிஷனரி ஜேசன். அவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொள்வது அபூர்வமானது. அவர் சொன்னார், 'ஆன்ட்டி, ஒரு புத்தகம் எழுதியுள்ளேன், அதை அனுப்பி வைக்கிறேன். படித்துவிட்டு தங்கள் கூற்றைக் கூறவும்', என்றார். நான் உற்சாகமடைய வில்லை. பெரிய எதிர்பார்ப்பும் இல்லை. "இந்த இளைஞன் அப்படி என்ன எழுதியிருப்பான்? எப்படி என் கூற்றைக் கூற முடியும்?" என்னும் பல சிந்தனைகள் என் மனதில். எனினும் நான் அமர்ந்து அந்தப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். பக்கத்தைப் புரட்ட புரட்ட நான் அதன் செய்தியில் மூழ்க ஆரம்பித்தேன். என் வாழ்க்கை ஓட்டத்தை மறுபடியும் ஓடுவது போல் ஒரு அனுபவம்! ஒவ்வொரு சூழ்நிலையும், என் வாழ்வில் மறைந்து கிடந்த நினைவுகளையும் நினைவூட்டியது. நான் முடிவுரையை அணுகினபோது உற்சாகமடைந்தவளாய் எழுந்தேன். உண்மையைச் சொல்லப் போனால், இந்தப் புத்தகத்தின் மூலமாய் ஆண்டவர் என்னோடு பேசினார்.

நான் இந்தப் புத்தகத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உங்கள் வாழ்க்கையைத் தொடும், மேலும் உங்கள் வாழ்க்கையின் ஓட்டத்தில் உற்சாகம் அடைவீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– Dr. லில்லியன் ஸ்டான்லி, MBBS.,DCH.,

வாக்குத்தத்த தேசம் நமதே
வாக்களித்த தேவன் உண்டே;
காலம் கடத்திவிட்டோம் எகிப்தில்
ஆசியை எட்டிப் பிடிப்போம்;
நாம் விடவேண்டும், நாம் போக வேண்டும்.
காயும் வனாந்திர வழியாய்
பாயும் கிருபை ஊற்று
ஆசிகள் அனேகம் உண்டு
ஆண்டவரது கரிசனையுமுண்டு
தாங்கும் கரங்கள் மட்டுமல்ல
பாங்கான பரமனே அங்குண்டு!

என்னுரை

2010 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் அது. எதிர்நோக்கியிருந்த ஆண்டிற்காக தேவனின் பாதத்தில் காத்திருந்த நேரம். அப்பொழுது ஆண்டவர் என் மனதில், நான் சில வருடங்களுக்கு முன்பாக, ஒடிசாவிலே சில கிறிஸ்தவர்களுக்குக் கற்பித்த வேதபாட வகுப்பிலிருந்து ஒரு புத்தகத்தை எழுத ஏவினார். எழுதுவதைப் பற்றின எந்த ஒரு அனுபவமும் இல்லாததினால், அநேக சந்தேகங்கள் எனக்கு. ஆனால் தேவனுடைய கிருபையே என்னை நடத்தியது.

நாம் அனைவருமே பாலைவனப் பாதையிலே நடந்து செல்லுகிறவர்களாய் காணப்படுகிறோம். ஆனால் நம்மில் அநேகர் அதை எதிர்பார்ப்பதுமில்லை, தேவனின் நோக்கங்களைப் புரிந்து கொள்வதுமில்லை. நான் முதன் முறையாக ஒடிசாவிற்கு மிஷனரியாய் சென்ற பொழுது, அநேக எதிர்பார்ப்புகளோடு சென்றேன். ஆனால் தேவன் எனக்கு வைத்திருந்ததோ இந்த பாலைவனப் பயணம். அந்தக் காலக்கட்டத்தில் தேவன் என்னோடு இடைபட்டார். வசனத்தின் மூலமாய் தனது சித்தத்தையும் பாலைவனத்தின் நோக்கத்தையும் தெளிவுபடுத்தினார். தேவன் எனக்கு கற்றுக் கொடுத்த காரியங்களையே இங்கு நான் பகிர்ந்துள்ளேன்.

Dr.Mrs.லில்லியன் ஸ்டேன்லி அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றி. இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் அவர்கள் தந்த ஆலோசனைகளுக்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 11 ஆண்டுகள் நான் இணைந்த குடும்பமாகிய ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை சார்ந்த தலைவர்களுக்கும் மிஷனரிகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேசன்.

"கானக பாதை காடும் மலையும்
காரிருளே சூழ்ந்திடினும்
மேக ஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவாய்

பயப்படாதே கலங்கிடாதே
பாரில் ஏசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்"

-Sis. சாராள் நவரோஜி

முன்னுரை

நமது வாழ்க்கை ஒரு பயணமாகும். நாம் அனைவரும் இதில் பயணிக்கிறோம். இப்பயணத்தில் அநேகரை சந்திக்கிறோம். அநேக இடங்களுக்குச் செல்கிறோம். அநேக சூழ்நிலைகளையும் எதிர் கொள்கிறோம். நாம் பயணிக்கும் இப்பயணத்தின் பாதையானது, இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறி அந்த கானான் தேசத்தை நோக்கிச் சென்ற பாதைக்கு ஒப்பானதாகும். அது ஒரு பாலைவனப் பாதை யாகும். பாவத்தின் மோகத்திற்கும், அடிமைத்தனத்திற்கும் பெயர் போனது எகிப்து தேசம். நம் அனைவருக்கும் இந்த எகிப்தின் அனுபவம் உண்டு. எப்பொழுது நாம் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோமோ, அப்பொழுதிலிருந்தே பரிசுத்த ஆவி யானவர் நம்மை பாவத்தின் கட்டிலிருந்து விடுவித்து நமக்குள் ஒரு பரிசுத்த வாஞ்சையையும், தாகத்தையும் கொடுக்கிறார். நாம் இயேசுவோடு நடக்கப் பழகும் போது, அவர் நம்மை, தம்மைப் போலவே மறுரூபமாக்கி மகிமை அடையச் செய்கிறார்.

இந்த மகிமையின் மறுரூபத்தின் செயலை, அவர் நமக்கு அனுமதிக்கும் சூழ்நிலைகளைக் கொண்டு, பாடு களைக் கொண்டு, மனிதர்களைக் கொண்டு செயல் படுத்துகிறார்.

நாம் தேவனோடு பயணிக்கும் இவ்வாழ்க்கைப் பயணத்தின் போது, நாம் விரும்பாத சூழ்நிலைகளை எதிர் கொள்ள முனைகிறோம். ஆனால் தேவனோ, தாம் நேசிக்கின்ற பிள்ளையை சிட்சிப்பது போல, அந்த கடினமான பாதைகளினூடே, இருண்ட பள்ளத் தாக்கு களினூடே, உயர்ந்த மலைகளின் மேலே, முட்கள் நிறைந்த பாதையினிலே நடத்துகிறார். சில நேரங்களில் நம் வாழ்க் கையில் சம்பவிக்கும் காரியங்கள் நமக்குப் புரியாத புதிராகவே தோன்றுகிறது. சில நேரங்களில் சோர்ந்து

போகிறோம், பல நேரங்களில் உடைந்து போகிறோம். ஏன் ஆண்டவரே? ஏன்? என்ற கேள்விக்கு விடையறியாது, மவுன நண்பனாய் பதில் கூறாத ஆண்டவரையும் புரியாது சில நேரங்களில் திகைக்கிறோம். யோசேப்புக்கும் இந்த பாதைதான். ஏன், வேதத்திலே நாம் காணும் ஆபிரகாம், தாவீது, நெகேமியா, பவுல் போன்ற பரிசுத்தர்களுக்கும் இதே பாதைதான்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆண்டவர் வைத் திருந்ததும் இதே பாதைதான். அது ஒரு பாலைவனப் பாதை. தேவன் தம் இரட்சிப்பை அற்புதங்களோடும், அடையாளங் களோடும் எகிப்தில் வெளிப்படுத்தின போது, இஸ்ரவேல் ஜனங்கள் மிகுந்த உற்சாகமடைந்திருக்க வேண்டும். ஆனால் இப்போதோ அவர்கள் வனாந்தரத்தினூடே செல்ல வேண்டும். தமது பிள்ளைகளோடு, தமது உடமைகளோடு செல்லவேண்டும். வனாந்தரத்திலே தற்காலிகக் கூடாரத் தில் தங்கவேண்டும். ஒரே இடத்தில் அநேக நாட்கள் தங்க இயலாது. அவர்கள் ஆசையாய் வாஞ்சித்ததோ பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசம். ஆனால் அவர்களின் முன் இருந்ததோ ஒரு பாலைவனப் பயணம்.

இந்தப் புத்தகத்திலே இஸ்ரவேலர் கடந்து சென்ற பன்னிரெண்டு சூழ்நிலைகள் அல்லது சூழமைவுகளை நாம் தியானிப்போம். ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்து நாம் அநேக ஆவிக்குரிய படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள முடியும். இஸ்ரவேலர் கடந்து வந்த அந்தச் சூழ்நிலைகளில் தேவன் எவ்வாறாகப் போதுமானவராய் காணப்பட்டார் என்பதையும் தியானிப்போம். ஒருவேளை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து வந்தவராக இருக்கலாம், அல்லது கடந்து செல்பவராக இருக்கலாம் அல்லது இனி மேல் கடந்து செல்லப் போகிறவராக கூட இருக்கலாம். எப்படி இருந்தாலும், தேவன் இப்புத்தகத்தின் மூலம் உங்களை ஆசீர்வதித்து பெலப்படுத்துவார். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

எப்போதும் நீல வானத்தையும்
தப்பாத மலர் பாதையையும்
அப்பா நம் தேவன் வாக்களிக்கவில்லையே;
கண்ணீரின்றி களிப்பையோ
செந்நீரின்றி சிறப்பையோ
வெயிலின்றி மழையையோ
முள்ளின்றி மகுடத்தையோ
விக்கலின்றி சமாதானத்தையோ
அப்பா நம் தேவன் வாக்களிக்கவில்லையே
ஆனால் ...
நாளுக்கு பலமும்
பாடுகளுக்கு ஓய்வும்
பாதைக்கு வெளிச்சமும்
சோதனைக்குக் கிருபையும்
பரத்திலிருந்து உதவியும்
பரிதபிக்கும் நெஞ்சமும்
தப்பாத அன்பும்
அப்பா நம் தேவன் வாக்களித்துள்ளாரே!

–அனி ஜான்ஸ்சன்

சூழ்நிலை 1

சிவந்த சமுத்திரம்

எப்பக்கத்திலும் நெருக்கம்!

கர்த்தரின் பராக்கிரமமுள்ள கரத்தையும் அவரின் ஓங்கிய புயத்தையும் இஸ்ரவேலர்கள் அனுபவித்திருந்தனர். பார்வோனுக்கு விரோதமாக தேவன் அனுப்பிய பத்து வாதைகளின் பயங்கரத்தையும் கண்டிருந்தனர். மிகப்பெரிய எதிர்ப்பார்ப்போடு தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணிய அந்தக் கனவு தேசமாம் கானான் தேசத்தை நோக்கி நடைபோட்டனர். பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நோக்கி தமது பயணத்தைத் தொடங்கினர். அவர்களை வழிநடத்த தேவன் மோசே என்ற தலைவனை தந்தருளி யிருந்தார். அவர் மிகப்பெரிய தீர்க்கதரிசியும், உன்னத தலை வனுமாயிருந்தார். பார்வோனின் பலத்த கரத்திலிருந்து அற்புதங்களோடும், அடையாளங்களோடும் விடுவிக்கப் பட்ட இவர்கள் எல்லாக் காரியங்களும் தங்களுக்கு சாதக மாகவே முடியும் என்று நினைத்திருந்தனர்.

கர்த்தரின் பிரசன்னம் அவர்கள் கண்களுக்கு முன்பாக அக்னி ஸ்தம்பமாகவும், மேக ஸ்தம்பமாகவும் முன்னடத்திச் சென்றது(யாத்13:22). கண்முன்னே கர்த்தருடைய கிரி யைகள், வழிநடத்தும் மேக, அக்னி ஸ்தம்பங்களினால் இஸ்ரவேலர் நிச்சயம் குதூகலமடைந்திருக்கவே வேண்டும்.

ஆனால் இந்த பிரமிப்பு நெடுநாள் நீடிக்கவில்லை. சூழ்நிலைகள் மாறுபடத்தான் செய்தது.

பெரும் சோர்வு

இஸ்ரவேலர்கள் தேவ வழியை சரிவர விளங்கிக் கொள்ளவில்லை எனலாம். ஆம் தேவனின் திட்டங்கள் என்றும் நம் திட்டங்களுக்கு மாறுபட்டவையே. தேவன் ஏசாயா 55:8,9–இல் உரைத்தபடியே "*என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியை விட வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளை விட என் வழிகளும், உங்கள் எண்ணங்களை விட என் எண்ணங்களும் உயர்ந்திருக்கிறது.*" அவர் வழிநடத்துதல் மேன்மையானதே.

ஆண்டவரோடு நடைபோடும் இந்த ஆன்மீக வாழ்வில் இஸ்ரவேலருக்கு சம்பவித்ததைப் போன்ற அனுபவங்கள் நம் வாழ்விலும் சம்பவிக்கும். அநேக நேரங்களில் கர்த்தர் நம்மை நடத்த விரும்பும் வழிகளை நாம் உணர்ந்து கொள்ளத் தவறுகிறோம். நாம் 'எல்லாம் சரியாக நடக்கும்' என்று எதிர்பார்க்கிறோம். ஒருமுறை நம் வாழ்வை சம்பூரணமாய் அவர் கரத்தில் அர்ப்பணித்த பின்பு, கர்த்தர் நம்மை நமக்கேற்ற வழியில் நடத்துகிறார். கர்த்தர் ஒருபோதும் அலைகளற்ற பயணத்தை நமக்கு வாக்குப்பண்ணவில்லை. வேதத்தைக் கவனத்தோடு வாசிக்க முற்படுகையில் இச்சத்தியம் நமக்கு பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளிலும் வழிநெடுகவே வெளிப்படுத்தப்படுகிறது.

கீழ்க்கண்ட வசனப் பகுதிகளைக் கவனியுங்கள்:

சங்கீதம் 34:19 – "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், ஆனால் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார்."

யோவான் 16:33– "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனால் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்."

அப்போஸ்தலர் 14:22 – "சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர் களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டு மென்று சொன்னார்கள்."

நாம் தற்போது பயணிக்கும் பாதை பாலைவனம் என்று அறிய தவறும் பட்சத்தில், நாம் வழியெங்கும் ஏமாற்ற மடைவோம், சோர்வுறுவோம். அன்பு விசுவாசியே, ஒன்றை நன்றாகப் புரிந்துகொள். ஒருவேளை நாம் கடந்து செல்லும் பாதை பாலைவனமாயிருந்தாலும், தேவனுடைய கிருபை களையும், அவருடைய மகத்துவங்களையும், ஆச்சரியமான அவர் நடத்துதலையும், தெய்வீக பிரசன்னத்தையும் நாம் அனுபவிப்போம் மாத்திரமல்ல முடிவிலே நாம் அவர் சாயலிலே மறுரூபமாக்கப்படுவோம் என்பதில் எவ்வள வேனும் ஐயமில்லை. அல்லேலூயா!

பவுலோடு சேர்ந்து நாமும் சொல்லுவோம்
"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."
(2 கொரி 2:14)

சூழ்நிலைகளின் தேவன்

யாத்திராகமம் 14:1, 2 – "கர்த்தர் மோசேயை நோக்கி, 'நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத் தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்க வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு; அதற்கு எதிராகச் சமுத்திரக் கரையிலே பாளயமிறங்குவீர்களாக."

நமது தேவன் சூழ்நிலைகளின் தேவனாயிருக்கிறார். கர்த்தர் மோசேக்கு சொல்லுவதென்னவென்றால் இஸ்ரவேல் மக்கள் திரும்பிக் கொண்டு கடற்கரைக்கு எதிராக பாளயமிறங்க வேண்டுமாம். இக்கட்டளை மோசேக்கும், இஸ்ரவேலருக்கும், புரியாத புதிராகவே தோன்றியிருக்க வேண்டும். ஆனால் தேவனுடைய திட்டத்தின்படி இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்துச் செல்ல வேண்டிய தாயிருந்தது. இது கர்த்தர் இஸ்ரவேலருக்கென்று நியமித்த பாதையாயிருந்தது. சந்தேகமின்றி நம் வாழ்விலும் கர்த்தர் தாமே சூழ்நிலைகளை நேரப்பண்ணுகிறார். அவர் ஆதியும் அந்தமுமானவர். அவர் அல்பாவும் ஓமேகாவுமாயிருக்கிறார் (வெளி1:8) உங்கள் பிறப்பிற்கு முன்பாகவே உங்களைப் பெயர் சொல்லி அழைத்துவிட்டார். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையும் அவரால் அரங்கேற்றப்படுகிறது. ஆம் அவரே உங்கள் பரம தந்தை. நீங்கள் பிறக்க வேண்டிய பெற்றோர், உங்கள் பிறப்பிடம், உங்கள் தேசம், உங்கள் வாழ்வில் நீங்கள் காண இருக்கும் சூழ்நிலைகள் எல்லாம் அவர் முன்குறித்திருந்த திட்ட நிகழ்வுகளே. ஒருவேளை நம்முடைய சுய சித்தத்தை முன்னிட்டு, நாம் நம் வாழ்க்கையில் சில காரியங்களை குழப்ப நேரிட்டாலும், நம் கண்ணுக்குப் புலப்படாத தேவனின் திருக்கரம் நம்மை, இன்னும் சிறந்த நிலைக்கு நடத்திச் செல்வதாகவே இருக்கிறது. இச்சத்தியத்தை நன்கறிந்த ஒருவரால் – அவர் கையசைவிற்கு சிறந்தாழ்த்தி சுலபமாய் அவர் வழியில் முன்னேற முடியும். தேவ வல்லமையையும், அற்புதங்களையும் ருசிக்கவே செங்கடல் போன்ற சம்பவங்கள் நம் வாழ்வில் தேவனால் அனுமதிக்கப் படுகின்றன.

"தேவன் என்றும் தம் சிறுபிள்ளைகளுக்கு தம் மகா வல்லமையை வெளிப்படுத்த விரும்புகிறார்."

பகுதி வெளிப்பாடுகளில் அடங்கியிருக்கும் தேவ இரகசியம்

யாத்திராகமம் 14:3,4 – "அப்பொழுது பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து; அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்தும் போட்டது என்று சொல்லுவான். ஆகையால், பார்வோன் அவர்களைப் பின் தொடரும்படிக்கு, நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தி, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி, பார்வோனாலும் அவனுடைய எல்லா ராணுவத்தாலும் மகிமைபடுவேன்" என்றார்.

இங்கு கர்த்தர் மோசேக்கு, பார்வோன் அவர்களை நிச்சயமாகவே பின் தொடர்ந்து வருவானென்றும் அவன் சேனைகளின் கைகளிலிருந்து மிகப்பெரிய விடுதலையை அளிக்கப் போகிறார் என்பதையும் சொல்வதை காண் கிறோம். ஆனால் கர்த்தர் மோசேக்கு தான் செய்ய வேண்டியது என்ன என்பதைக் குறிப்பிட்டு சொல்ல வில்லை. இதைத்தான் நான், "பகுதி வெளிப்பாட்டின் இரகசியம்" என்று அழைக்கிறேன். தேவன் தம் சுபாவத் தையும் தமது திட்டங்களையும் முழுமையாய் தமது வேதத் தில் வெளிப்படுத்திவிட்டார். ஆனால் தேவன் நம்மை தனிப்பட்ட விதத்தில் வழிநடத்தும்போது, தம் திட்டங்களைப் படிப்படியாகத்தான் வெளிபடுத்துகிறார். நாம் அநேக நேரங்களில் நமது வாழ்வின் திட்டத்தின் முழுமையான வரைபடத்தை வேண்டுகிறோம். ஆனால் நம் வாழ்வில் தேவன் வைத்திருக்கும் திட்டங்கள் நமக்கு படிப்படியாகவும், கிரமமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. ஒருமுறை ஓடிசா வின் அடர்ந்த வனப்பகுதியில் எனது இருசக்கர வாக னத்தில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு இந்த சத்தியம் விளங்கியது. ஆண்டவர் கேட்டார் – "மகனே, இது இரவா யிருக்கிறது. ஆனால் உன் வீட்டிற்கு செல்ல முழுமையான வழி உனக்குத் தெளிவாகத் தெரிகிறதா ?" என்று.

நான் சொன்னேன் – "இல்லை ஆண்டவரே, ஒரு பத்தடி தூரத்தை மட்டும் காண்கிறேன்" என்றேன். பின்பு நான் உணர்ந்தது என்னவென்றால் ஒரு பத்தடி பயணிக்கும் போது அடுத்த பத்தடி தூரத்திற்கு எனக்கு வெளிச்சம் தெளிவாய் தெரிந்து. இப்படியாக ஒவ்வொரு பத்தடிக்கும் நான் கிடைக்கப் பெற்ற விளக்கொளியில் பத்திரமாய் வீடு வந்த டைந்தேன். இது என் இரட்சகரோடு நான் நடக்கும் தனிப்பட்ட வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வெளிப்பாடென்பேன்.

இந்தக் காரியத்தை திருவசனத்தின் வாயிலாக, தேவனோடு நடந்த அநேக பரிசுத்தவான்களின் வாழ்க் கையின் மூலம் நாம் அறிந்து கொள்ளமுடியும். யோசேப்பு கனவு கண்டான்– ஒரு நாளில் தன் உடன் பிறந்த சகோதரர் களை விட, ஏன் பெற்றவர்களை விடவும் பெரியவனாயிருப் பானென்று. ஆனால் அதன் பின்பு நேர்ந்த அனைத்து சம்பவங்களிலும், கடின நேரங்களிலும் தேவன் ஒரு அமைதித் தோழனாக இருந்தார்.

நம் வாழ்விலும் தேவன் ஒளிமயமான எதிர்காலத்தை வாக்குப்பண்ணி, வரப்போகும் ஆசீர்வாதத்திற்கு நம்மை பாத்திரராகும் பொருட்டு, வனாந்தர வழிதனில் நம்மை நடத்திச் செல்கிறார். மிகப்பெரிய தீர்க்கன் எலிசாவின் வாழ்விலும் நாம் இதைக் காணமுடிகிறது. சூனேம் ஊராளாகிய அந்தப் பெண் தன் மகன் இறந்த தருவாயில், எலிசாவை சந்திக்க ஓடி வரும் போது, எலிசாவின் வார்த் தைகளைக் கவனியுங்கள் – "*அவளைத் தடுக்காதே அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார்.*"

தேவன் பவுலின் வாழ்க்கையை சீரமைத்தபொழுது அவருக்கு அறிவிக்கப்பட்ட காரியத்தை கவனியுங்கள் – "*நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்*" (அப் 9:6). ஒரு தரிசனத்தில் முகமுகமாய் தமது சித்தத்தை வெளிபடுத்தின

தேவன், இப்பொழுது அடுத்த கட்ட நடவடிக்கையாக பவுலை பட்டணத்திற்கு அனுப்பி, அனனியாவின் மூலம் தமது சித்தத்தை வெளிப்படுத்துவதை காண்கிறோம்.

தேவன் உங்களிடத்தில் ஏதாவதொன்றை செய்யச் சொல்லும் போது, அல்லது எங்கேயாவது போகச் சொல்லும் போது தயைகூர்ந்து செய்யத் துவங்குங்கள். படிப்படியாகத் தான் வெளிச்சம் வரும். காரியங்கள் புரியும். தேவனின் நடத்துதலை குறித்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதுதான் தேவன் நம்மை நடத்தும் விதம். ஒரு குழந்தையைப் போன்றொரு நம்பிக்கையை அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். எங்கள் மகன் மூன்று வயது குழந்தையாய் இருந்தபோது, குடும்பமாய் அநேக இடங்களுக்கு நாங்கள் பிரயாணப்பட வேண்டியிருந்தது. சிலவேளை இருசக்கர வாகனத்தில், பேருந்துகளில், புகைவண்டியிலும் இன்னும் சில சமயங் களில் ஒரே நாளில் இம்மூன்றிலும் செல்ல நேரிடும். இவ்வித பிரயாணங்களில் எங்கள் மகன் என்ன நினைப்பானென்று நான் யோசிப்பதுண்டு. நாங்கள் எங்கே போகிறோம் என் பதைக் குறித்து அவன் கவலைப்படுகிறதில்லை. அடுத்த வேளை உணவு என்ன? இன்றிரவு எங்கு தங்குவோம்? இவைகளில் எதைக் குறித்தும் அவன் கவலைப் படுகிறதில்லை. அவன் பிரயாணங்களில் உல்லாச மாயிருப்பான். அவனைப் பொறுத்தவரை அவன் அம்மாவும், அப்பாவும் அவனோடிருக்கிறார்கள். அது மட்டும் அவனுக்குப் போதுமானது. ஆம் நம்முடைய வாழ்விலும் நம்மை தேவன் நடத்தும் பாதையில், விபரங்களைக் குறித்து கவலைப்பட அவசியமில்லை. முற்றும் அன்புகூறுகிற பரம தகப்பன் நம் அருகில் இருக்கும்போது, நாம் ஏன் கவலைப் பட வேண்டும்? ஏன் கலங்க வேண்டும்? அவரை நம்பின வர்களாய், அவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு நம் வாழ்க்கைப் பயணத்தை ஆனந்தத்தோடு அனுபவிக்கலாமே! அவரே நமக்கு என்றென்றும் போதுமானவர்.

இக்கட்டுமுனை

யாத்திராகமம் 14:10 – "பார்வோன் சமீபித்து வருகிற போது இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்."

பார்வோனின் சேனைகள் அணிவகுத்து வரும் காட்சியைக் கண்ட இஸ்ரவேலர்கள் திகிலடைந்திருக்க வேண்டும். இது ஏதோ சாதாரண பயமல்ல. காரணம் பார்வோனின் சேனை தளபதிகளின் கொடூரச் செயல்களைக் குறித்து அவர்கள் அறிந்திருந்தார்கள். கற்பனை செய்து பாருங்கள் – ஆயுதமற்ற இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக சுமார் 600க்கும் அதிகமான இரதங்கள் அணிவகுத்து நின்று கொண்டிருப்பதை. பயத்திற்கு மற்றுமோர் காரணமும் உண்டு. அவர்கள் இக்கட்டு முனையில் அகப்பட்டிருந்தார்கள். முன்னால் செங்கடல், பின்னால் பார்வோனின் சேனை. தப்பித்து ஓட வழியுமில்லை. அணிவகுத்து வரும் சேனைகள் ஒருபுறம்; பரந்து விரிந்து நிற்கும் செங்கடல் மற்றொரு புறம். இப்படிப்பட்ட இக்கட்டுமுனையில் இஸ்ர வேலரின் விசுவாசம் தளர்வுற்றது. அவர்களை நடத்தி வந்த மோசேயை நிந்திக்கத் துவங்கினார்கள். நொடிப்பொழுதில் தாங்கள் எகிப்தில் கண்ட அற்புதங்களையெல்லாம் மறந்து போனார்கள். இவ்வித கடின சூழலில் தடுமாறுவது மனிதனுக்கு இயற்கையானதே. நீங்களும் இப்படிப்பட்ட சூழ்நிலையை உங்கள் வாழ்வில் அனுபவித்ததுண்டா? எங்கேயும் தப்பித்துக்கொள்ள முடியாத சூழ்நிலை; எதுவும் செய்யவும் முடியாது, பின்தொடரும் எதிரி, வழியடைத்து நிற்கும் செங்கடல்! தேவனின் அன்பையும் கிருபைகளையும் மறக்க வைக்கும் அனுபவங்கள்! இப்படிபட்ட சூழ்நிலை களில் நாம் என்ன செய்ய முடியும். தேவனை நோக்கிப் பார்க்க முடியும். தேவனிடம் கூக்குரலிட முடியும். மனிதர் களின் மேல் நம்பிக்கை வைத்து என்ன பயன்? இம்மட்டு மாய் நடத்தி வந்தவர் கடைசி வரை நம்மை கரை சேர்க்க மாட்டாரோ?

இராஜாவாகிய யோசபாத்தும், அநேக இராஜாக்கள் ஒன்று கூடி அவனுக்கெதிராக யுத்தத்திற்கு வந்த போது இதைப் போன்றதொரு கைவிடப்பட்ட நிலையை அவன் உணர்ந்திருக்க வேண்டும். அவனும் இப்படித்தான் தேவனை நோக்கிக் கதறினான்.

"எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயந்தீர்க்க மாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்கு பெலனில்லை; நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது" (2 நாளா 20:12).

இதை போன்றதொரு சூழ்நிலையில் சிக்கித் தவித்த போது பரிசுத்த பவுலும் இப்படி அறிக்கையிடுகிறார்.

"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" (II கொரி 4:8,9).

எகிப்தியனை இனி நீ காண்பதில்லை

கர்த்தரே யுத்தத்தில் வல்லவர் (யாத் 15:3). அவர் உங்களுக்காக யுத்தம் செய்ய விரும்புகிறார். அவர் தாம் நடப்பிக்கும் பலத்த காரியங்களை நீங்கள் கண்டுகளிக்க விரும்புகிறார். உங்கள் எதிரிகளின் சூழ்ச்சிகள் நிறை வேறாமல் தடுத்து அவர்களை நிலைகுலையப் பண்ணுவார். தம் பிள்ளைகளுக்கு விரோதமாய் வருபவர்களுக்கு என்ன நேரிடும் என்பதனை உலகம் புரிந்து கொள்ளதக்கதாக, அவர்களுக்கு உங்கள் மூலம் ஒரு பாடம் கற்பிக்க விரும்பு கிறார். அபிஷேகம் பண்ணப்பட்டவர்களைத் தொடுவதும் அவர்களுக்கு விரோதமாக வருவதும் எவ்வளவு கொடூரம் என்பதனை கற்பிக்க விரும்புகிறார். ஆதலால் நீங்கள் இந்த

இக்கட்டுமுனையில் சோர்ந்து போகாதேயுங்கள். இன்று காணும் இந்த எகிப்தியனை இனி என்றைக்கும் நீங்கள் காண்பதில்லை. அவன் இருந்த இடத்தில் நீங்கள் தேடினாலும் அவனைக் காணமாட்டீர்கள். இந்த இக் கட்டான சூழ்நிலையில் தேவன் கிரியை செய்யும்வரை காத்திருங்கள். நீங்கள் ஏதாவது செய்ய முயற்சிக்காதீர்கள், முயன்றாலும் நிச்சயமாகவே உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. காரணம் நீங்கள் இருப்பது ஒரு இக்கட்டுமுனை. அவர் திருமுகம் ஒன்றே உங்கள் நம்பிக்கையாயிருக்கட்டும். அநேக சமயங்களில் தேவன் தாமதிக்கிறாரோ ? என்ற எண்ணம் மேலோங்கும். மேலும் அவர் செயல்பட வேண்டு மென்று நாம் விரும்பும் போது அவர் ஏன் செயல் படுகிறதில்லை என்ற கேள்வியும் எழும்பும். ஆனால் ஒன்றைப் புரிந்துக்கொள்வது அவசியம். "*கர்த்தருக்கென்று ஒரு நேரமுண்டு; அந்த நேரம் மிகக்கண்ணியமானது.*"

தேவன் ஒரு மாபெரும் செயலை அன்று இஸ்ரவேலருக்குச் செய்தார். சொல்லப்போனால் கர்த்தர் இஸ்ரவேலருக்கு இரட்டிப்பான விடுதலையைக் கொடுத்தார் எனலாம். எப்படியெனில் எதிரே நின்ற செங்கடலைப் பிளந்து தடையின்றி இஸ்ரவேலர் முன்னேற உதவினார். மற்றும் பலமிக்க பார்வோன் சேனைகளை அழித்து தேவன் மகிமையாய் வெற்றி சிறந்தார். நம் தேவன் "யேகோவா நிசி" யாயிருக்கிறார். அவரே நமது வெற்றிக் கொடி. ஒருவேளை சூழ்நிலைகள் தோல்வி போல காணப்படலாம். இருப்பினும் அதன் நடுவில் நாம் விவரிக்க இயலா விடுதலையை கொண்டு வர அவர் சித்தங்கொண்டுள்ளார். மோசேக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தத்தை கவனியுங்கள்.

யாத்திராகமம் 14:13,14 – "அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி, 'பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள். கர்த்தர்

உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மா யிருப்பீர்கள்' என்றான்."

யோசபாத்திற்கு அருளப்பட்ட வாக்குத்தத்தத்தையும் நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள்.

2 நாளாகமம் 20:15, 16, 17 – "நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல; தேவனுடையது ... இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல... நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்க ளோடே இருக்கிறார்."

நண்பனே! உங்கள் வாழ்விலும் உங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, இரக்கமற்ற பார்வோன்களால் நீங்கள் அவதிப் பட்டு துவண்டு போனீர்களோ? கவலை கொள்ளா தேயுங்கள். உறுதியாய் நின்று கர்த்தர் உங்கள் வாழ்வில் அருளும் இரட்சிப்பை மட்டும் பாருங்கள். இந்தச் செங்கடல் போன்ற அனுபவத்திற்குப் பின் பார்வோன்களை உங்கள் வாழ்வில் நீங்கள் காண்பதில்லை. தேவன் அருளும் இரட்சிப்புக்காக காத்திருங்கள். *"இன்னும் கொஞ்ச நேரந்தான். அப்பொழுது துன்மார்க்கன் இரான் அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால், அவன் இல்லை (சங் 37:10)."*

ஒரு புதிய பாதை

செங்கடலை பிளந்து கர்த்தர் தம் ஜனங்களுக்கு வழியை உண்டாக்கினார். இனி முன்செல்ல வழி இல்லையே என்று திகைத்து நிற்கையில், இதோ கர்த்தர் உங்களுக்காக ஒரு புது வழியை உருவாக்குகிறார். அது வனாந்தரமாகட்டும், மலைகளாகட்டும், பள்ளத்தாக்குகளாகட்டும், உங்களுக்காக ஒரு புதிய வழி உதயமாகிறது. "*தேவரீர் சகலத்தையும் செய்ய*

வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன் (யோபு 42:2).

ஆம் பிரியமானவர்களே! கர்த்தர் அவாந்தரவெளிகளில் ஆறுகளை உண்டுபண்ணுகிற தேவனாயிருக்கிறார். அவரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. செங்கடலைக் கடந்து செல்லவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறாய். பார்வோன் தோற்றுப் போனான். அவனின் பெருமையை ஆண்டவர் முறித்தார். சுற்றியுள்ள தேசங்கள் இம்மகா விடுதலையை கேள்விப்பட்டு இஸ்ரவேலுக்கு முன்பாக பயந்தார்கள். உங்களுக்கு விரோதமாய் வருகிறவன் பலவானாய் இருப்பதைக் கண்டு சோர்ந்து போகாதேயுங்கள். தைரியமாய் இருங்கள். தேவன் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்த பார்வோன் அவசியம். **தேவனுக்கு விரோதமாக எந்த ஒரு பார்வோனோ, எந்த ஒரு இராயனோ நிற்க முடியாது.** அவர் தமது பிள்ளைகளைக் கொண்டு பலவான்களை வீழ்த்தி அவமானப்படுத்தி தமது நாமத்தை மகிமைப்படுத்துவார். அல்லேலூயா!

கையை நீட்டி வலியைக் கொடுத்தீர்,
தைலம் பூசி வேதனை நீக்கும்.
தைரியம் தாரும் தாங்கிக் கொள்ள,
வைரம் பாய்ந்த நெஞ்சம் தாரும்.
மிஞ்சும் எந்தன் பலவீனத்தால்,
தஞ்சம் கொண்டேன் உந்தன் நெஞ்சில்,
உந்தன் நேசத்தின் நிருபணம்
எந்தன் வேதனைத்தான் இயேசுவே.
பந்தமாய் வலி நீக்கும் வைத்தியனே
சொந்தமாய் அரவணைக்கும் ஆண்டவனே!
உம் சித்தம் நிறைவேற்ற என்மேல்
உம் கைபாரம் அழுத்துதையா அன்பனே.
துடிக்கின்றேன் துன்பத்தால்
துவண்டுவிட்டேன்,
அடிக்கின்ற கரமேதான் அணைக்குமன்றோ
வடிக்கின்றேன் கண்ணீர் உமது கண்டிப்பால்
படிக்கின்றேன் அதுதான் உம் அன்பென்று!

சூழ்நிலை 2

மாரா

நொறுக்கப்படுதல் நல்லது!

யாத்திராகமம் 15:22,23 – "பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப் படுத்தினான். அவர்கள் சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப் போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்த போது மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர் களுக்குக் கூடாதிருந்தது; அதனால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது."

மூன்று நாட்கள் தண்ணீரில்லாமல் இருப்பது என்பது மிகவும் கடினமான ஒரு சூழ்நிலைதான். எண்ணற்ற குழந்தைகளோடும் கால்நடைகளோடும் இச்சூழலை சற்று கற்பனை செய்து பாருங்களேன். இது இஸ்ரவேலருக்கு ஒரு பெரும் பிரச்சனையாயிருந்தது. மோசே, இம்மூன்று நாட் களும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் மாறா திருக்கிற அவர் சுபாவத்தையும் எண்ணினவராய் தரித்து நின்றிருக்க வேண்டும். கடந்து போகிற ஒவ்வொரு மணி நேரத்திலும் கர்த்தரிடத்திலிருந்து ஓர் அற்புதத்தை எதிர்பார்த்து நின்றிருக்க வேண்டும். இப்படியாய் காலங் கடத்த, சடுதியாய் அவ்வனாந்தரத்தில் ஒரு நம்பிக்கை

ரேகை உதித்தது. ஆம்! இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு நீர்நிலையைக் கண்டடைந்திருந்தார்கள். என்ன ஆனந்தம்! அவர்கள் பரவசமடைந்திருக்க வேண்டும். எப்படியோ ஒரு எதிர்பார்ப்புடன் கூடிய நீண்ட காத்திருப்பு ஒரு முடிவிற்கு வந்தது. நான் இக்காட்சியைச் சற்று கற்பனை செய்து பார்க்கிறேன். பெரியவரும் சிறியவரும் தண்ணீரை கண்டவுடன் தங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ள முண்டி யடித்துக் கொண்டு ஓடியிருக்க வேண்டும். மோசேயும் இப்பிரச்சனைக்கு ஒரு வழி பிறந்ததென்று பெருமூச்சு விட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்த பெரிய எதிர்பார்ப்பு பெரும் ஏமாற்றத்தில் முற்றுப் பெற்றது. ஒருவேளை இஸ்ரவேலர் நீரைக் கண்டடை யாதிருந்திருந்தால் அச்சூழல் வேறு விதமாய் இருந்திருக்கும். ஆனால் இங்கு உண்மையாய் தண்ணீரைக் கண்டி ருந்தார்கள். ஆனால் எதிர்பாராத ஒரு காரியம் அங்கு நடந்தேறியது. ஆம் அவர்கள் கண்ட அந்தத் தண்ணீர் கசந்தது. கசப்பு வழக்கமாய் உணவில் கூட நாம் தவிர்ப்பது. அது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதென்று சொன்னாலும் சிறிதே சேர்த்துக் கொள்வோம். யோசித்துப் பாருங்கள். **வறண்ட நாவிற்கு கசந்த தண்ணீர்!** இப்படிப்பட்ட அனுபவத்தை நீங்கள் கடந்து வந்ததுண்டா? ஒரு பெருங் காரியத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க, அச்சம்பவம் எதிர்மறையாய் முடிந்ததோ? ஒருவேளை நீங்கள் வேலை செய்யும் இடத்தில் பரலோகம் என்று நீங்கள் நம்பி போன அந்த இடம் உங்களை நரகமாய்க் கொல்லுதோ? உயர் வானில் சிறகடித்துப் பறக்கும் என நினைத்த உங்கள் திருமண வாழ்வின் கனவு சிறகொடிந்து வீழ்ந்ததோ? பிள்ளைகளைக் குறித்து நீங்கள் கண்ட கனவு உங்களுக்கு ஏமாற்றத்தை அளித்ததோ? இப்படி நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள்.

"புரியாத சூழ்நிலைகள்; உடைந்த கனவுகள்;
நம்பிக்கையற்ற ஒரு எதிர்காலம்;

நண்பர்கள் இல்லா ஒரு தனிமை;
கடந்து போனதே அந்த வசந்தகாலம்;
வாழ்க்கையே கசப்பும், காயங்களுந்தானோ?"
என்று சொல்லி கலங்குகிறாயோ?

பரம தந்தையின் பிழியும் கரங்கள்

நம்முடைய வாழ்வில் மாராவின் அனுபவம் நம்மை நோகச் செய்யும், மனச்சோர்வடையச் செய்யும். இது ஒரு வெறுப்பூட்டுகிற அனுபவம். நாம் கடந்து வந்த மலர்ப்பாதை சட்டென மாறுபட்டுக் கரடுமுரடானதாக மாறும் அனுபவம் போன்றது இது. தெய்வம் நம் அருகிலில்லாத ஓர் உணர்வு; புரிந்து கொள்ள மனிதர்கள் இல்லாத சூழ்நிலை; ஜெபிக்க மறுக்கும் மனநிலை; இதுதான் அந்த மாராவின் அனுபவம்.

சில ஆண்டுகளுக்கு முன் தேவன் என்னை இந்த கசந்த அனுபவத்தினூடே நடத்தினார். நான் முற்றும் சோர்ந்து போனேன். ஒவ்வொரு நாளும் கண்ணீரே எனக்கு ஆறுதலாயிருந்தது. கர்த்தருடைய நடத்துதலை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆண்டவரே ஏன் எனக்கு மட்டும் இப்படி ? என்னைப் புரிந்துகொள்ள ஒருவரு மில்லையே! எல்லாம் வினோதமாய் காட்சியளிக்கிறதே! தேவ மனிதர்கள் கூட ஏன் விசித்திரமாய் தோற்ற மளிக்கிறார்கள் ? இந்த மாராவின் அனுபவம் என்னை விழுங்கிவிடும் போல் இருந்தது. நான் இந்த மாராவை விட்டு ஓடத் தீர்மானித்தேன். நான் ஏன் காரணமில்லாமல் கஷ்டப்பட வேண்டும் ? நான் திரும்பிப் போகத் துடித்தேன். ஆனால் கர்த்தர் சொன்னார், 'மகனே கொஞ்சம் பொறு, இப்பொழுது நீ கனிந்து விட்ட திராட்சைப் பழம்; நான் உன்னை கரத்திலெடுத்துப் பிழிந்து கொண்டிருக்கிறேன். இது வேதனை நிறைந்த ஒரு அனுபவம்தான். ஆனால் நீ பயன்படப் போகிறாய். உன்னிலிருந்து வரும் கனிரசம் அநேகருக்குப் பயன்படப் போகிறது. ஆதலால் என் கரத்திலேயே தரித்திரு, வழுவிப் போக முயற்சிக்காதே.'

மேலும் அவர் இப்படியாக தொடர்ந்தார், 'நீ முரட்டாட்டம் பண்ணி தப்பித்துக் கொள்ள வகை தேடினாலும், நான் உன்னை விடுவதாக இல்லை. நான் மீண்டும் உன்னை எடுத்து பிழியத் துவங்குவேன்' என்று முடித்தார். முடிவில் கர்த்தருடைய கரத்தில் நான் பிழியப்பட விட்டுக் கொடுத் தேன். சகித்துக் கொள்ள, பரலோக கிருபைகள் அருளப்பட ஆண்டவரிடம் வேண்டினேன். *"ஆகையால், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" – 1 பேதுரு 5:6*

மாராவிலிருந்து திரும்பி ஓடல்

பழைய ஏற்பாட்டுப் பாத்திரமான ஆகாருக்கு நேராய் சற்றே நாம் நம் கவனத்தைத் திருப்புவோம். ஆகார் ஓர் எகிப்திய அடிமைப் பெண். சாராளே, அக்காலத்தின் வழக்கப்படி, தன் கணவனான ஆபிராமுக்கு இரண்டாந் தாரமாய் அவளை மனம் முடித்தாள். அடிமைப் பெண்ணான ஆகார் கருவுற்றபோது தன் எஜமானி சாராளை ஏளனமாய் பார்க்க அவளும் ஆபிராமிடத்தில் முறையிடுகிறாள். அப்போது ஆபிராம் சாராளுக்குச் சொல்வதைக் கவனி யுங்கள்.

ஆதியாகமம் 16:6 –"அதற்கு ஆபிராம் சாராளை நோக்கி இதோ, உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராள் அவளைக் கடினமாய் நடத்தின படியால் அவள் அவளை விட்டு ஓடிப் போனாள்."

ஆகார் கருவுற்ற பின் தன் எஜமான் தன்னை வித்தியாசமாய் நடத்தக் கூடும் என்று நினைத்தாளோ என்ன வோ, ஆனால் ஆபிராம் அவளுக்கு சாராளின் இடத்தை ஒருபோதும் கொடுக்க விரும்பவில்லை. ஆபிராம் ஆகாரை ஓர் அடிமைப் பெண்ணாகவே பார்த்தார். எனவேதான் '*உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய்*' என்று ஆபிராம் சாராளுக்குக் கூறுவதைப் பார்க்கிறோம்.

சாராளோ தன் அடிமைப் பெண்ணான ஆகாரை கடினமாக நடத்தினாள். இக்காரியத்தைச் சற்றும் சகிக்காத ஆகார், தான் கர்ப்பிணி என்றும் பாராமல் ஓடிவிட தீர்மானித் தாள். அவள் தன் "மாரா"வை விட்டு ஓடிப்போனாள். அநேக சமயம் நாமும் கூட நம் "மாரா"வை விட்டு ஓட நினைக் கிறோம். ஒரு வேளை கசப்பான உங்கள் திருமண பந்தத்தை முறித்துக்கொள்ள நினைப்பது, கடினமான உங்கள் வேலையை இராஜினாமா செய்துவிட்டு ஓட நினைப்பது, ஊழியப் பாதையில் சோர்வுற்று பின்னோக்கிப் பார்ப்பது, சுருங்கக் கூறின் வெளியேற வகை பார்ப்பது. *இல்லை, இல்லை நீ ஓட நினைக்கக் கூடாது. நீ தொடர்ந்து போராடி சூழ்நிலையை மேற்கொள்.*

வனாந்தரத்திற்கு ஓடிப்போன ஆகாரை கர்த்தருடைய தூதன் சந்திக்கின்ற விதத்தைக் கவனியுங்கள் – "சாராளின் அடிமைப் பெண்ணாகிய ஆகாரே, எங்கேயிருந்து வரு கிறாய்? எங்கே போகிறாய்?" என்று கேட்டார். தூதன் வசனித்த வார்த்தைகளைச் சற்று கவனியுங்கள். அவர் ஆகாரை அடிமைப்பெண் என்றழைப்பதையும் கவனியுங்கள். கர்த்தருடைய தூதன் கூட அவளின் அந்தஸ்தை உயர்த்தவில்லை. நம் வாழ்வில்கூட நாம் சந்திக்கும் அநேக பிரச்சனைகளுக்கும் பெரும்பாலும் வேர் எது தெரியுமா? பெருமையின் எண்ணம்தான். சமூக அந்தஸ்தைக் குறித்த உயர்வெண்ணம், படித்து வாங்கிய பட்டத்தைக் குறித்த உயர்வெண்ணம், கர்த்தர் பயன்படுத்தும் விதத்தைக் குறித்த பெருமை, அருளப்பட்ட திறமை, தாலந்துகளைக் குறித்த தற்பெருமை – இவையெல்லாம் தேவன் நமக்கென்று அனு மதிக்கும் மாராவை விட்டு ஓட வைக்கும்.

"அடங்கியிருத்தல்" *(Submission)* என்பது ஜெபம், தியானம் போன்று ஓர் ஆவிக்குரிய ஒழுங்கு என்கிறார் ரிச்சர்ட் ஃபாஸ்டர் (*Richard Foster - Celebration of Discipline*). இன்று அநேகரின் ஆரவாரம் என்னவென்றால் கடவுளுக்கு அடங்கியிருப்பேன். மனிதனுக்கு அடங்க முடியாது என்பதுதான். வாழ்வின் அநேக சந்தர்பங்களில் கடின

மனிதர்கள் நம்மை ஆள கர்த்தர் அனுமதிக்கிறார். தேவனின் இச்செயலுக்குக் காரணம் என்னவெனில், நாம் அவர் கரத்தில் அடங்கி இருந்து வாழ்வின் விலை மதிக்க முடியா பாடங்களைக் கற்றுக் கொள்ளத்தான். எனவே பொறுமையாய் காத்திருங்கள், புதுபெலனைப் பெறுவீர்கள் (ஏசா 40:31).

ஆகாருக்கு தூதனால் கொடுக்கப்பட்ட கட்டளையை கவனியுங்கள் – *"அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர், 'நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப் போய், அவள் கையின் கீழ் **அடங்கியிரு**' (ஆதி 16:9).*

'அடங்கி இரு' என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். கர்த்தர் நமக்கு மேலாய் நியமித்த யாவருக்கும் நாம் அடங்கியிருக்க வேண்டியதாயிருக்கிறது. இது கர்த்தருடைய கரமாயிருக்கிறது. என் சுதந்திரம் பறிபோயிற்றென்றொ, என் தாலந்துகள் நசுக்கப் படுகிறதென்றோ புலம்பாதிருங்கள். மாறாக கர்த்தரின் கரத்தில் அடங்கியிருங்கள் – ஏற்ற வேளையில் அவர் உங்களை உயர்த்துவார்.

இரண்டு கேள்விகள்

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரிடம் கேட்ட இரண்டு கேள்விகளையும் கவனியுங்கள்.

– ஆகாரே எங்கேயிருந்து வருகிறாய்?
– எங்கே போகிறாய்? (ஆதி 16:8).

சரி ஆகார் எங்கே போய் கொண்டிருந்தாள்? முந்தின வசனத்தில் வேதம் என்ன சொல்கிறது? அவள் சூருக்குச் செல்லும் வழியில் காணப்பட்டாள். சூர் எகிப்தில் உள்ளது. ஒரு வேளை ஆகார் தான் விட்டு வந்த எகிப்திற்குப் போக தீர்மானித்திருந்தாளா? எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! பிரச்சனைகளிலிருந்து அல்லது சிக்கல் மிகுந்த சூழ்நிலையிலிருந்து ஓடிப்போக முயற்சிக்காதிருங்கள். இப்படிப்பட்ட தீர்மானம் உங்களுக்கு இன்னும் சிக்கல் மிகுந்த சூழ்நிலைகளை சந்திக்க வைக்கும்.

ஆகார் எங்கிருந்து வந்தாள். ஆபிரகாமின் கூடாரத்திலிருந்து அவள் ஓடி வந்தாள். ஆபிரகாமின் கூடாரத்தில் ஒருவேளை நெருக்கங்கள் வரலாம், ஆனால் ஆபிரகாமின் தேவன் உண்டே. குறைகள் காணப்படலாம். ஆனால் தேவ பயம் உண்டே. நீங்கள் ஆபிரகாமின் கூடாரத்தை விட்டு ஓடத் தீர்மானித்திருந்தால், உன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் ஓடியிருந்தால் மறுபடியும் அங்கே செல்லுங்கள். வாழ்வில் சிறு சிறு சிக்கல்களை நீங்கள் சந்தித்தாலும் அது தற்காலிகமானது தான். ஆனால் அதைவிட மேலாக ஆபிரகாமின் தேவன் உங்களுக்குண்டு. அவர் அனைத் தையும் நன்மையாக மாற்றுவார். ஒருபோதும் எகிப்துக்குச் செல்ல தீர்மானிக்காதிருங்கள். அது உங்கள் பழைய பாவ வாழ்க்கைக்கு உங்களை இழுத்துச் செல்லும். மாராவின் அனுபவம் கொஞ்ச காலம் மட்டுந்தான். நீங்கள் கற்க வேண்டிய பாடங்களை வேகமாய் கற்றுவிட்டால் உங்களுக்கு அடுத்து வரப்போவது ஏலீம் தான். அங்கு உங்களுக்கு நிறைவான மகிழ்ச்சியும், சமாதானமும் உண்டு. ஆகையால் இவைகளை சந்திக்க தொடர்ந்து முன்னேறி சென்று கொண்டிருங்கள்.

நீரூற்றுகளின் நிலம்

சங்கீதம் 84:5–7 – "உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்."

நம் வாழ்வில் நாம் மாராவின் அனுபவத்தினூடே கடந்து செல்லும் போது, அதை நாம் விசுவாசத்தினால் மேற்கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இங்கே மோசே தேவனை தேடின பொழுது, ஆண்டவர்

அக்கசப்பான நீரில் ஒரு மரக்கிளையைப் போட கட்டளை யிடுகிறார். மோசே அப்படி செய்தவுடன்தானே, அக்கசந்த நீர் மதுரமாவதைக் காண்கிறோம். தேவன் அந்த கசந்த நீரைதான் மதுரமாக்குகிறார். எனவே மாராவிலே நம்மைத் தாழ்த்தி ஆண்டவரை நோக்கி, "**ஆண்டவரே! இந்த மாராவில் நான் என்ன செய்ய வேண்டும்? உம் முடைய சித்தம் என்ன? என்று சொல்லி ஒப்புக்கொடுக்கும் பொழுது தேவன் அந்த சூழ்நிலையை மதுரமாக மாற்றுவார்.** இப்படிப்பட்ட ஜனம்தான் தேவனிலே பெலன் கொண்டு, பலத்தின் மேல் பலன் அடைவார்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாய் மாற்றிக் கொள்வார்கள். நீங்களும் தைரியமாய் உங்களுக்கு முன்பாக இருக்கும் அழுகையின் பள்ளதாக்கில் உருவ நடந்து செல்லுங்கள், தேவன் அனுமதித்த பாதை அது. புது பெலன் உங்களுக்கு உண்டு. சோர்ந்து போகாமல் முன் செல்லுங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்.

"சாயங்காலத்தில் அழுகை தங்கும்,
விடியற்காலத்தில் களிப்புண்டாகும்" – சங்30:5

இதோ! பள்ளத்தாக்கு இன்னும் கொஞ்ச தூரம்தான். இன்னும் சற்று பொறுத்துக் கொண்டால் போதும் "மாரா" கடந்து போய்விடும். "மாரா"–வே உங்கள் வாழ்க்கையாகி விடாது. இது உங்கள் வாழ்வின் ஒரு பகுதி மட்டுந்தான். தேவன் உங்களுக்கு அளிக்க இருக்கும் ஆசீர்வாதங்களும் மேன்மைகளும் இந்த பாடுகளுக்கு நிகரல்லவே! இந்த மாரா வின் அனுபவங்களை நீங்கள் ஒரு நாள் மறந்தே போவீர்கள். யோசேப்புடன் நீங்களும் ஒருநாள் அறிக்கையிடுவீர்கள்.

"என் வருத்தம் யாவையும் ...நான்
மறக்கும்படி தேவன் பண்ணினார்" –ஆதி 41:51

இஸ்மவேல்; எல்ரோகி

ஆதியாகமம் 16:11 – "பின்னும் கர்த்தருடைய தூதனானவர்; நீ கர்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால் அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக."

ஆதியாகமம் 16:13 – "அப்பொழுது அவள், என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு 'நீர் என்னைக் காண்கிற தேவன்' என்று பேரிட்டாள்."

மாரா ஒரு கசப்பான அனுபவம் என்றாலும், நம் தேவன் நம் அங்கலாய்ப்பைக் கேட்கிற தேவனாய் இருக்கிறார். வேதம் சொல்லுகிறது, அவர் நம் பெருமூச்சைக் கேட்கிற தேவன் என்று (யாத் 2:24). மேலும் அவர் கண்கள் நம்மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் நம் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது (1 பேதுரு 3:12). இப்படிப்பட்ட தேவன் இருக்க நாம் ஏன் கலங்க வேண்டும்? நாம் ஏன் திகைக்க வேண்டும்? சில நேரங்களில் நம்மால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஜெபிக்க முடியாவிட்டாலும் தேவன் நம் பெருமூச்சுக்களையும், நம் இதய அங்கலாய்ப்பு களையும் கேட்கிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட சூழ் நிலைகளில் அவர் உங்களுக்கு அருளின வாக்குத்தத் தங்களைப் பற்றிக்கொள்ளுங்கள். மாத்திரமல்ல அவர் நம்மை காண்கிற தேவனாய் இருக்கிறார். நம்முடைய கண்ணீரை யெல்லாம் அவர் அளந்திருக்கிறார் (சங் 56:8). கண்டிப்பாக உங்களுக்கு இரட்டிப்பான நன்மை உண்டாகும். அவர் எல்–ரோயீ மற்றும் இஸ்மவேல். ஆமென்.

"ஓய்ந்திரு கண்ணா ஓய்ந்திரு
கொஞ்சக்காலம் ஓய்ந்திரு;
உழைப்பை விட்டு ஓய்ந்திரு
களைப்பு நீங்க ஓய்ந்திரு
என் அருகிலேயே ஓய்ந்திரு.

ஓய்ந்திரு கண்ணா ஓய்ந்திரு
உன் நலனுக்காக ஓய்ந்திரு
போகும் தூரம் வெகுதூரம்
போக வேண்டும் சீக்கிரம்
இன்னும் கொஞ்சம் காலந்தான்
ஓய்ந்திரு கண்ணா ஓய்ந்திரு.

சூழ்நிலை 3

ஏலிம்

சர்வ வல்லவரின் நிழல்!

யாத்திராகமம் 15:27 – "பின்பு அவர்கள் ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்."

பாலைவனத்தில் துயருற்று அலைந்தவர்களாய் பயணித்த இஸ்ரவேலருக்கு ஏலிம் ஒரு மிகப் பெரிய ஆறுதல். இங்கு இஸ்ரவேலர் புத்துணர்வும், புதுத்தெம்பும் அடைந் திருக்க வேண்டும். தலைவனான மோசேயும் கூட ஓர் அமைதியையும் இளைப்பாறுதலையும் அடைந்திருக்க வேண்டும். அங்கே அவர்கள் கண்டது 12 நீரூற்றுகளும் (ஓவ் வொரு கோத்திரத்திற்கும் ஓவ்வொரு நீரூற்று போலும்!) 70 பேரீச்சமரங்களும். வனாந்தரத்தில் கூட இப்படியொரு வள முள்ள சூழலைத் தேவன் தம் ஜனத்திற்கு வழங்க முடியும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், சூழ்நிலை எப்படியாய் மாறிப் போய்விட்டது. நம் வாழ்விலும் வேதனைகளும் போராட்டங் களும் என்றென்றும் தொடர்கிறது இல்லை. இவை சொற்ப காலத்திற்கு மட்டுந்தான். *"சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற் காலத்தில் களிப்புண்டாகும் (சங் 30:5)."* நம் வாழ்வில் தேவன் அனுமதிக்கும் ஏலீம்களுக்காக கர்த்தரைத்

துதியுங்கள். நம்மைச் சந்திக்க வரும் ஒவ்வொரு ஏலீம் களுக்குப் பின்னே தேவனுக்கு ஒரு பெரிய நோக்கமுண்டு என்பதை மறவாதிருங்கள்.

இளைப்பாறுதல்

சிருஷ்டிப்பின் எல்லா அம்சங்களும் படைக்கப்பட்டு தீர்ந்தபின் தேவன் ஓய்ந்திருந்தார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். தேவனுக்கு இளைப்பாற அவசிய மில்லா திருந்தும் அவர் ஓய்ந்திருந்தார். தேவனோடு நடைபோடும் நம் ஆன்மீக வாழ்வில், நம் ஆன்மாவுக்கு ஓய்வும், மறுமலர்ச்சியும் அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய ஓய்வென்பது ஏதோ வேலைக்கு விடுப்பல்ல. தேவ சமூகத் தில் நம்மைப் பரவசத்திற்கு உட்படுத்திக் கொள்வதாகும். இச்சமயங்களில் நம் எல்லா வேலைகளுக்கும் ஏன் நம் ஊழியத்திற்கும் ஓய்வு அளிக்க வேண்டும். வாரம் ஒரு நாள் தேவனுடைய சமூகத்தில் இளைப்பாறுவது மிகவும் முக்கியமானதாகும். தேவனுடைய பணியில் அயராது உழைப் பவர்களுக்குச் சில சமயங்களில் தேவன் இளைப்பாறு தலைக் கட்டளையிடுகிறார். இவை சில சமயம் சில வருட ங்கள் கூட நீடிக்கலாம். அவ்வாறாக தேவன் எலியாவிற்கு அளித்த இளைப்பாறுதலைக் குறித்து கவனிக்கலாம்.

எலியாவின் வாழ்வில் ஏலிம்

1 இராஜாக்கள் 19:1–5 – "எலியா செய்த எல்லா வற்றையும், அவன் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் பட்டயத் தாலே கொன்று போட்ட செய்தி அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி அவர்களில் ஒவ்வொரு வனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டது போல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதே போனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிக மாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச் சொன்னாள்.

அவனுக்கு அது தெரிந்த போது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச் சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப் போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்தி விட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாக வேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச் செடியின் கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான்."

கர்மேல் பர்வதத்தில் எலியாவிற்கும், 850 பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் நடந்த நேருக்குநேரான ஆவிக்குரிய யுத்தத்தில் எலியா மிகப்பெரிய வெற்றி கண்டார். மட்டுமல்ல அனைத்து பாகாலின் தீர்க்கதரிசிகளையும் பட்டயக் கருக்கினால் கொன்று போட்டார். கர்த்தரின் இவ்வல்லமையான செயலுக்குப் பின் எலியாவிற்கு ஒரு ஓய்வு அவசியமாயிருந்தது. அதே சமயத்தில் யேசபேலின் மூர்க்கமான பேச்சும், பெருமையும் எலியாவைச் சோர்வடையச் செய்தது.

போதும் கர்த்தாவே, போதும்

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் எலியா ஜெபிக்கிறார் – "*போதும் கர்த்தாவே,*" என்று. எது போதும் என்று எலியா ஜெபிக்கிறார். தன் ஜீவனை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் ஜெபிப்பதைக் காண்கிறோம். கர்மேல் பர்வதத்தில் கர்ஜித்த எலியா இவ்வாறாக ஜெபிக்கிறான். மேலும் தான் தன் முன்னோர்களை விட நல்லவர் அல்ல என்றும் சொல்லி புலம்புவதைப் பார்க்கிறோம். அவருடைய கண்ணோட்டத்தில் கர்மேல் பர்வதத்தின் அனுபவம் ஒரு தோல்வியாகவே தோன்றியது. ஜனங்கள் 'கர்த்தரே தெய்வம்' என்று ஆர்ப்பரித்தாலும் யேசபேல் தன்னைத் தாழத்தவில்லையே என்று எண்ணி எலியா சோர்வுற்றிருக்கக் கூடும். எதுவாயிருந்தாலும் எலியா மிகவும்

களைப்புற்றிருந்தார். இப்போது இவரது தேவை உணவும் ஓய்வும் மட்டுந்தான். ஆண்டவர் அதைத் தான் அவருக்கு அருளினார். நம் பரம தகப்பன் தேவையறிந்து நமக்கு தருபவர்.

நம் வாழ்விலும் கூட நாம் தொடர்ச்சியாக தேவனுக் கென்று ஓடிக் கொண்டிருக்க முடியாது. நாம் தொடர்ச்சியாக தேவனுக்கென்று எரிந்து கொண்டிருக்க முடியாது. அப்படிச் செய்வோமானால் நாம் அதிகம் சோர்வுறுவோம். அநேக ஊழியர்கள் தேவனுக்கென்று ஓய்வின்றி ஓடி, முடிவில் சரீர பலவீனம் கண்ட நேரத்தில் பின்வாங்குகிறார்கள். நாம் எப்பொழுதும் தெய்வீக விதிகளை மீறி செயல்படக் கூடாது. விவசாயம் செய்யும் நிலத்திற்குக் கூட ஏழாம் ஆண்டு ஓய்வு அவசியம் என்று தேவன் இஸ்ரவேலர்க்குச் சொன்னார். அப்படியே அவர் வாரம் ஒருமுறை மிருக ஜீவன்கள் கூட ஓய்ந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். (லேவி 25:4). தேவன், மிருக ஜீவன்களைக் குறித்தும் ஏன் நிலங்களைக் குறித்தும் கூட அக்கரையுள்ளவராய் இருக்கிறார். அவர் பார்வையில் அவைகளை விட நாம் அதிக விலையேறப் பெற்றவர்களாயிருக்கிறோம். எனவே கர்த்தரின் சமூகத்தில் நாம் ஓய்வெடுப்பது மிகவும் அவசியமான தொன்றாகும்.

பயணமோ இன்னும் வெகுதூரம்

1 இராஜாக்கள் 19:7 – "கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்தி ருந்து போஜனம் பண்ணு; நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றார்."

கர்த்தருடைய தூதன் எலியாவை உற்சாகப் படுத்து வதைக் கவனியுங்கள். அவர் தேவனுக்காக செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் பல உள்ளன. அவருக்கு ஒரு புத்துணர்ச்சி அவசியமாயிருந்தது. எலியாவிற்கு பரம உணவு வேண்டியதாயிருந்தது. உணவினை உண்டு பலப்பட்டார். இன்னும் சில காரியங்களைத் தேவன்

அவருக்கு வெளிப்படுத்த விரும்பினார். எலியா தன்னோடு தனித்திருக்க வேண்டுமென்பதே தேவனின் விருப்பமா யிருந்தது. அவர் சரீரத்தில் பெலப்பட்டவனாய் தேவ பர்வதமாகிய "ஓரேப்" மட்டும் நாற்பது நாட்கள் நடந்தே பயணப்பட்டார். அவர் சரீரத்தில் பெலனடைந்தவுடனேயே, எதிர்கால ஊழியத்திற்கான ஆவிக்குரிய நடத்துதலை ஆண்டவரிடத்திலிருந்து பெற ஆயத்தமானார். தேவன் அவரோடு செயல்படும் விதத்தை மேற்கொண்டு கவனியுங்கள்.

அமர்ந்த மெல்லிய சத்தம்

1 இராஜாக்கள் 19:11-13 - "அப்பொழுது அவர், நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார்; அப்பொழுது இதோ, கர்த்தர் கடந்து போனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டா யிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப் பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. அதை எலியா கேட்ட போது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப் பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று."

அக்கினியிலும் மழையிலும் கர்த்தரை அனுபவ பூர்வமாய் எலியா கண்டிருந்தார். ஆனால் அமர்ந்த மெல்லிய சத்தத்திலும் கர்த்தர் இருக்கிறார் என்பதையும் எலியா அறிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது. எலியா ஒரு புதிய பாடத்தைத் தன் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெற்றார். கர்த்தர் செயல்படும் விதங்களை நாம் விளங்கிக் கொள்ள முடியாது என்ற நித்திய சத்தியத்தை அறிந்து கொண்டார். எலியா தன்

வாழ்நாளிற்குள்ளாகவே பாகால் வணக்கத்தை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும் என்று ஆண்டவருக்காக வைராக்கியம் கொண்டிருந்தார். ஆனால் தேவனுக்கு வேறே பல திட்டங்கள் இருந்தன. தேவனுடைய திட்டத்தின்படி எலிசா என்ற தீர்க்கனை எலியா அபிஷேகம் செய்ய வேண்டும். இன்னும் "யெகூ" என்ற இராஜாவும் "ஆசகேல்" என்ற இராஜாவும் எழ இருந்தது (I இரா 19:15,16). ஆக எலியா தன் ஏலிமிலிருந்து விடுபட்டப் பணியை நிறைவேற்றப் புறப்பட்டான்.

கர்த்தர் தமது ஊழியரை அதிகம் நேசிக்கிறார். அவரது சரியான தேவை இன்னதென்று அறிந்திருக்கிறார். அவருக்குத் தெரியும் ஆவிக்குரிய நடத்துதலை உணர சரீர புத்துணர்வு அவசியமென்று. அதற்குத்தான் ஏலிம்களை நம் வாழ்வில் அவர் அனுமதிக்கிறார். அது வருகிறபோது கரம் நீட்டி வரவேற்றுக் கொள்ளுங்கள். இது ஆடம்பரமென்றோ, பண விரயமென்றோ எண்ணாதிருங்கள். சில காலமே நாம் இவற்றை அனுபவிக்கப் போகிறோம். நம் வாழ்வில் இவை யெல்லாம் கட்டாயம் வேண்டியவை. குறிப்பாக தேவ ஊழியத்தில் முனைப்புடன் செயல்படும் யாவருக்கும் இது அத்தியாவசியம். கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாயிருங்கள்! புதுப் பொழிவு பெற்று மலர்ந்து மறுரூபமாகுங்கள். ஏனென்றால் நாம் போகவேண்டிய பயணம் வெகுதூரம்.

முறுமுறுக்க வேண்டாம், முகங்கோண வேண்டாம்
முகமுகமாய் சந்திக்க வருகிறார் ஆண்டவர்;
மகவு நம் குரலைக் கேட்க பகலவனாய் வருகிறார்.
குறைகூற வேண்டாம், தடுமாற வேண்டாம்
மன்னா உண்டே முன்னேறிச் செல்வோம்;
மன்னவரின் கிருபைகள் போதுமே, போதுமே."

சூழ்நிலை 4

சீன் வனாந்தரம்

புலம்பலின் மத்தியில்!

யாத்திராகமம் 16:1–3 – "இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமை விட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறு முறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப் போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களி டத்தில் சொன்னார்கள்."

இஸ்ரவேலர்கள் ஏலிமை விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் போக வேண்டிய தூரம் வெகு தூரமாயிருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை அடை வதற்கு முன்பாக சீனாய் மலை போன்ற பல இடங்களைத்

தாண்டிச் செல்ல வேண்டியதாயிருந்தது. வாழ்வுக்கு வசதியாகவும், நல்ல நீர் நிலைகள் இருப்பதாலும் நீண்ட காலம் ஏலிமில் தங்கிவிட முடியாது. நாம் இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஆனால் இஸ்ரவேலரோ ஏலிமைக் கடந்தவுடன் முறுமுறுக்கத் துவங்கினார்கள். ஒருவேளை சுகமாய் தங்கி யிருந்த ஏலிமை விட்டுவிட அவர்களுக்கு மனமில்லையோ? ஆனாலும் அவர்கள் புறப்பட வேண்டியதாயிற்று. வழி யெங்கும் கண்ட அற்புதங்களையும், கடந்த கால அனுபவங் களையும் அதற்குள் மறந்து விட்டிருந்தார்கள். பகலில் அவர்களை நடத்தின மேக ஸ்தம்பத்தையும் அதற்குள் மறந்துவிட்டார்கள். கசந்த மாரா மதுரமானதை அடியோடு மறந்துவிட்டார்கள். இம்மட்டுமாய் நடத்தின தேவன் அவர்களை நடுவில் கைவிடுவாரோ? தேவன் மேல் நம்பிக்கை வைக்க அவர்களால் முடியவில்லை. பரலோக மன்னாவினால் இஸ்ரவேலரை போஷிப்பதற்கு தேவன் ஏற்கனவே திட்டங்கொண்டிருந்தார். ஆனால் ஏன் தேவன் அதை இங்கு வெளிபடுத்தவில்லை? இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் செயல்விளைவுகளைக் (*Reactions*) காண அவர் சித்தங் கொண்டிருந்தார். அப்படியே ஒருவேளை அவர்களுக்கு இறைச்சி சாப்பிட வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், தேவனிடம் அதை கேட்டிருக்கலாமே? இல் லையென்றால் தாழ்மையான முறையில் அவர்களின் கோரிக்கைகளை மோசேயின் முன்பாக வைத்திருக்கலாமே. மாறாக அவர்களோ இங்கு மோசமாய் நடந்து கொண்டார்கள். பொதுவாக, நம் செயல்களை விட நம் செயல் விளைவுகளே நாம் யார் என்பதை பறைசாற்றும். (*Our reactions reveal who we are than our actions*).

இங்கு இஸ்ரவேலர் பயன்படுத்துகிற வார்த்தைகளைச் சற்று கவனியுங்கள்.

"நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையில் உட் கார்ந்து அப்பத்தை திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து

தேசத்திலே கர்த்தரின் கையால் செத்துப்போவோமானால் நாவிளை." – இது அப்பட்டமாய் கர்த்தருக்கு விரோதமாக விமர்சித்துச் சொன்ன வார்த்தைகளாயிருக்கிறது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தனது ஓங்கிய புயத்தால் விடுவித்த தேவன், இவர்களை உணவில்லாமல் மடிய விடுவாரோ? இவர்களை வனாந்தரத்தில் கொல்லு வதற்காகவா இவ்வளவு தூரம் நடத்திவந்திருந்தார்!

நாம் ஆரம்பித்திருப்பது ஒரு நெடுந்தூர ஆவிக்குரிய பயணம். தேவன் நமக்கு அநேக சோதனை சூழல்களை அனுமதித்து நாம் என்ன சொல்கிறோம் என்று காண விழையலாம். எரிச்சலின் உச்சியில் உங்களை வாயின் வார்த்தைகளைக் குறித்து கவனமாயிருங்கள். வாய்தவறி வரும் வார்த்தைகளால் கூட உங்கள் வாழ்வின் எதிர்காலம் தீர்மானிக்கப்படலாம். "*செத்துப்போனால் நலம்*" என்று கூறின இஸ்ரவேலர் மெய்யாகவே அவ்வனாந்தரத்தில் கர்த்தரின் கரத்தால் மடிந்தார்கள். அவர்கள் வாயின் வார்த்தை யினாலேயே வாழ்விழந்தார்கள். கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது – *"ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்தில் இருக்கிறது." –நீதி 18:21.*

நம் முறுமுறுப்பைக் கேட்கிற தேவன்

கீழ்காணும் வசனங்களைக் கவனியுங்கள்

யாத் 16:7 – "கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறு முறுப்புகளை அவர் கேட்டார்"

யாத் 16:8 – "உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்..."

யாத் 16:9 – "அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார்"

யாத் 16:12 – "கர்த்தர் மோசேயை நோக்கி, 'இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்..."

மேற்கண்ட வசனங்களில் நாம் காண்பதென்ன வெனில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் எல்லா

முறுமுறுப்புகளையும் கேட்டார். சொல்லப்போனால் ஒவ்வொரு வார்த்தையும் குறிப்பெடுக்கப்பட்டது. நாமும் கூட கவனமின்றி பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கணக்கொப்புவிக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. (மத் 12:36). அப்படியிருக்க, நாம் கர்த்தருக்கு விரோதமாக, அவருடைய கிருபைகளை அலட்சியப்படுத்தி பேசுவோமானால், அது எவ்வளவு பெரிய துணிகரம் என்பதை எண்ணிப்பாருங்கள். கர்த்தர் நம் வழிகளில் அனுமதிக்கும் சூழ்நிலைகளைக் குறித்து ஒருபோதும் முறுமுறுக்காதிருங்கள். நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய சுத்த கிருபை என்பதை ஒரு நாளும் மறந்துபோக வேண்டாம். எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்கிற மனம் முறுமுறுக்காது. முறுமுறுக்கும் மனம் நன்றி சொல்லாது. "*ஸ்தோத்திர (நன்றி) பலியிடுகிறவன் என்னை மகிமைபடுத்துகிறான்*" *(சங் 50:23)* என்று தேவன் சொல்கிறார். கவனமற்ற வார்த்தைகள் ஜனங்களின் வாயிலிருந்து கசிந்து விடவில்லை. உள்ளான மனிதனின் பிரத்தியட்சமான வெளித்தோற்றந்தான் அவ்வார்த்தைகள் (லூக் 6:45). எனவே, நம்மைத் தாழ்த்தி கர்த்தரின் கரத்திலே ஒப்புக்கொடுப்போம். எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுவோம். தேவன் நம்மை நடத்துவார்.

பரலோக மன்னா

யாத்திராகமம் 16:15 – "இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம் .. என்றான்."

கர்த்தர் கிருபையாய் தாம் வாக்குப் பண்ணினபடியே பரலோக அப்பத்தை இஸ்ரவேலருக்கு வழங்கினார். பரலோக மன்னாவை ருசிப்பதென்பது என்ன ஒரு பாக்கியம்! ஆம், இது வனாந்தரமாயிற்றே, இங்கு நீருக்கும் நிழலுக்கும்

பஞ்சம்தான். பாதையும் வினோதமாய்தான் தோன்றும். ஆனால் கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு அருளும் கிருபைகளை நினைத்துப் பாருங்களேன். பகலில் நடத்த மேக ஸ்தம்பம், இரவில் வழி நடத்த அக்கினி ஸ்தம்பம்! பரலோக உணவான மன்னா, என்று இன்னும் எத்தனை ஆச்சரியங்கள். தேவன் அவர்களுக்குக் காடைகளையும் உண்ணக்கொடுத்தார். ஆனால் அது பரலோகத்திலிருந்து அருளப்படவில்லை. காரணம் அது அவர்களின் வயிற்றுச் சுகத்திற்காக கொடுக்கப்பட்டது. மன்னாவோ கர்த்தரின் ஆதீனத்தில் வைத்திருந்து கிருபையினால் தன் ஜனங்களுகக்கு அருளிச் செய்தார். எலியா கூட இந்தப் பரலோக உணவை கர்மேல் பர்வதத்தில் வெற்றி கண்டபின், சோர்வடைந்திருந்த நேரத்தில் ருசி பார்த்திருந்தார். தேவன் இன்றும் பரலோக மன்னாவை தினந்தினம் தருகிறார். நம்மைத் தாங்கவும், ஊக்கப்படுத்தவும், எச்சரிக்கவும் மற்றும் நடத்தவும் அவர் வார்த்தை நமக்கு போதுமானதாக இருக்கிறது. வனாந்தரத்தினூடே கடந்து செல்லும் போது கர்த்தர் நமக்கு வாக்குப் பண்ணின ஒவ்வொரு வாக்குத்தத்தங்களையும் எண்ணினவர்களாய் முன் செல்லக்கடவோம். வனாந்தரத்தின் கடின சூழ்நிலைகளைக் குறித்து ஒருபோதும் கவலைப்படாமல் பயணியுங்கள். தாங்கும் பெலனை தேவன் உங்களுக்குத் தந்தருளுவார். வாழ்வில் நீங்கள் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளையும் மேற்கொள்ள போதுமான கிருபைகளை உங்களுக்குத் தந்திடுவார். நாம் அவரைத் தேடுவதில் மாத்திரம் ஜாக்கிரதையுள்ளவர்களாய்க் காணப்படுவோம். கவனமாய் அவரிடமிருந்து கேட்போம்; கேட்டபடியே கீழ்ப்படிவோம்; ஜெயம் நமதே! அல்லேலூயா!

நன்மை மறவா இருதயம்

யாத்திராகமம் 16:32 – "அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பத்தை உங்கள்

சந்ததியார் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காக அதைக் காப்பதற்கு, அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்கவேண்டும் என்றான்."

தேவன் நம்மேல் பொழிந்தருளிய கிருபைகளை ஒருபோதும் மறக்கிறதில்லை. அதை நாமும் நினைவு கூற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நமக்கு நன்றி யறிதலுள்ள இருதயம் அவசியமென்று அவர் விரும்புகிறார். நாமும் நாம் கடந்த காலங்களில் பெற்ற கிருபைகளை மறவாதிருப்போமாக. நாம் எப்பொழுதும் தேவனுக்கு நன்றி செலுத்தக்கடவோம். நம் வாழ்வில் தேவன் தந்த ஈவுகளை நமது அடுத்த தலைமுறையினரும் காண வேண்டும் என்று விரும்புகிறார். எனவேதான் அந்தப் பரலோக அப்பத்தை எடுத்து வைக்கவேண்டும் என்று கூறுகிறார்.

ஆகையால் இப்படிப்பட்ட சமயங்களில் விழுந்து விடாதீர்கள். அவர் சரியான வேளையில் கடந்து வருவார். நாம் இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்கிறோம் என்று அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நமது தேவைகள் சில சில வேளைகளில் சந்திக்கப்படாமல் இருக்கும்போது சோர் ந்துபோகாமல் இருங்கள். சரியான நேரத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் கடந்து வரும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கவனியுங்கள்:

"நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" 2 கொரி 5:6 – நாம் கண்டு விசுவாசியாமல், காணாது விசுவாசித்துச் செல்கிறோம். நாம் சூழ்நிலைகளை மையமாக வைத்துப் பேசவேண்டாம். தேவன் நமக்கு ஈந்த வாக்குத்தத்தங்களின் மொழியில் பேசுவோம். அவர் பொய்யுரையாத தேவனாயிருக்கிறார். **இல்லாதவைகளை இருக்கிறவைகளாய் அழைக்கிற தேவன்! விசுவாசக் கண்களோடு முன்னேறிச் செல்வோம்! நித்திய கண்ணோட்டத்தோடு சூழ்நிலைகளை எதிர்கொள்வோம்! தேவன் நம்மை ஜெயமாய் நடத்துவார்!**

வாக்குத்தத்தங்களின் தேவன்

யாத்திராகமம் 16:3– "இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்கள்."

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எண்ணற்ற வாக்குகளை அருளியிருந்தார். பாலும் தேனும் ஓடுகிற அந்த கனவு தேசத்தைத் தருவேன் என்று வாக்களித்திருந்தார். மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலும் தேவனின் வாக்குத் தத்தங்களை அவர்கள் நினைவு கூர்ந்திருக்கலாமே. ஆனால் அவர்கள் இந்தச் சோதனையில் தோல்வியுற்றனர். அவர்களின் தோல்வி நமக்கு திருஷ்டாந்தங்களா யிருக்கின்றன. **நாம் கடினமான சூழ்நிலைகளைச் சந்திக்கும் போதெல்லாம், கர்த்தர் நம்மை கிருபையாய் நடத்தின பாதைகளை நினைவுகூறுவோம், நன்றி கூறுவோம்.** உங்களுடைய எதிர்கால வாழ்க்கையைக் குறித்த வாக்குத்தத் தங்களை என்றும் மறவாதிருங்கள். ஒருவேளை தேவன் உங்களுக்களித்த வாக்குத்தத்தங்கள் இப்போது நிறை வேறாமல் இருக்கலாம். தேவன் அவைகளை ஏற்ற காலத்தில் நிறைவேற்றுவார். வாக்குத்தத்தங்களை உறுதியாய் பற்றிக் கொள்ளுங்கள். அற்புதங்கள் ஒருநாள் அரங்கேறும். அவர் பரலோக மன்னாவினால் நம்மைப் போஷிப்பவர். நம் தேவைகளைச் சந்திப்பவர் – அவர் நாமம் யெகோவாயீரே. அல்லேலூயா!

ஆபிரகாமின் வாக்குத்தத்த சோதனை

ஆதியாகமம் 22:1–3 – "இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர், உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்

மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

தேவன் ஆபிரகாமைச் சோதித்தார். தேவன் ஆபிரகாமின் சந்ததியார் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் இருப்பார்கள் என்றுரைத்திருந்தார். அதன்படியே ஒரு குமாரனையும் கொடுத்தார். அந்த குமாரனாகிய ஈசாக்கு வளர்ந்து வரும் போது, தேவன் இப்போது அந்த குமாரனைத் தகனபலியாக கேட்கிறார். தேவன் கேட்டவுடன்தானே அந்த கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டான். எவ்வித முறுமுறுப்பில்லை, எவ்வித எதிர்ப்புமில்லை, எவ்வித கேள்வியுமில்லை. நாம் அவரில் காண்பது ஒன்றே ஒன்று தான். அது கீழ்ப்படிதல். ஆபிரகாம் தனக்கு நேரிட்ட சோதனையில் வெற்றி கண்டார்.

ஆபிரகாம் ஒன்றை ஆழமாய் அறிந்திருந்தான். ஒரு வேளை தன் ஒரே பேரான மகன் இறந்துபோனாலும், தேவன் தம்முடைய வாக்கின்படி அவனை உயிரோடு எழுப்ப வல்லவர் என்று விசுவாசித்தார். மேலும் ஆபிரகாம் வாழ்ந்த காலத்தில் தேவனுடைய முழு குணாதிசயங்களைக் குறித்த தான வெளிப்பாடு இல்லாதிருந்தது. வேதாகமும் இல்லை. எனவே அக்கால புறஜாதியாரின் வழக்கப்படி தேவன் நரபலி யைத்தான் கேட்கிறார் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். என்றாலும் வாக்குத்தத்தங்களின் தேவனை உறுதியாய் நம்பினார். ஆபிரகாம் பரீட்சையில் தேறினார். நாமும் கூட நம் ஆன்மீக பயணத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் மேல் உறுதியாய் நின்று விட வேண்டும். எந்த சூழ்நிலை யானாலும், எந்த மேடானாலும், எந்தக் காடானாலும் தேவன் நம்மை ஜெயமாய் நடத்துவார்.

கர்த்தரே நம் பரிகாரி

தேவனின் கட்டளையின்படி தன் மகனை பலியிட ஆபிரகாம் மோரியா மலைக்குப் போய்க்கொண்டிருக்கும் போது மகன் ஈசாக்கு தகப்பனிடம் இப்படியாக வினவு கிறான்:

ஆதியாகமம் 22:7, 8 – "அப்பொழுது ஈசாக்கு தன் தகப் பனாகிய ஆபிரகாமை நோக்கி, என் தகப்பனே; என்றான் அவன்: அதற்கு, 'என் மகனே, இதோ, இருக்கிறேன்' என்றான், அப்பொழுது அவன், 'இதோ நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?' என்றான். அதற்கு ஆபிரகாம்: 'என் மகனே, தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்' என்றான்.

தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்ற மகனின் கேள்விக்கு, எவ்வித பதட்டமுமில்லாமல், தேவன் பார்த்துக் கொள்வார் என்று தந்தை பதிலளிப்பதைப் பார்க்கிறோம். 'தேவன் பார்த்துக் கொள்வார்' என்பதற்கு எபிரெய பதம் 'யேகோவா ஈரே' என்பதாகும். ஆம் பிரியமானவர்களே, தேவன் அனைத்தையும் பார்த்துக் கொள்வார். ஒருவேளை நம் ஆவிக்குரிய பாதையில் தேவன் நமக்கு பரீட்சைகளை அனுமதிக்கலாம். ஆனால் தேவன் நமக்களிக்கும் பரீட்சைகள் மிகவும் சுலபமானவைகள். நம் பலத்திற்கு மீறி தேவன் நம்மைச் சோதிப்பதில்லை (1 கொரி 10:13). இது எப்படியெனில் பரீட்சைக்கு வினாத்தாளைக் கொடுத்து கூடவே விடைகளையும் அளிப்பது போலாகும். நம் வேலை யென்னவெனில் பரீட்சை எழுதவேண்டும். அவ்வளவுதான். 'யேகோவா ஈரே' என்றும் நம்முடன் இருக்கிறார். கவலைப்படாதிருங்கள். நாம் சந்தோஷத்தோடும், நன்றிப் பாடலுடனும் முன்னேறிச் செல்வோம். அல்லேலூயா!

"இனிய வாக்குகளைப் பற்றிக்கொள்ள
இன்னொரு சவால், இன்னொரு பரீட்சை;
இன்பரது சமுகத்திற்கு ஓட
இன்னொரு தருணம், இன்னொரு சோதனை
நமது ஒரே நம்பிக்கை அவரது திருமுகமே,
நமது ஒரே அடைக்கலம் அவரது சிங்காசனமே;
ஒரே வாழ்க்கை, ஒரே அர்ப்பணிப்பு
ஒரே தேவன், ஒரே வழி!"

சூழ்நிலை 5

ரெவிதீம்

தேவனை சோதித்தல்!

யாத்திராகமம் 17 : 1 – "பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம் பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது."

வனாந்தர மார்க்கமாய் நடந்த இஸ்ரவேலர் மற்றுமொரு சவாலை சந்திக்க நேரிட்டது. இப்பிரச்சனையும் கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சனைக்கு ஒத்திருந்தது. இது இஸ்ரவேல் ஜனங்களுக்கு நேரிட்ட இரண்டாம் சோதனை எனலாம். ஆனால் நடந்தது என்னவெனில், இம்முறையும் அவர்கள் தோல்வியடைந்தனர். மாராவின் நீரை மதுரமாக்கியவர், பரலோக மன்னாவையும், காடைகளையும் அருளினவர் மறுபடியும் நீரைக் கொடுக்காதிருப்பாரோ ?

ஏன் ஆண்டவர் நம் வாழ்வில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான சூழ்நிலைகளை அனுமதிக்கிறார்? ஒருவேளை நாம் கற்ற ஆவிக்குரிய படிப்பினைகளை நன்றாக கற்றிருக்கிறோமா என்று அறியவா? அப்படி எடுத்துக் கொண்டால் இஸ்ரவேலர்கள் இப்பாடத்தை இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்று கூறலாம். கடந்த கால அனுபவத்திலிருந்து

அவர்கள் ஆவிக்குரிய படிப்பினைகளைக் கற்றிருக்க வில்லை.

தேவன் நம்மை அனுபவங்களிலிருந்து பாடங்கற்க விரும்புகிறார். இன்னும் பத்தாம் பசலிகளாய் இருக்க வேண்டாம். ஆவிக்குரிய வாழ்வில் ஒரு பாடத்தைக் கற்க காலந்தாழ்த்துவோமானால், கடந்த காலத்தில் அறியத் தவறிய பாடங்களை "அரியர்களாய்" எழுதிக் கொண்டே தானிருக்க வேண்டும். உதாரணத்திற்கு, நீங்கள் பொறுமை யின் பாடத்தைக் கற்க வேண்டுமென்று தேவன் விரும்பும் போது உங்களால் சகித்துக் கொள்ள முடியாத மனிதர் களையும், சூழ்நிலைகளையும் உங்கள் வாழ்வில் தேவன் அனுமதிப்பார். உங்கள் மனக்கண்களை அகலத் திறந்து கர்த்தர் உங்கள் வாழ்வில் செயல்படும் விதத்தைக் கவனி யுங்கள். தேவனின் நோக்கங்களைப் புரிந்துகொண்டு, அவ ரோடு ஒத்துழையுங்கள். தேவன் உங்களை மேன்மேலும் பலப்படுத்துவாராக, பயன்படுத்துவாராக.

மாசா என்ற மேரிபா

யாத்திராகமம் 17:7 – "இஸ்ரவேல் புத்திரர் வாதாடின தினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று கர்த்தரைப் பரீட்சைப் பார்த்ததனி மித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்."

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பாடங்களை அறிந்து கொள்வதை விட்டுவிட்டு, அவர்கள் கெட்ட நிலையிலிருந்து இன்னும் சீர் கெட்ட நிலைக்குப் போனார்கள். தேவன் ஜனங்களை சோதித்தார் என்று கடந்த சூழ்நிலைகளில் பார்த்தோம். ஆனால் இங்கே இஸ்ரவேல் ஜனம் கர்த்தரைப் பரீட்சை பார்த்தார்கள். என்ன பரிதாபம். நெருக்கமான சூழ்நிலையில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதை விட்டுவிட்டு, தேவன் தங்கள் மத்தியில் இருக்கிறாரா? இல்லையா? என்று கர்த்தரின் பிரசன்னத்

தைப் பரிசோதித்தனர். நாம் சில சமயங்களில் சொல்லொண்ணா துயரங்களிலும், நோவுகளிலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறாரா ? இல்லையா ? என்று சந்தேகிக் கிறோம். இப்படிபட்ட சூழ்நிலையைக் குறித்து இங்கு பார்க்கவில்லை. இது "*மாசா என்ற மேரிபா.*" இது தேவனை சோதித்தலும் சண்டையிடுகிறதுமாயிருக்கிறது. இது ஏனோ நொந்த இருதயத்திலிருந்து வரவில்லை, மாறாக தீய இருதயத்திலிருந்து வந்ததாயிருக்கிறது. இது ஒரு சரியான மனோபாவனையல்ல. ஆம்! இங்கு இஸ்ரவேலர்கள், மோசே யோடும், தேவனோடும் சண்டையிட்டார்கள். இங்கு தேவன் அவர்களின் தாகத்தை எப்படித் தீர்த்தார் என்று கவனி யுங்கள்.

யாத்திராகமம் 17:6 – "அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன் மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்."

கர்த்தர் மோசேயிடம் சொல்வதைக் கவனியுங்கள். தாம் கன்மலையின்மேல் நிற்பதாகவும் கன்மலையை அடிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இது கர்த்தரை அடிப்பதற்குச் சமமல்லவா ? எப்படியோ பிரச்சனை முற்றுப் பெற்றது. கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டது. ஆனால் இஸ்ர வேலர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியிருந்தனர்.

நாமும் கூட எத்தனை முறை நம்முடைய அவநம்பிக் கையிலும், முரட்டாட்டத்திலும் பரிசுத்த ஆவியானவரை நோகப் பண்ணியிருப்போம். சில சமயங்களில் நாம் தேவனு க்கு நோவுண்டாக்கினதை உணருவது கூட இல்லையே (ஏசாயா 63:10).

நம்முடைய முரட்டாட்டத்தினால் கர்த்தருடைய முகத்தில் அறைகிறோம்; நம் அவநம்பிக்கையினால் அவரை நோகப் பண்ணுகிறோம்; நம் முறுமுறுப்பினால் அவரை

காயப்படுத்துகிறோம். நம் அக்கிரமங்களுக்காக அவர் காயப்பட்டார். அவர் சிலுவைக்குச் சென்றது அதற்காகத் தான். ஏன் நாம் அவரை திரும்ப திரும்ப சிலுவையில் அறைய வேண்டும்? ஒருபோதும் நம் வாழ்வில் தேவனை சோதிக்க வேண்டாம். அவருடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிக்காதீர்கள். பாவத்துடன் விளையாடாதிருங்கள். தேவன் ஒருகாரியத்தை தவறென்று உணர்த்தும்போது மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு செயல்படுங்கள். மாசாவும், மேரிபாவும் நம் வாழ்க்கையில் வேண்டாமே.

தேவன் நமது வெற்றிக் கொடி

ரெவிதீமிலே நடந்த மற்றொரு சம்பவத்தைத் தியானிப் போம்.

யாத்திராகமம் 17:8 – "அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்."

இங்கே ஒரு யுத்தத்தை இஸ்ரவேலர் எதிர்கொண்டனர். எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து அவர்கள் யுத்தக் களத்தை கண்டிருக்கவில்லை. ஏனெனில் போரிட அங்கே எகிப்தியர் இல்லை. ஆனால் இங்கோ இஸ்ரவேலருக்கு புதிய எதிரிகள். இதுவே இஸ்ரவேலர் கண்ட முதல் யுத்தம். இங்கே இளம் யோசுவா இஸ்ரவேலரைப் போருக்கு வழி நடத்திச் செல்வதைக் காண்கிறோம். வரவிருக்கும் யுத்தங் களுக்காக (யோசுவாவின் காலத்தில்) தேவன், இஸ்ர வேலரைப் பயிற்றுவிப்பதற்காக இப்படிப்பட்ட ஒரு சூழலை அனுமதித்திருந்தார்.

உயர்த்தப்பட்ட கரங்கள்

யாத்திராகமம் 17:11 – "மோசே தன் கையை ஏறெடுத் திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான்."

இஸ்ரவேலர்களும், குறிப்பாக யோசுவாவும் யுத்த நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. இஸ்ரவேலருக்கு இங்கே ரதங்களும், குதிரைகளுமில்லை. அவர்கள் முற்றும் முழுவதும் கர்த்தரையே ஆதாரமாக்கிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. மற்ற தேசத்தோடும் ஒப்பிட்டு பார்க்கக் கூடாதிருந்தார்கள். யுத்த பலன் என்று சொன்னால் அது குதிரைகளையும், ரதங்களையும் வைத்தே கணிக்கும் காலத்தில் வாழ்ந்தனர். ஆனால் அவர்களோ நிகரற்ற ஜனமாயிருந்தனர். தேவன் அவர்களை தமது ஜன மாகத் தெரிந்தெடுத்திருந்தார். தேவன் தாமே அவர்களுக்காக யுத்தம் செய்வார். பரம சிங்காசனத்திற்கு நேராக உயர்த்தப் பட்ட கரம் ஜெயத்தைக் கொண்டு வரும். ஆம் பரத்திற்கு நேராய் உயர்த்தப்பட்ட கரத்தின் பலனால் தேவன் மிகப்பெரிய வெற்றிகளை நமக்குத் தந்தருளுவார். நாமனைவரும் யுத்தக் களத்திலிருக்கிறோம். அமலேக்கியர் பலரோக இராஜ்ஜியத் திற்கு விரோதமாய்ப் போர் செய்யும் பிசாசின் சேனைக்கு அடையாளமாயிருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலரை பின்னாலிருந்து தாக்கி பலவீனர்களையும், சோர்வுற்றவர் களையும் தாக்க முயற்சித்தார்கள்(உபா 25:17,18).

நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். களைத்தவர் மேலும், சோர்ந்து போனவர்களின் மேலும் சாத்தான் தன் தாக்குதலை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறான். பாவம் நூறத்தனையாய் பெருகியிருக்கும் இக் காலத்தில்தானே கர்த்தருடைய ஊழியத்திற்கும் சந்தர்பங்கள் பெருகியிருக்கிறது. நீங்கள் மோசேயைப் போல கரமுயர்த்தி நிற்கும் அழைப்பைப் பெற்றிருக்கலாம் அல்லது ஆரோ னையும், ஊரையும் போல உதவி செய்யும் அழைப்பைப் பெற்றிருக்கலாம். கர்த்தர் உங்களை யோசுவாவைப்போல யுத்த வீரனாகக் கூட அழைத்திருக்கலாம். உங்கள் அழைப்பு எப்படிப் பட்டதாயினும், நாம் அனைவரும் யுத்த களத்தில் இருக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம். இந்த யுத்த களத்தில் (ஆவிக்குரிய ஜீவியத்தில்) கவனக்குறைவுடன் இருப்போமானால், பரிதாபமாய் தோல்வியுற்ற சவுல்

ராஜாவைப் போலாவோம். இதே அமலேக்கியரிடம் சவுல் கவனக்குறைவாய் நடந்ததின் விளைவால் தன் அபிஷேகத்தை இழந்து, அழைப்பைப் பறிகொடுத்து, முடிவில் தன் வாழ்வுமற்று நாசமானான் (1 சாமு 15:23). மனித அத்தியாயத்தின் கடைசி பக்கத்திற்கு நாம் வந்துவிட்டோம். எந்த ஊழியத்திற்கு தேவன் உங்களை அழைத்திருக்கிறாரோ, அதிலே முனைப்புடன் செயல்படுங்கள், முன்னேறுங்கள். ஜெப ஊழியமென்றால் ஊக்கமாய் ஜெபியுங்கள், கொடுப்பதென்றால் ஏராளமாய்க் கொடுத்து உதவுங்கள், யுத்தகளத்தில் உங்கள் பணியென்றால் தைரியமாய் முன்னேறுங்கள்.

எபிரெயர் 11:33 – "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்."

கிறிஸ்துவுக்கென்று அருஞ்செயல் புரிந்த விசுவாச வீரர்களின் பட்டியல் ஒவ்வொரு தலைமுறையிலும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. அவர்கள் எல்லாம் அசாதாரண மனிதர்கள் அல்ல. நமக்கிருக்கும் அதே போராட்டங்களும், பெலவீனங்களும் அவர்களுக்குமிருந்தது. ஆனால் அவர்களோ தேவனுடைய வார்த்தையைப் பிடித்துக் கொண்டவர்களாய் முன்னேறி தேவ வாக்குத்தத்தங்களைத் தமதாக்கிக் கொண்டனர். ஒவ்வொரு தலைமுறையிலும் இப்படிப்பட்ட ஆண்களும், பெண்களும் தேவனுக்கென்று அவசியமாயிருக்கிறார்கள். நீங்கள் இந்தக் குறிப்பிட்ட சந்ததியில் வாழ்கிறீர்கள்; இத்தலைமுறையினருக்கு நீங்கள் கட்டாயம் தேவை. உங்களால்தான் உங்கள் தலைமுறையினருடைய வேதனைகளையும், நோவுகளையும் புரிந்து கொள்ள முடியும். கோடி மக்கள் கிறிஸ்துவை அறியாமல் வாழ்ந்து மடிகின்றனர். வாழும் இன்னும் அநேகருக்குப் பல்வேறு தேவைகளும், அவசியங்களும் உண்டு. வளர்ந்து வரும் விஞ்ஞானமும், அறிவியல் நுட்பங்களும் மனித வாழ்வை எளிதாக்கவில்லை மாறாக இன்னும் சிக்கல்களை உண்டு பண்ணியிருக்கின்றன. வாய்ப்புகளை சரியாய் பயன்படுத்துங்கள்.

சாக்குபோக்கிற்கு இடங்கொடாதீர்கள். எதைச் செய்ய முடியுமோ அதைச் சிறப்பாகச் செய்யுங்கள். தேவன் உங்களோடிருக்கிறார். தேவன் உங்கள் வெற்றிக் கொடியாயிருக்கிறார். யேகோவா நிசி என்பது அவர் நாமம்.

"மலைக்க வைக்கும் பரிசுத்தப் பர்வதம்,
திகைக்கச் செய்யும் இடி மின்னல்கள்,
பதைக்க வைக்கும் பயங்கரக் காட்சி,
புகையாய்த் திரளும் கார்மேகங்கள்,
புவனம் நிறைக்கும் மாட்சிமை,
புனிதரின் பிரசன்னம் இதுவே!

ஓ, அருமை ஆண்டவா, என் தேவனே.
தாராய் உம் முகம் தேடும் வாஞ்சை;
வாராய் உம் மகிமையோடு;
சேராய் எனை உம் மார்போடு;
நேராய் நான் போகும் பாதை காட்டாய்;
அருளாய் நின் கிருபை, பெலன்,
பரமனே, நீர் என் தந்தையன்றோ!"

சூழ்நிலை 6

ஓரேப்

மறுரூப மலை!

யாத்திராகமம் 19:2 – "அவர்கள் ரெவிதீமிலிருந்து பிர யாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்து, அந்த வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள்.

இஸ்ரவேலர் இங்கே மலைக்கு எதிராய் பாளயமிறங்கினார்கள். இந்த மலைப் பகுதியைத் தான் வேதம் ஓரேப் என்று கூறுகிறது. இந்த ஓரேப் மலை மோசேக்கு மிக முக்கியமான இடமாகும். இங்கேதான், கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே தரிசனமானார். தன் வாழ்க்கையில் தேவன் கொண்டிருந்த நோக்கத்தை மோசே பெற்றுக் கொண்ட இடம். தேவன் தம்மை ஓரேபிலே வெளிப்படுத்தின விதத்தை நாம் சற்று தியானிப்போம்.

தேவ அழைப்பு

யாத்திராகமம் 3:1,2 – "மோசே மீதியான் தேசத்து ஆசா ரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின் புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான்.

அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்."

நாற்பது வருட காலம் இராஜமரியாதையுடனும், இன்னும் நாற்பது வருட காலம் வனாந்தரத்திலே மோசே தன் மாமனின் ஆடுகளை மேய்த்தும் தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார். தேவனை அந்த முட்செடியின் நடுவில் இருந்து அவருடன் பேசுவார் என்று எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. தேவன் அவரோடு பேசினார். அவன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த வேண்டும் என்று அழைப்பும் விடுத்தார். அன்றிலிருந்து அவர் வாழ்க்கை முற்றுலும் மாறியது. அந்த நாளின் அனுபவம் அவருடைய ஆவிக்குரிய உட்பரிமாணத்தை மாற்றியமைத்தது. இவ்வனுபவம் அவர் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுத்தது.

நம் வாழ்வில் நமக்குங்கூட ஓரேப்கள் உண்டு. இங்குதான் நம் வாழ்வின் நோக்கத்தையும், அழைப்பையும் பெற்றுக்கொள்கிறோம். இப்படிப்பட்ட அனுபவங்கள் நம் வாழ்வில் இன்றியமையாதவைகளாய் இருக்கிறது. ஆனால் மோசேயை தேவன் இந்த ஓரேப் பர்வதத்திற்கு மறுபடியும் அழைத்து வருவதைப் பார்க்கிறோம். நாமும் இந்த ஓரேப் பர்வதத்தின் அனுபவத்திற்கு அடிக்கடி வருவது அவசியமாயிருக்கிறது.

இந்த வசனத்தைக் கவனியுங்கள்

யாத்திராகமம் 3:12 –"அதற்கு அவர் நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்."

தேவன் இங்கு மோசேயிடம், அவன் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து இந்த மலைக்கு கொண்டு வருவார்

என்று கூறுகிறதை கவனிப்போம். நாமும் இந்த ஓரேபிற்கு அடிக்கடி வருவது அவசியமாயிருக்கிறது.

ஓரேபிலே தேவன் மோசேயிடம் ஒரு பெரிய ஊழியத்தைக் கொடுத்தார். ஆனால் அவர் மறுபடியும் அங்கே வந்து மேலும் வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வது அவசியமானது. நம்முடைய வாழ்விலும் நாம் இந்த ஓரேபிற்கு வந்து (மறுபடியும்) நமது அழைப்பைப் புதுப்பித்துக் கொள்வது அவசியமானதொன்று. எத்தனையோ பேர் தமது ஆவிக்குரிய ஓட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் பாதியில் திசைமாறி போகிறார்கள். திசைமாறின ஊழியர்கள் எத்தனை; திசைமாறின ஊழியங்கள் எத்தனை. எனவே நமது அழைப்பில் உறுதியாய் நிற்க, புதிய சவால்களைச் சந்திக்க, புதிய கிருபைகளைப் பெற்றுக்கொள்ள, புதிய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள இந்த ஓரேபின் அனுபவம் அவசியமானதாகும்.

தேவ வல்லமை

ஓரேபிலே தேவ அழைப்பை நாம் பெற்றுக் கொள்வதோடு, அவருடைய வல்லமையையும், மகிமையையும் ருசிக்க முடியும்.

கர்த்தர் இஸ்ரவேலருக்காக மிகப் பெரிய திட்டங்களை வைத்திருந்தார். அவர் தமது வல்லமையையும் மகத்துவத்தையும் தம் ஜனமான இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்த சித்தமுள்ளவராயிருந்தார். இந்த ஓரேபிலே தான் இஸ்ரவேலருக்கென்று அவர் பத்து கற்பனைகளையும், நியாயப் பிரமாணங்களையும் அளித்தார்.

யாத்திராகமம் 19:16 – "மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காள சத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள்."

அங்கே இடி முழக்கங்கள் உண்டாயிற்று; மின்னல்கள் உண்டாயின; மகா பலத்த எக்காள சத்தமும் உண்டாயின. இவையெல்லாவற்றையும் கண்ட இஸ்ரவேலர் பயந்து பிரம்மித்திருக்க வேண்டும். முட்செடியில் தன்னை வெளிப்படுத்தின தேவன் தற்போது மின்னல்களிலும், இடிமுழக்கங்களிலும் தன்னை வெளிப்படுத்த சித்தங் கொண்டார். தம்முடைய மகத்துவத்தையும், பரிசுத்தத்தையும் இஸ்ரவேலருக்கு தேவன் வெளிப்படுத்தினார்.

கீழ்கண்ட வசனங்களைக் கவனிக்கவும்

யாத்திராகமம் 19:21.22 – "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்து போகாதபடிக்கும், நீ இறங்கிப் போய் அவர்களை உறுதியாக எச்சரி" என்றார்.

தேவன் எல்லைகளை நியமிப்பதை இங்கே காண் கிறோம். வேதம் தேவனை, "சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்யும் தேவன்" என்று அழைக்கிறது. ஆம் தேவனை நாம் நெருங்க இயலாத காலமது. பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் ஒரு பிரிவு காணப்பட்டது. அந்த மகா பரிசுத்த தேவனைக் கண்டு ஒருவரும் உயிர்வாழ முடியாது. அப்படிப்பட்ட தேவனை நாம் இயேசு கிறிஸ்துவின் இரத் தத்தினால் அனுகமுடியும். இயேசு கிறிஸ்துவை மனிதர்கள் தொட முடிந்தது. ஆம்! அந்த சேரக்கூடா ஒளியில், வாசம் செய்த தேவனை அப்பொழுது தொட்டனர். ஆனால் அதையும்விட மகிமையான காலத்தில் நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பரிசுத்த பவுல் கொரிந்தியருக்குச் சொல்வதைக் கவனியுங்கள் – *"எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டான படியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே. ஒழிந்து போகிற மகிமை*

யையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ள தாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமை யுள்ளதாயிருக்கும்?" (11 *கொரி 3:7,8*).

ஒருவேளை இக்காலங்களிலே இடிமுழக்கமும், மின்னல்களும் இல்லாமலிருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் இஸ்ரவேலர் ஓரேப் பர்வதத்தில் கண்டதை விட மகிமையானது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலம் பரிசுத்த ஆவியானவரின் யுகமாயிருக்கிறது. இது இஸ்ரவேலர் கண்டதைவிட, மோசே அனுபவித்ததை விட அதிக மகிமையானது.

எனவே நாம் ஓரேபிலே அவருடைய மகிமையைக் காண வாஞ்சிப்போம். தீர்க்கமாய் அவர் முகத்தைத் தேடுவோம். கர்த்தர் தம்முடைய மகிமையையும், பரிசுத்தத்தையும் நமக்கு வெளிப்படுத்தட்டும்.

தேவத் திட்டம்

யாத்திராகமம் 24:12–"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப் பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன்" என்றார்.

இந்த ஓரேபிலேதான் நாம் தேவனின் திட்டங்களைப் பெறுகிறோம். இஸ்ரவேலருக்கு தேவன் நியாயப்பிரமாணங்களையும், கற்பனைகளையும் இங்குதான் தந்தருளினார். இது இஸ்ரவேலருக்குக் கிடைக்கப்பெற்ற பெரும் பாக்கியம் என்பேன். மேலும் அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தைக் குறித்தும், ஆசாரிய நியமங்களைக் குறித்தும் மற்றும் பண்டிகைகளைக் குறித்தும் தேவனுடைய திட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

தேவனுடைய திட்டங்களை பெற்றுக்கொள்ள தேவனிடம் காத்திருப்பது மிக அவசியமானது. இஸ்ரவேலர்

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாயினும், அவர்களும் கர்த்தருக்காக காத்திருக்க வேண்டியதா யிருந்தது. அவர்களும் கர்த்தருடைய முகத்தைத் தேட வேண்டியதாயிருந்தது. மேற்கண்ட வசனத்தில், 'அங்கே இரு' என்ற பதத்தைக் கவனியுங்கள். கர்த்தர் தம் திட்டங்களையும், நோக்கங்களையும், தமக்காக காத் திருக்கிற, தமது முகத்தை தீர்க்கமாய் தேடுகிறவாகளிடம் தான் வெளிப்படுத்துகிறார்.

தீர்க்கனான எலியாவும்கூட, தன் வாழ்வின் சோர்வின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது ஓரேப் பர்வதத்தில்தான் தேவனின் முகத்தைத் தேடினார்.

1 இராஜாக்கள் 19:8 –"அப்பொழுது அவன் எழுந்தி ருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வத மட்டும் நடந்து போனான்."

எலியா தன்னுடைய வாழ்க்கையில் நேரிட்ட சில காரியங்களால் சோர்ந்திருந்த போதுதான் ஓரேபை நோக்கிப் பயணித்தார். தன் கேள்விகளுக்கு ஓரேபிலே பதில் கிடைக்கும் என்று நன்கு அறிந்திருந்தார். அதற்காகவே தீவிரமாய் ஓரேப்பை நோக்கிப் பயணித்தார். அவர் வெறுங்கை யனாய் திரும்பி வரவில்லை. அவர் தன் வருங்கால ஊழியத்தைக் குறித்து புதிய வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்டான். நீங்கள் உங்கள் எதிர்கால வாழ்க்கையைக் குறித்தும், திட்டங்களைக் குறித்தும் கவலைப்படுகிறீர்களா ? ஓரேபிற்குப் பயணியுங்கள். தேவனைத் தேடுங்கள். அவர் உங்களுக்குச் செய்ய வேண்டுவன யாவை, வேண்டாதவை யாவை என்பதைத் தெளிவாய்ப் போதிப்பார்.

தேவ நியாயத்தீர்ப்புகள்

இதே ஓரேபில்தான் இஸ்ரவேலர் கர்த்தரை கடுங் கோபத்திற்குள்ளாக்கினர்.

உபாகமம் 9:8– "ஓரேபிலும் நீங்கள் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதினால், கர்த்தர் உங்களை அழிக் கத்தக்கதான உக்கிரங்கொண்டார்."

ஓரேபில் சோக நினைவுகளும் இல்லாமலில்லை. இங்கே இஸ்ரவேலர் தைரியமாய் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தனர். அவர்கள் கர்த்தருடைய கிருபைகளை அசட்டை பண்ணினார்கள். மகா பரிசுத்த ஸ்தலத்தில் அவர்கள் மிகவும் அருவருக்கத்தக்கதான பாவத்தைச் செய்தார்கள். நம்மையும் சாத்தான் இவ்வித காரியங்களைச் செய்யத் தூண்டுவான். எப்போதெல்லாம் நாம் தேவனுடைய விலையேறப்பெற்ற கிருபைகளையும், அதிசயங்களையும் அனுபவிப்போமோ, அப்போதெல்லாம் யூகிக்கக்கூட முடியாத அகோர பாவத்தைச் செய்ய சாத்தான் உங்களைத் தூண்டுவான். இந்த நயவஞ்சகனைக் குறித்து எச்சரிக் கையாயிருங்கள்.

இஸ்ரவேலர் கர்த்தருக்கு விரோதமாக இங்கே பாவம் செய்ததற்கான மற்றுமொரு காரணம், அவர்களால் நெடுநேரம் காத்திருக்க முடியவில்லை. அவர்கள் சாதாரண அனுதின வேலைகளைச் செய்ய மனதில்லாதிருந்தார்கள். தேவனோடு நடைபோடும் இந்த ஆவிக்குரிய பயணத்திலும், நாம் பொறுமையாய் இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். நீங்கள் பொறுமையிழந்து தவறான காரியங்களைச் செய்யாதிருங்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வழியிலிருக்கிறது. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையிலே உண்மையாய் இருந்து கர்த் தருக்காகக் காத்திருங்கள்.

யாத்திராகமம் 32:28 – "அந்நாளில் ஜனங்களில் ஏறக் குறைய மூவாயிரம் பேர் விழுந்தார்கள்."

அந்த நாளில் சுமார் 3000 பேர் மடிந்தார்கள். நம் தேவன் கிருபையிலும் இரக்கத்திலும் ஐசுவரியமுள்ளவர் தான். அதே சமயம் அவருடைய பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதையும் மறந்து போகக் கூடாது. கர்த்தரை நாம் கோபமூட்டாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்

போம். சிலர், உடனடி நியாயத்தீர்ப்பென்பது பழைய ஏற் பாட்டில் தான் உண்டு என்று சொல்லக் கேட்கிறோம். ஆனால் வேதத்தைக் கவனமாய் தியானிப்போமானால், எந்த அக்கிரமத்தையும் அவர் தண்டியாமல் விடார், என்பதைக் காணமுடியும். நாம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாதிருப் போம். நாமனைவரும் அவருடைய சிங்காசனத்திற்கு முன் பாக கட்டாயம் நிற்க வேண்டியவர்களே.

வெளி 22:11,12 – "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன், நான் அளிக்கும் பலன் என்னோடே வருகிறது."

"ஞாலம் எனக்குச் சொந்தமல்லவே,
காணும் இன்பங்கள் கடந்து போகுமே;
ஆவியின் பெலத்தால் மாமிசம் மடங்குமே,
பாவத்தின் வசீகரம் வாடிப்போகுமே.
கோவின் அழைப்பை சிரமேற்கொள்ள
பாசக் கயிறுகளால் இழுக்கப்படுகிறேன்.
சொல்வேன் அவரன்பை, செல்வேன் அவர் பின்னே;
மாபெரும் அழைப்பை பாங்காய் நிறைவேற்ற!"

சூழ்நிலை 7

கிப்ரோத் அத்தாவா

எகிப்தின் மோகமும் அழைப்பின் பாரமும்!

எண்ணாகமம் 11:34 – "இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம் பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்."

கிப்ரோத் அத்தாவா என்னுமிடத்தில்தான் இஸ்ரவேலர் மாம்ச உணவை இச்சித்தார்கள். மாத்யூ ஹென்றி என்ற வேத வல்லுனர் இந்தச் சம்பவத்தை சற்று ஆழமாகவே சிந்திக்கிறார். இஸ்ரவேலர் மாம்ச உணவை விரும்பினால், அடித்துப் புசிக்க அவர்களிடம் திரளான ஆடுகள் இருந்தன. ஆனால் இஸ்ரவேலர் அவைகளைப் புசிக்க மனமற்றிருந் தார்கள். குறைகூறும் பழக்கமுள்ள மனிதர்களை நாம் என்றும் திருப்தி செய்ய முடியாது. அவர்கள் பரலோக மன்னா வையே பழி கூறினவர்கள். இவர்களைக் குறித்து வேதம் கூறும்போது: "சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்றும் பூர்வத் திலே எழுதியிருக்கிறது" என்கிறது (யூதா 4). இப்பேர் பட்ட மனிதர்கள் இன்றும் நம் சபைகளில் காணப் படுகின்றனர். இவர்களால் என்றும் பாளையத்தில் பிரச்ச னைகள் உண்டு.

இவர்கள் ஆடுகளின் மத்தியில் வாசம் பண்ணும் ஓநாய்கள். இவர்களைக் குறித்து பவுல் இப்படியாய் கூறுகிறார்:

பிலிப்பியர் 3:19 – "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவை களைச் சிந்திக்கிறார்கள்."

இப்படிப்பட்டவர்கள் கானானைக் காண்பது அரிது. இங்கு நாம் தியானிக்கும் இச்சூழ்நிலையில், இந்த பிரச்சனைக்குக் காரணமாயிருந்தவர்கள் இஸ்ரவேலருக்குள்ளிருந்த அந்நிய ஜனங்களே.

எண்ணாகமம் 11:4 – "பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர் களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக் கொடுப்பவர் யார்?" என்றார்கள்.

இந்த அந்நிய ஜனங்களே இஸ்ரவேலரைப் பாவம் செய்யத் தூண்டினர். நம்முடைய வாழ்க்கையிலும் நம்முடைய உறவுகளைக் குறித்து கவனம் தேவை. அநேக பிரச்சனைகளுக்குத் தூண்டுகோலாய் இருப்பவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஒருபோதும் அவர்களுக்கு தோழராகாதிருங்கள். எப்போதும், எதைப் பற்றியாவது, யாரைப் பற்றியாவது குறைபேசிக் கொண்டிருப்பதுதான் அவர்களின் பொழுதுபோக்கு. இவர்களோடு நாம் கொண்டுள்ள உறவால் நாம் கானானையே கிரயமாகக் கொடுக்க நேரிடலாம். எச்சரிக்கை!

உலக இச்சை

1 யோவான் 2:16– "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டான வைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்."

ரோமர் 1:24 – "இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர், தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்."

மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், பரலோகத் தந்தையிடமிருந்து உண்டாகாமல், உலகத்திலிருந்து உண்டாயிருக்கிறது. சாத்தானும் சில உலக மாதிரிகளை வைத்திருக்கிறான். கௌரவம் என்ற போர்வையில் அதை ஒளித்து வைத்திருக்கிறான். அவனுடைய திட்டங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இப்படிப்பட்ட மாதிரிகளை பின்பற்றாதிருங்கள். அதிக கல்வியறிவு, மெத்த செல்வம் மற்றும் அளவு கடந்த அதிகாரம், இவையெல்லாம் உலக மாதிரிகளே. நமக்கு கல்வியும், செல்வமும், அதிகாரமும் அவசியந்தான். ஆனால் அவைகளால் கர்த்தருக்கு மகிமையுண்டாக வேண்டும். ஆவிக்குரிய மாதிரிகள் எப்பொழுதுமே உலக மாதிரிகளுக்கு முன்பாக நகைப்பாகவும், அபத்தமாகவுமே காணப்படும். இப்படிப்பட்ட பாதக உண்மைகளை மக்களின் மனதில் பதியவைக்க சாத்தானிடம் வேதமில்லை. ஆனால் அதை அவன் ஜனங்களிடம் கடத்தும் முறையே வித்தியாசம்தான். அவன் சில மனிதர்களை எழுப்பி அவர்களுக்கு பொருளையும், அதிகாரத்தையும், செல்வாக்கையும் தந்து, அவர்களைச் சுற்றியுள்ளவர்கள் இதனை விரும்பி, வசீகரிக்கப்பட்டு, உலக இச்சைகளால் இருதயம் நிறைக்கப்பட்டு அவன் வலையில் விழ வைப்பான். சோகச் செய்தி என்னவெனில், அநேக கிறிஸ்தவர்களும் அவன் விரித்த வலையில் விழுகிறார்கள். கள்ளச் சகோதரர்கள் தங்கள் கேடான போதனையில் அநேகரை இவ்வுலக மாதிரிகளைப் பின்பற்றத் தூண்டுகிறார்கள். "உனக்கு வசிக்க ஒரு வீடு இருந்தாலும், மற்றொன்றையும் கட்டிச் சீமானாயிரு" என்பதே இவர்களின் அறைகூவல். கிறிஸ்தவன் ஒருவன் உலகத்தோடு அடையாளங் காணப்படுவது என்னே வெட்கக்கேடு! நாம் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் புண்ணியங்களை அறிவிக்க

தெரிந்து கொள்ளப்பட்ட இராஜ தூதுவர்கள். நம் வாழ்விற்கு அவசியமானதைக் கர்த்தர் நமக்குத் தந்தருளுவார். ஆனால் நாம் எதையும் இச்சிக்கக் கூடாது. நாமும் பவுலைப் போல வழிமொழிவோம்:

பிலிப்பியர் 4:12 – "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும எல்லா வற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரி பூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்."

மேலும் தீமோத்தேயுவிற்கு அவன் கூறுவதைக் கவனியுங்கள்:

1 தீமோத்தேயு 6:6–8 – "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் இது போதுமென்றிருக் கக்கடவோம்".

தேவன் நம்மை நிறைவாய் ஆசீர்வதித்தாலும், சில சமயங்களில் குறைவுகளிலும், பட்டினிகளிலும் நம்மை நடத்தலாம். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மிய மாகவும், திருப்தியாகவும் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இச்சித்தவைகள் கிடைத்தன, ஆனால்....

எண்ணாகமம் 11:33 – "தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த் தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார்."

தேவன் அவர்களின் மாம்சீக இச்சையின்படியே இறைச்சியைத் தந்தார். ஆனால் அதனை அவர்களால் அனு பவிக்கக் கூடாதிருந்தது. கர்த்தர் அவர்களை வாதையினால் அடித்தார். நம்முடைய வாழ்விலும் கூட, நாம் இச்சிக்

கிறவைகளை ஒருவேளை தேவன் கொடுக்கலாம். ஆனால் அதனோடு வேதனைகளும், வலிகளும் சேர்ந்து கொள்ளும். நீங்கள் இச்சித்தவைகளை சுகத்தோடு அனுபவிக்க முடியாது. இப்படிப்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா ? நீங்கள் எதையாவது ஒன்றை இச்சித்திருப்பீர்கள். அதற்காக அழுதும் ஜெபித்திருப்பீர்கள். ஆனால் அது உங்கள் வாழ்வில் தேவ சித்தமாய் இருந்திருக்காது. ஆனால் கூட நீங்கள் அவைகளைப் பெற்றுக் கொள்வீர்கள். அதனோடு நீங்கள் வேதனைகளையும், வலிகளையும் பெற்றுக்கொள்வீர்கள்.

இதனால்தான் தேவன் தம்முடைய ஊழியர்க்கும்கூட அளவு கடந்த செல்வங்களை வழங்குவதில்லை. உங்களுக்கு இல்லாதவைகளைக் குறித்து வருத்தப்படாதிருங்கள்; மோகங்கொள்ளாதிருங்கள். உங்கள் வாழ்வை மற்றொருவரோடு ஒப்பிடாதிருங்கள். தேவனுடைய பார்வையில் நீங்கள் மிகவும் விசேஷித்தவர்கள். உங்களுக்கு நிகர் வேறே யாருமில்லை. உங்கள் தலைமயிரெல்லாம் கூட எண்ணப் பட்டுள்ளது. உங்களின் ஒவ்வொரு தேவையையும் அவர் அறிந்திருக்கிறார். அவைகளை எப்போது அருளவேண்டு மென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். தாழ்மையோடு நம் தேவைகளை அவருக்குத் தெரிவித்து பொறுமையோடு அவர் சமயத்திற்காகக் காத்திருப்போம். ஆமென்.

அழைப்பின் பாரம்

எண்ணாகமம் 11:14 – "இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக் கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது."

மோசே தன் ஆவியிலே கலங்கின ஒரு நிகழ்வை இங்கு காண்கிறோம். அவன் தன் பலத்திற்கு மேலாக சோதிக்கப்பட்டதாக உணர்ந்தான். தேவனுக்கென்று உழைப்பது அதிக பாரமாகத் தோன்றியது. மோசே மிகப் பெரிய தலைவனும், தீர்க்கனுமாயிருந்தான். அவனைப் போல ஜனங்களுக்காக பரிந்து பேசின தலைவன் ஒருவனு

மில்லை. எனினும் அவனும் நம்மைப் போல பாடுள்ள மனிதன்தானே. அவனுக்கென்று வரம்புகளும், பலவீன ங்களும் இருக்கத்தான் செய்தன. மோசேயின் வாழ்வில் இங்குதான் அவன் தன் அழைப்பைக் குறித்துப் புலம்பு வதைக் காண்கிறோம். ஆனால் நாம் எத்தனை முறை இப்படி புலம்பியிருக்கிறோம் ? நம்முடைய அழைப்பு நமக்கு பாரமாய் தோன்றுகிறதா ? (தேவனுடைய வேலை) ஆண்டவரே, ஊழியமே வேண்டாம் என்று புலம்புகிறோமா ?

மோசே பொறுமையிழந்து தன் ஆவியில் கலக்கமுற்றது ஏன் என்பதை சற்று தியானிப்போம்.

மோசே தேவப்பணியை தன் வேலையாய் நினைத்தான்

எண்ணாகமம் 11:12,13 – "இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ? இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்?"

தேவனுடைய அழைப்பு என்பது தனிப்பட்ட விதமானது. இதில் எந்த சமரசத்திற்கும் இடமில்லை. ஆனால் தேவனுடைய வேலை (அல்லது ஊழியம்) என்பது தனிப்பட்டதல்ல. அவர் ஆதியும், அந்தமுமாயிருக்கிறார். அவர் செடி, நாம் கொடிகள். அவர் எஜமான், நாம் வேலைக்காரர். அவருடைய பணியில் யாதொன்றையும் நாம் சொந்தங்கொண்டாட முடியாது. இங்கே மோசே சொல் வதைக் கவனியுங்கள் – "இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும் ?"

மோசே தான் ஜனங்களுக்கு இறைச்சியைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினான். ஆனால் மோசே சில காரியங்களை மறந்து போயிருந்தான். செங்கடலை பிளந்தது தேவனல்லவா ? மாராவின் நீரை மதுரமாய் மாற்றியதும் தேவனல்லவா ? இதில் மோசேயின் பங்கு என்ன ? இது அவனுடைய பிரச்சனையல்லவே. சகலமும் அவர்

மூலமாகவும், அவருக்காகவும் உண்டாயிருக்கிறதே! நாமுங்கூட தேவனுடைய பணியில் முனைப்புடன் ஈடுபடும்போது சில காரியங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற உணர்வு மேலோங்குகிறது. ஒருவேளை அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவோமானால் ஏமாற்றமே நமக்குக் காத்திருக்கிறது. நாம் நம்முடைய அழைப்பிலும், ஊழி யத்திலும் உண்மையுடன் இருக்கக் கடவோம். பணிவுடன் நாம் செயலாற்றி மற்றவைகளைக் கர்த்தரிடம் ஒப்புவித்து முன்னேறுவோம்.

மோசே தனிமையாயிருந்தான்

எண்ணாகமம் 11:14 – "இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக் கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது."

மோசே தனிமையாகச் செயல்பட்டான். எனவே அவன் மேலிருந்த பாரம் அவனை மிகவும் சோர்வுறச் செய்தது. எனவேதான் கர்த்தர் கிருபையாய் 70 மூப்பர்களை அவனோடு நிற்க அவனுக்குத் தந்தருளினார். நம்முடைய வாழ்விலும் கூட, நாம் தனியாக யாதொன்றையும் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்துவின் ஊழிய காலத்திலும் கூட அவருக்கென்ற ஒரு குழு இருந்தது. அதே போல் பவுலுக்கும் ஒரு குழு இருந்தது. நாமுங்கூட இவர்களின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும். அது சபை ஊழியமாகட்டும், சுவிசேஷ ஊழியமாகட்டும் நம்முடன் ஒரு குழு கட்டாயமாக இருப்பது அவசியம். 'குழு ஊழியமே' தங்கள் வெற்றிக்குக் காரணம் என்பதே தேவ ஊழியத்தை வெற்றிகரமாகச் செய்து நிறைவேற்றிய பல தலைவர்களின் கூற்றாகும். தேவன் ஒரு பாரத்தை உங்களுக்கு கொடுக்கும்போது அதை மற்றவரிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களின் பாரத்தால் ஈர்க்கப் படுகிறவர்கள் உங்களோடு இணைந்து கொள்வார்கள். அவர் களை ஆவியிலும், வேத வசனத்திலும் வளர்த்துவிடுங்கள் (எண் 11:17). கர்த்தர் உங்களுக்கு அருளின பாரத்தை இவர்கள்

உணர்ந்து உங்களுக்கு உறுதுணையாய் நின்று தேவ திட்டத்தை நிறைவேற்ற உதவுவார்கள்.

மோசே தன்னைக் குறித்து குறைவெண்ணம் கொண்டவனாயிருந்தான்

எண்ணாகமம் 11:15 – "உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்று போடும்" என்று வேண்டிக் கொண்டான்.

இஸ்ரவேலரின் தொடர்ச்சியான முறுமுறுத்தலில் மோசே கட்டாயமாக சோர்வுற்றிருக்க வேண்டும். அவன் பிரச்சனைக்கு மேல் பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டிருந்தான். மோசே தன்னுடைய வரம்புகளை நன்றாக அறிந்திருந்தான். தானும் ஒருநாள் இஸ்ரவேலரைப் போல் முறுமுறுத்து கர்த்தரின் நியாயத்தீர்ப்புகளுக்கு ஆளாகி விடுவேனோ? என்ற அச்சம் அவனுக்குள் இருந்தது. மோசே கர்த்தருக்கு பயந்தவனாயிருந்தான். ஆனால் தேவன் கிருபை நிறைந்தவர் என்பதை மறந்திருந்தான். நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய சுத்த கிருபையே! நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அவருடைய கிருபையிலேயே நிற்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கவனியுங்கள்:

2 கொரி 12:9,10 – "கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்."

எனவே, நாம் நம்முடைய அழைப்பின் பாரத்தைக் குறித்து கவலைப்படாமல் மகிழ்வோடு சிலுவையை எடுத்துக் கொண்டு முன்செல்லுவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்டுவோம். கர்த்தர் பலவீனப் பாத்திரங்களையே தனக்கென்று பயன்படுத்து கிறார். எனவே உற்சாகமாய் முன்னேறுங்கள்! தேவ நாமம் மகிமைப்படுவதாக.

"நீர் மாத்ரம் போதும்,
நீர் மாத்ரம் போதும்;
நீரற்ற வனாந்தரமாயினும்,
சிலுவைப் பாதையாயினும்,
ஈனன் நான் தனிமையிலே,
ஈசன் என் பக்கத்திலே;
நேசிப்போர் தூக்கி எறிந்தாலும்
நீர் மாத்ரம் போதும்,
நீர் மாத்ரம் போதும்,
சீக்கிரமாய் பலன் பெறுவேன்,
வீரியமாய், சாந்தமாய், தாழ்மையாய்,
இறுதிவரை உத்தமமாய்
நித்தியனை சேவிப்பேன்."

சூழ்நிலை 8

ஆஸ்ரோத்

பந்தமே பகை!

எண்ணாகமம் 12:1 – "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி ..."

ஆஸ்ரோத்தில் மோசே சற்று வித்தியாசமான எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. அவருக்கு விரோதமாக பேசிய மனிதர்கள் வேறுயாருமல்ல, அவர் உடன் பிறந்த சகோதரனும், சகோதரியுமே! தன் குடும்பத்திலிருந்தே அதுவும் தன் உடன்பிறந்த சகோதர, சகோதரியிடமிருந்தே இப்பேர்பட்ட எதிரலை உண்டாகுமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. குடும்ப உறவுகளை விட கர்த்தரே போதுமானவர் என்பதை அறிந்திருந்தார் மோசே.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் கூட நாம் தேவனுடைய இடத்தை எந்த ஒரு நபருக்கும் கொடுக்க இயலாது. இந்த சத்தியத்தை நன்றாய் நாம் புரிந்து அதை ஏற்றுக் கொள்ளாதவரை நாம் மனிதர்களிடம் ஏமாற்றத்தையும், வெறுமையையுமே அடைவோம். நாம் எதிர்பார்க்கின்ற

நிலையான அன்பு, இயேசுவின் அன்பு மட்டுமே. அவரே நமக்காக வந்தார்; அவரே நமக்காக மரித்தார்; அவரே நமக்காக உயிர்த்தார். இந்த நிலையான அன்பை மனிதர் களிடம் நாம் எதிர்பார்ப்போமானால், நாம் சோர்ந்து போவோம். நெருங்கிய உறவுகளான கணவன்–மனைவி, தாய்–சேய், மற்றும் நண்பர்களின் அன்பும் கூட மாறிப் போகும். (ஒரு கணவனாக, ஒரு மனைவியாக, ஒரு தாயாக, ஒரு தகப்பனாக, ஒரு மகனாக நாம் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்து நான் இங்கு எழுதவில்லை. நம் பொறுப்புகளை நாம் சரிவர நிறைவேற்றாத பட்சத்தில், தேவனும் நம்மில் பிரியமாயிருப்பதில்லை).

ஒரு பக்தன் இவ்வண்ணமாய் எழுதுகிறான்,

தாயின் அன்பு தணிந்துபோம்;

தகப்பனின் அன்பு மறைந்துபோம்;

கணவனின் அன்பு கனிந்துபோம்;

பிள்ளைகளின் அன்பு பிரிந்துபோம்;

உற்றாரின் அன்பு உலர்ந்துபோம்;

தேவனின் அன்பு ஒன்றே பிரியாத, மாறாத, குன்றாத அன்பாகும். இப்படிப்பட்ட அன்பிற்கு நாம் பாத்திரராய் நடந்து கொள்ள வேண்டும்.

புறக்கணிப்பு

மத்தேயு 10:36,37 – "ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என் னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல."

நாம் நம் குடும்பத்தினரால், உறவினர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நம்மிடையே காணப்படக்கூடாது. தேவன் உங்களை ஆசீர்வதித்துப்

பயன்படுத்தும்போது, குடும்ப உறுப்பினர்களிடமிருந்து 'எதிர்பாராதவைகளை' எதிர்பாருங்கள். தேவன் உங்களை பயன்படுத்தும் இடத்தில் ஜனங்கள் உங்களை ஏற்றுக் கொள்ளலாம், புகழலாம். ஆனால் உங்கள் சொந்த ஊரில் இருக்கும் இடத்தில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவ தென்பது அரிது. உங்கள் சொந்தக் குடும்பத்தினர் என்பது, நீங்கள் பணியாற்றும் நிறுவனம், நீங்கள் போதகராயிருக்கும் சபை, நீங்கள் வழிநடத்தும் அமைப்பு போன்றவைகளாகக் கூட இருக்கலாம்.

"ஓர் ஆவிக்குரிய மனிதன் தன் சொந்த ஊரில் தன் சொந்த ஜனங்களிடம், தனது சந்ததியிலே அங்கீகரிக்கப் படுவது அரிது." இதை வாசிக்கிற நீங்கள் இப்படிப்பட்ட அனுபவத்தை அனுபவிப்பீர்களென்றால், அகமகிழுங்கள். ஏனெனில் இச்சமூகம் இயேசுவையும் அவரைப் பின்பற்றின பரிசுத்தவான்களையும் இப்படித்தான் நடத்தியது.

எத்தியோப்பிய மனைவி

இச்சம்பத்தின் பின்னனி நம்மால் உறுதியாக யூகிக்க முடியவில்லை. சில வேத வல்லுனர்களின் கணிப்பு என்னவெனில் மோசே மணம் முடித்திருந்த சிப்போராள் தான் அந்த எத்தியோப்பிய மனைவி என்கின்றனர் (எபிரெய மொழியில் மீதியானியர், எத்தியோப்பியர் என்று அழைக்கப் படுகின்றனர்). வேறு சிலர் மோசே பிற்காலங்களில் மணம்முடித்திருந்த பெண்ணாக இருக்கக்கூடும் என் கின்றனர். எந்த சந்தர்ப்பத்திலும் இங்கே ஆரோனும் மிரியாமும் புண்பட்டிருக்கும் தங்கள் 'பெருமையை' வெளிப் படுத்துவதைப் பார்க்கிறோம்.

மேலும் அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

எண்ணாகமம் 12:2 – "கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ? என்றார்கள்."

இச்சம்பவம் மோசேக்கு உதவியாக எழுபது மூப்பர்களை நியமித்தபின் நடந்தது என்பதைக் குறிப்பில் கொள்ள வேண்டும். ஒருவேளை ஆரோனும் மிரியாமும் புதிதாய் தெரிந்தெடுக்கப்பட்ட 70 மூப்பர்களைக் கண்டு ஒருவித பயஉணர்வு கொண்டனரோ? மொத்தத்தில் அவர்கள் இந்த மூப்பர்களினால் தங்களுக்கிருந்த முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று எண்ணினர். நாமும்கூட சில சமயங்களில் நாம் பெற்றிருக்கும் பதவி, பொறுப்புகளைக் குறித்து உயர்வெண்ணம் கொள்கிறோம். நம்முடைய மனநிலையும் நன்றாக இருக்கிறது. ஆனால் அந்தப் பதவியோ, அந்தஸ்தோ இல்லாதபோது பெரிய சோர்வை உணர்கிறோம்.

தலைவனா? அடிமையா?

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் எப்படிப்பட்ட தலைவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு தாமே கூறுவதைக் கவனியுங்கள்.

மாற்கு 10:42,43 – ***"இயேசு அவர்களைக் கிட்ட வரச் செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப் பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருகக விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக் கக்கடவன்."***

நாம் நம்முடைய இயேசுவையே பின்பற்றுவோம். அவரே நம் வாழ்வின் மாதிரியாகட்டும். அவரைத் தவிர வேறே மாதிரிகள் நமக்கு வேண்டாம். ஒரு பணிவிடைக் காரனாய் வாழ்ந்து கிறிஸ்து நமக்காக மாதிரியை வைத்துப் போனார். வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. நம்முடைய சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப்

பின்பற்றுவோம். இந்தச் சிலுவையின் பாதையெங்கும் அவமானமும், வேதனைகளும், வாதைகளும்தான் நிரம்பி இருக்கும். ஆனால் அந்த பாதையில்தானே நாம் மகிமையைக் கண்டடைய முடியும். கிறிஸ்து உபத்திரவத்தை வாக்குப்பண்ணினார் (யோ 16:33). ஆனால் வெற்றிக்கு உத்திரவாதம் அளித்திருக்கிறார். எனவே எந்தநிலையிலும் அவருக்குப் பணி செய்வோம். நாம் வேலைக்காரர் என்பதை மறந்து போகவேண்டாம். நாம் இயேசுவுக்கு அடிமைகளே! ஆமென்.

தேவ மனிதனுக்கு விரோதமாய்ப் பேசத் துணிவது

எண்ணாகமம் 12:2,3– "கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசின தில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்."

தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொரு தேவ ஊழியர்களைக் குறித்தும் நாம் அவதூறு பேசும்போதெல்லாம், தேவகோபம் நம் குடும்பத்தின் மேலும், நமது பிள்ளைகளின் மேலும் பற்றி எரியும் என்பதை மறவாதிருங்கள். மோசேயைக் குறித்து வேதம் அவன் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் என்று கூறுவதைக் காண்கிறோம். எனவே தேவனுடைய ஊழியர் களைக் குறித்தும், ஏன் தேவனுடைய பிள்ளைகளைக் குறித்தும் பேசத் துணியவேண்டாம். அப்படி ஒருவேளை பேசியிருப்பீர்களானால் தேவனிடமும், அம்மனிதரிடமும் மன்னிப்பு கோருங்கள். அவர்களோடு ஒப்புரவாகுங்கள். சில சமயங்களில் தேவ மனிதர்களின் பாதுகாப்பின் கீழ் கர்த்தர் நம்மை வைத்திருக்கலாம். நாம் அவர்களின் தலைமைக்கு அடங்கி நடப்போம். குறைவுகள் காணப்படலாம். நம்மில் குறைவில்லாத பூரணர் யாருமில்லையே. எனவே முரட்டாட்டம் பண்ணுவதைத் தவிர்த்து கர்த்தருடைய பார்வையில் பிரியமாய் நடந்து கொள்வோம்.

தேவன் நம் கூக்குரலை மட்டுமல்ல, கூறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனிக்கிறார். வேதம் கூறுவதைக் கவனியுங்கள்:

மத்தேயு 12:36 – "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்."

எனவே நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளைக் குறித்தும் கவனமாயிருப்போம்.

மோசே தேவனுக்கு பிரியமான ஊழியனாயிருந்தான். தேவன் தன் ஊழியனைக் குறித்து இங்கு சாட்சியளிப்பதை கவனிப்போம்:

எண்ணாகமம் 12:8 – "நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்."

இந்த தேவபயம் நம் அனைவருக்கும் தேவை. நம்முடைய நாவின் சொற்கள் அளவாய் இருக்கட்டும். மற்றவர்கள் தேவனுடைய ஊழியர்களைக் குறைகூறும் போது நாம் மௌனமாயிருப்பது சாலச் சிறந்தது. இங்கே ஆரோனும் மிரியாமும் மோசேக்கு விரோதமாய் பேசினதால், தேவன் மிரியாமை குஷ்டரோகத்தினால் அடித்தார். என்ன பயங்கரமான விஷயம் பாருங்கள்! எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மிகவும் கவனமாயிருப்போம். தேவன் நமக்கு உதவி செய்வாராக!

"என்னை நான் நோக்கினால்
பயனற்றவனாய் உணருகிறேன்;
சத்துருவை நோக்கினால்
உதவியற்றவனாய் உணருகிறேன்;
பின்னாலே நோக்கினால்
நோக்கற்றவனாய் உணருகிறேன்;
திருமுகத்தை நோக்கினால்
பயமற்றவனாய் உணருகிறேன்."

சூழ்நிலை 9

பாரான் வனாந்தரம்

வீணான அலைச்சல்!

எண்ணாகமம் 13:1-3 – "கர்த்தர் மோசேயை நோக்கி; நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ் வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபு வாகிய புருஷனை அனுப்ப வேண்டும் என்றார்."

இஸ்ரவேலரின் நெடுந்தூர பயணம் ஒருவழியாய் முடிவு பெறும் நிலையில் இருந்தது. யோர்தான் நதியைக் கடந்து பாலும், தேனும் ஓடும் கானான் தேசத்தை சுதந்தரிப்பதுதான் பாக்கியிருந்தது. அவர்கள் இளைப்பாறுதலுக்குக் கிட்டிச் சேர்ந்தனர். தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர் வாதத்தைப் பெற்றுக்கொள்ள மிக அருகாமையில் வந்துவிட்டனர். தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு முன்பாக வேவுகாரர்களை அனுப்பி கானான் தேசத்தை வேவுபார்க்க கர்த்தர் விரும்பினார். வேவு பார்க்க தெரிந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் இஸ்ரவேல் கோத்திர பிரபுக்களாய் இருந்தார்கள். ஒருவேளை கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் தலைவர்களைப் பரிசோதிக்க விரும்பி இருக் கலாம். வாக்களிக்கப்பட்ட தேசத்தைப் பெற்றுக் கொள்ள

இவர்கள் பாத்திரரா? இல்லையா? என்று தேவன் இவர் களுக்கு இப்படியொரு சூழ்நிலையை அனுமதித்தார். இங்கு என்ன நடந்தது என்று காண்போம்.

துர்ச்செய்தி

எண்ணாகமம் 13:32,33 –"அங்கே இராட்சதப் பிறவி யான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம்; அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச் செய்தி பரப்பச் செய்தார்கள்."

இஸ்ரவேல் தேசத்து தலைவர்கள் கானான் தேசத்தாரை தங்களிலும் பலவான்களாகக் கண்டார்கள். ஆம், அது உண்மையே. ஆனால் இஸ்ரவேலர் தங்கள் ஆண்டவராகிய கர்த்தரை நம்பத் தவறினார்கள். இஸ்ரவேலின் பிரபுக்கள் தங்களை கானான் தேசத்தாருக்கு முன்பாக வெட்டுக்கிளிகளைப் போல் உணர்ந்தார்கள். இவ்வளவு நாட்களாய் கர்த்தரின் அற்புதங்களையும், வல்ல மையையும் வழியெங்கும் கண்ட இஸ்ரவேலின் தலைவர்கள், ஆண்டவரின் மீதும், அவரின் வாக்குத்தத்தங்களின் மீதும் நம்பிக்கை வைக்கத் தவறிப் போனார்கள். நாமும்கூட நம்முடைய தேவனையும், அவர் அருளின வாக்குத்தத்தங் களையும் நம்பாதிருக்கும் போதெல்லாம் அவர் வாக்களித்த ஆசீர்வாதங்களை நாம் ஒருபோதும் சுதந்தரித்துக் கொள்ள முடியாது. மேலும் தலைவர்கள், கர்த்தரை நம்பத் தவறுகிற போது, அவர்கள் மற்றவர்களுக்கு இடறலாகின்றனர். அவநம் பிக்கை என்றுமே காட்டுத்தீயைப் போல் பரவக்கூடியது. இந்த அவநம்பிக்கையினால் நேர்ந்த விளைவுகளைச் சற்று கவனிப்போம்.

எண்ணாகமம் 14:1 – "அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுது கொண்டிருந்தார்கள்."

இஸ்ரவேலர் அழுதனர். இது எப்படிப்பட்ட காட்சியாக இருந்திருக்கக் கூடும். இஸ்ரவேலர் கர்த்தரின் இருதயத்தை விளங்கிக் கொள்ளவில்லை. ஆண்டவரின் வாக்குத்தத்தங்களையும், அவருடைய வல்லமையையும் இஸ்ரவேலர்களால் நம்ப முடியாமலிருந்தது. என்ன பரிதாபம்! நம் வாழ்விலும் கூட, திரும்பத் திரும்ப தேவனுடைய ஆதரவையும், உற்சாகமூட்டுதலைக் கண்டும், அவரையும் அவர் வாக்கையும் நாம் நம்பத் தவறுகிறோம். ஆனால் அவர் இன்னும் நம்மேல் கிருபையுள்ளவராகவே இருக்கிறார்.

இஸ்ரவேலர் எகிப்திலே மடிந்திருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணினர். அவர்கள் தங்களுக்கு ஒரு தலைவனைத் தெரிந்து கொண்டு திரும்பவும் எகிப்திற்குப் போக மனதுள்ளவர்களாயிருந்தார்கள். தேவனுடைய கிருபைகளை அவர்கள் அசட்டை பண்ணினர்.

கலாத்தியர் 3:3,4 –"ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப் போயிற்றே."

இவ்வளவு தூரம் கடந்து வந்திருந்தபோதும், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் நுழையும் தருவாயில், இஸ்ரவேலர் விசுவாசத்தில் வீழ்ந்து போனார்கள். இதுவரை அவர்கள் பட்ட எல்லா பிரயாசங்களும் வீணாய்ப் போயிற்று. பிரியமானவர்களே, நாமும்கூட நம் ஆவிக்குரிய பயணத்தை மிக நன்றாகவே துவங்குகிறோம். ஆனால் வேதம் என்ன கூறுகிறது ?

பிரசங்கி 7:8 – "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு நல்லது."

பயணத்தை ஆரம்பித்துவிட்ட நாம் அதை நன்முறையில் முடிக்க வேண்டும். வேதத்திலே நமக்கு அநேக உதாரணங்களைப் பரிசுத்த ஆவியானவர் வைத்துள்ளார்– சவுல், சாலமோன், சிம்சோன் எனப் பட்டியல் நீள்கிறது. இப்படிப்பட்ட மனிதர்களைக் குறித்து பவுல் தீமோத்தேயுக்கு எழுதுகையில், இவர்கள் தங்கள் விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தினவர்கள் என்று கூறுகிறான் (1 தீமோ 1:19). நம்முடைய பிரதான அழைப்பிலிருந்து நம்மை திசை திருப்புகிற எந்தக் காரியமானாலும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட திசைதிருப்பும் சில காரியங்களைக் குறித்து இங்கு பார்ப்போம்.

உங்களைப் பாராதிருங்கள்

எண்ணாகமம் 13:33 – "நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம்."

இஸ்ரவேலர் தங்கள் விசுவாசத்தை இழந்ததற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்று அவர்கள் தங்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். உண்மையில், இஸ்ரவேலர் ஏனாக் இராட்சதரின் முன் மிகச் சிறியவர்களே. வாலிபனான தாவீதும் இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இருந்தான். தனக்கு முன்பாக நின்ற பெரிய கோலியாத்தை அவன் பார்க்கவில்லை. அவன் தான் சிறியவன், தன்னிடம் ஆயுதம் ஒன்றுமில்லை என்பதையும் கவனிக்கவில்லை. அவன் பார்த்தது தேவனை மாத்திரம்தான். ஜனங்களோ தாவீதை நோக்கி, "தாவீதே, நீ இன்னும் சிறியவன், நீ யுத்த வீரனல்ல" என்று இரைந்தனர். ஆனால் அவன் விசுவாசித்தது இன்னார் என்பதை அறிந்திருந்தான். அவன் நம்பின தேவன், 'கோலியாத்திலும் பெரியவர்' என்பதை விசுவாசித்தான். நம்முடைய வாழ்விலும் கூட நாம் நம்மையே நோக்கிப் பார்ப்

போமானால், நாம் தோற்றுப் போவோம். கடந்த கால தோல்விகளை ஒருபோதும் எண்ணாதிருங்கள். உங்களுடைய குறைவுகளையும், பலவீனங்களையும் குறித்து குறைவெண்ணம் கொள்ளாதிருங்கள். கர்த்தரையும் என்றும் மாறாத அவருடைய கிருபைகளையும் நினைவில் கொள்ளுங்கள். நம்மையே பார்த்துக் கொண்டிருப்பதில் உண்டாகும் மற்றொரு பக்க விளைவு – பெருமை. ஆம் நாம் நம்மையே பார்த்துக் கொண்டிருப்போமானால் பெருமை நம்மை ஆட்கொள்ளும் சவுலை கவனியுங்கள். அவன் துவக்கம் அற்புதமாயிருந்தது. ஆனால் குறைந்த காலத்திலேயே பெருமையின் எண்ணம் அவனை ஆட்கொண்டது. அவன் தனக்கென ஜெய ஸ்தம்பங்களைக் கட்டிக் கொண்டான் (1 சாமு 15:12). நாம் என்றும் தாழ்மையைத் தரித்தவர்களாய் நம்மைப் பாராமல், கர்த்தரின் கிருபைக்குக் காத்திருக்கப் பழகுவோம். அப்போது நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை வெற்றியாய் முடிக்க முடியும்.

சூழ்நிலையைப் பாராதிருங்கள்

எண்ணாகமம் 13:28 – "பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது."

இஸ்ரவேலர் தங்கள் எதிரேயிருந்த அரணிப்பான பட்டணங்களைக் கவனித்தார்கள். பட்டணங்கள் பெரியதாகவும் அரணிப்பாகவும் காட்சியளித்தது. இஸ்ரவேலரோ யுத்தத்தில் பழகினவர்கள் அல்ல. அவர்களுக்கு இரதங்களும் குதிரைகளுமில்லை. சூழ்நிலையை வைத்து சொல்வோமானால், இஸ்ரவேலர், கானானியர் மீது போர் தொடுத்து வெற்றி பெற முடியும் என்பதற்கு எவ்வித வாய்ப்பும் அங்கே காணப்படவில்லை. ஆனால் கர்த்தர் சாத்தியக்கூறுகளை அவமாக்குகிறவர். தாவீதைவிட கோலியாத் யுத்தத்தில் வீரன்தான். ஆனால் அவன் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடந்தான். சூழ்நிலைகளின்படி நாம் வழி நடத்தப்படுவோமானால், சில நேரங்களில் நம்முடைய முடிவு பரிதாபமாக இருக்கும். உலக மாதிரிகளைப்

பின்பற்றும் கர்த்தரின் பிள்ளைகளின் முடிவு எவ்வளவு பரிதாபமானது. நாம் பெரும்பான்மையை விசுவாசிப்பவர்கள் அல்ல. கண்மூடித்தனமாய் பெருந்திரள்களின் பின் செல்லாதிருங்கள். காற்றடிக்கும் திசைக்கெல்லாம் பறக்கும் பதர்களல்ல நாம். சில சமயங்களில் அடிக்கும் காற்றுக்கு எதிராகவும், அலைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போடவும் கர்த்தர் நம்மை வைக்கலாம். ஆகவே திடன் கொள்ளுங்கள். தைரியமாய் முன்னேறுங்கள்.

எகிப்தைப் பாராதிருங்கள்

எண்ணாகமம் 14:4 – "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்."

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர் முழுமையாய் விடுதலையாக்கப்பட்டு இருந்தார்கள். ஆனால், அதன் இச்சைகள் அவர்களின் இருதயங்களில் ஏனோ இன்னும் ஒட்டிக் கொண்டுதானிருந்தது. எகிப்திற்கென்று ஒரு வசீகரம் உண்டு. அசுத்தமான பண்டிகைகள், களியாட்டுகள், உல்லாசமான சிற்றின்பங்கள் என்று இவைகள் இஸ்ரவேலரின் சிந்தனை–உலகில் ஒட்டிக் கொண்டிருந்தன. இவைகள் எல்லாவற்றையும் அனுபவிக்க இவர்களுக்கு உரிமை இல்லாதிருந்தும், எகிப்தின் ஆசையைக் கிளப்பும் வசீகரிப்பிற்கு தங்கள் மனதைப் பரிகொடுத்திருந்தார்கள் (யாத் 16:3). லோத்தின் மனைவியை நினைவிற்கொள்ளுங்கள் (லூக் 17:32). இவளுங்கூட சோதோமை விட்டு வெளியே வந்திருந்தாள். ஆனால் சோதோமின் வசீகர வல்லமை அவளை இழுத்துக் கொண்டுதானிருந்தது. இதன் விளைவாகத்தான் அவள் உப்புத்தூணானாள்.

எகிப்தின் வசீகரம் இன்னும் உங்களைச் சுண்டி இழுக்கிறதா? எச்சரிக்கை என் நண்பனே! இது கர்த்தர் உங்கள் மேல் வைத்த விசேஷ அபிஷேகத்தையும், அழைப்

பையும் இழக்கச் செய்யும். சிம்சோனை நோக்கிப் பாருங்கள். அவன் ஒரு உன்னத அழைப்பையும், மகா வல்லமையையும் பெற்றிருந்தான். ஆனால் அவனுங்கூட இந்த வசீகரமான எகிப்தின் மோகத்திற்குத் தன்னை விற்றுப்போட்டான். சில்லரைச் சுகங்களுக்காக தேவனின் மகிமையை விலை பேசினான். சொல்லப்போனால் அவன் பாவத்தோடு விளையாடிக் கொண்டிருந்தான். பெலிஸ்தரை எதிர்த்துப் போராட அழைக்கப்பட்ட சிம்சோன் பெலிஸ்தரின் பெண்களோடு விளையாடத் துவங்கினான். கண்களோடு விளையாடின சிம்சோம் தன் இருகண்களையும் இழந்தான்.

எபிரேயர் 4:11 – "ஆகையால் அந்தத் திருஷ்டாந்தத்தின் படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்."

அவசியமற்ற அலைக்கழிப்பு

எண்ணாகமம் 14:26,27 – "பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? ... நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் ... எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்."

இஸ்ரவேலர் உச்சரித்த தங்கள் வார்த்தைகளின்படியே தேவன் அவர்களை நியாயம் தீர்த்தார். அவர்களின் முறுமுறுப்பே அவர்களுக்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. தேவன் வாக்குப்பண்ணின தேசத்தை இஸ்ரவேலர் இழந்து போயினர். அந்தப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை மிக நெருங்கியவர்கள், அதைச் சுதந்தரித்துக் கொள்ளாமல் போனார்கள். இனி அவர்கள் மரிக்கும்வரை, அடுத்த தலைமுறையினர் எழும்பும்வரை பல வருடங்கள் (ஏறத்தாழ 38 வருடங்கள்) அலைந்து திரிய வேண்டியதாயிருந்தது.

அவர்கள் வந்த வழியே மறுபடியும் செல்ல நேரிட்டது. இதுவரை பிரயாணம் செய்த இஸ்ரவேலர், இப்போது அலைய நேரிட்டது. என்ன ஒரு பரிதாபம்! நம்முடைய வாழ்விலும் கூட தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் நன்கு அறிந்து, தேவனுக்குப் பிரியமாக நடப்போமானால், தேவையில்லாத அலைச்சல்களையும், வருடங்கள் வீணா வதையும் தவிர்க்க முடியும்.

"நெருக்கப்படுகிறேன், நானா திசையிலும்
உருகுகிறேன் உள்ளே, பெலனில்லையென்று
பெருகும் தேவைகள், பெருகும் சவால்கள்;
குறுகியே தத்தித் தத்திச் செல்லுகிறேன்;
வருவேனா ஆண்டவா எல்லைக் கோட்டிற்கு?

பொறுத்திரு இன்னும் கொஞ்சம் காலந்தான்,
அருகில் என்னருகில் இருப்பாய்;
கிருபையைப் பற்றிக்கொண்டு நில்
தருவேன் என் பலன் என்றார்
குருசில் தொங்கின இரட்சகர்."

சூழ்நிலை 10

காதேஸ்

மோசேயும் மனிதனே!

எண்ணாகமம் 20:1,2 – "இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன் வனாந் தரத்திலே சேர்ந்து, மக்கள் காதேசிலே தங்கியிருக்கையில், மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்பட்டாள்.

இஸ்ரவேலருக்கு இன்னுமொரு தண்ணீர்த் தட்டுப்பாடு. பழைய சிக்கல் திரும்பவும் தலைதூக்கியது. தேவனை மகிமைப்படுத்தக் கிடைத்த தருணங்களை யெல்லாம் உதறித் தள்ளினர். நமது தேவன் இரண்டாம் தருணம் கொடுப்பவர் மட்டுமல்ல, பல தருணங்களைத் தாராளமாய்த் தருகிறவர். ஒவ்வொரு பரீட்சையும் தேவனது உண்மையை நிரூபிக்க பொன்னான வாய்ப்பு. ஒவ்வொரு சோதனையும் அவரை மகிமைப்படுத்தவும் சாத்தானை வெட்கப்படுத்தவும் அருமையான வாய்ப்பு. இதில் தோற் போமானால் எதிர்மறைதான் நிகழும். தேவன் உங்களை நம்பி தனது வெளிப்பாடுகளையும் அபிஷேகத்தையும் அழைப் பையும் ஊழியத்தையும் தந்துள்ளார். அவருக்கு உண்மை யுள்ளவர்களாய் இருக்கிறோமா? முந்தையச் சூழ்நிலைகளில் தவறியிருப்பீர்களானால் அடுத்த சூழலில் கர்த்தரை மகிமைப்படுத்தத் தீர்மானம் எடுங்கள். அறிவீனத்தைத்

திரும்பச் செய்யாதீர். *"நாயானது தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவது போல மூடனும் தன் மூடத் தனத்துக்குத் திரும்புகிறான்" (நீதி 26:11)* என்கிறது வேதம். நமது தவறுகள் நமக்கு ஆசானாயிருக்க வேண்டும். அவரது கிருபையை நம்பி தினமும் அவரையே சார்ந்து கொள்ள வேண்டும். பழைய வெற்றிகள் எதிர்காலக் கிரீடங்களைச் சம்பாதிக்கும் என்பது நிச்சயமல்ல. தாழ்மையோடிருப்பது அவசியம்.

பாறையினிடம் பேசு

எண்ணாகமம் 20:7,8– "கர்த்தர் மோசேயை நோக்கி; நீ கோலை எடுத்துக் கொண்டு நீயும் உன் சகோதரனான ஆரோனும் சபையாரைக் கூடிவரச் செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப் பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்."

சபையாரின் கண்களுக்கு முன்னே பாறையிடம் பேசும்படியாக மோசே கட்டளை பெற்றார். மாசாவில் இப்படிப்பட்டதொரு சூழ்நிலையை மோசே சந்தித்தபோது பாறையை அடிக்கும்படியாக ஆண்டவர் மோசேக்கு கட்டளை கொடுத்தார். இப்போது மோசே அதே தேவகிருபை தனக்கிருப்பதாக யூகித்துக்கொள்ளுகிறார்.

மோசேயின் தோல்வியிது. ஆண்டவரோடு முகமுகமாய்ப் பேசின பெரும் தீர்க்கதரிசி வீழ்ச்சியடைந்தார். மோசேயைப் போல யாருமே கிடையாது என்கிறது வேதம் (உபா 34:12). மனிதர்கள் தவறுவது இயல்பே. நாம் எல்லோருமே தவறிழைக்கக் கூடிய மனிதர்கள்தான். மோசே இதற்கு விதிவிலக்கல்லவே. நமது பழைய ஆன்மீகக் காரியங்களின் அனுபவங்கள் எதிர்காலத்திற்கான தேவ கிருபையைக் கொடுத்துவிடும் என்று கையடித்துச் சொல்லமுடியாது.

ஆன்மீக வாழ்வில் வெற்றிக்கு குறுக்குவழி கிடையாது. எந்தவொரு சூத்திரத்தையும் பயன்படுத்தி வாகைசூட முடியாது. தேவன் தனிநபரிடம் பேசுகிறவர். இயேசுவையே யன்றி வேறு மத்தியஸ்தர் தேவையில்லை (1 தீமோ 2:5). தினமும் ஆண்டவரது முகத்தைத் தேடி தொடர்ந் தேர்ச்சியாய் அவரைச் சார்ந்திருக்க வேண்டும். தேவன் மன்னாவை வாரத்திற்கொருமுறைத் தரமாட்டார். அன்றாடம் படியளப்பார். நமது வாழ்வில் தேவனது வெளிப்பாடுகள் படிப்படியாகத்தான் வரும். தேவனது சேனையில் நட்சத்திரத் திருத்தூதுவர் யாரும் கிடையாது (2 கொரி 12:11). நாம் யாவரும் ஓரே படகில்தான் சென்று கொண்டிருக்கிறோம். தேவன் யாரையாவது வல்லமையாகப் பயன்படுத்துகிறாரென்றால், அன்னார் தன்னை மிகவும் தாழ்மைப்படுத்தியிருக்கிறா ரென்றும் தேவனது கிருபையைச் சார்ந்திருக்கிறார் என்று தான் சொல்லலாம். நமது தகுதியின்மையே நமது தகுதி யாகும். நமது நீதியெல்லாம் அழுக்கான கந்தை (ஏசா 64:6). மெய்யான தேவ மனிதன் தன்னை கர்த்தர் எவ்வளவாய்ப் பயன்படுத்தினார் என்று மார்தட்டமாட்டான்; தனது பல வீனத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவான் (2 கொரி 12:9). நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளாதிருப்போம். தேவ பக்தியின் வேஷத்தைக் குறித்து எச்சரிக்கை யாயிருங்கள் (2 தீமோ 3:5). மக்கள் முன்னிலையில் தங்களை உயர்த்திக் காட்டிக் கொண்டதால் இயேசு துர்உபதேசக் காரரையும் சதுசேயரையும் பரிசேயரையும் கண்டனம் செய்தார் (மத் 6:16). பலரை வஞ்சிக்கப்போகும் கள்ளத் தீர்க் கதரிசிகளைக் குறித்தும் இயேசு எச்சரித்தார் (மத் 24:24). பிரஸ்தாபத்தைத் தேடி டாம்பீகமாய் வாழ்ந்து மக்களை தேவனிடத்தி லல்லாமல் தம்மிடமே நடத்தும் கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து ஜாக்கிரதை. ஆன்மீக நாடகமாடும் கள்ள அப்போஸ்தலரைக் குறித்து கவனமாயிருங்கள். இவர்கள் தங்களை சூப்பர் அப்போஸ்தலராகக் கணித்து பிறரை எதிர்க்கிறார்கள் (2 கொரி 11:5; 10:10). செவித்தினவுள்ளவர்கள் விரும்பிக் கேட்பதையே உபதேசிக்கும் கள்ளப்போதகரைக் குறித்து விழிப்பாயிருங்கள் (2 தீமோ 4:3). அவர்களது

அகராதியில் பாடுகளோ வனாந்தரமோ கிடையாது. ஆண்டவர் தெரிந்துகொண்டுள்ள எஞ்சி யிருக்கும் உத்தமரை ஓயாமல் குற்றஞ்சாட்டிக் கொண்டே இருக்கும் கள்ளச் சகோதரரைக் குறித்து ஜாக்கிரதை (2 கொரி 11:26). ஏமாந்து போகாதிருப்போமாக. கண்களை அகல விரித்து தினமும் கர்த்தர் உங்களை வழிநடத்தும்படிக் கெஞ்சுங்கள்.

மாமனிதனின் வீழ்ச்சி

எண்ணாகமம் 20:9-11 - "அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரை கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, கலகக்காரரே, கேளுங்கள்! உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான். உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. சபையார் குடித்தார்கள். அவர்கள் மிருகங்களும் குடித்தன.

மோசே தன் கைகளில் தேவனது கோலை எடுத்தார். அது தேவனது கோல் (யாத் 4:20). அது எகிப்தில் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்யப் பயன்படுத்தப்பட்டக் கோல். அதே கோலினாலே மோசே பாவம் செய்தார். மோசே பயன்படுத்தும் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

"*...கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ?*" மோசே பொறுமை இழந்துவிட்டார். அவர்களைக் கலகக்காரர் என்றழைக்கிறார். "நாங்கள்" தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ ? என்கிற வார்த்தைகளைக் கவனியுங்கள். இதற்கு முன்பாக தண்ணீரைக் கொண்டுவந்தது மோசே அல்லவே; கர்த்தரல்லவா இஸ்ரவேலருக்குத் தண்ணீரைக்

கொடுத்தார். நிலைகுலைந்திருந்த மோசே பாறையை இருமுறை அடித்தார். ஒருமுறையல்ல இருமுறை! தேவன் தமது கிருபையை அணைகட்டவில்லை. பாறையிலிருந்து தண்ணீர் மடைதிறந்த வெள்ளமாய்ப் பாய்ந்தது. ஆனால் மோசேயினுடைய இந்தச் செயலில் தேவன் பிரியப்படவில்லை. வாக்குத்தத்த மண்ணை அவன் மிதிப் பதில்லை என்று ஆண்டவர் உடனடியாகச் சொல்லி விட்டார்.

எண்ணாகமம் 20:12 – "பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபை யாருக்கு நான் கொடுத்த தேசத்திற்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்."

மோசேயின் பாவங்கள் இரண்டைக் கர்த்தர் சுட்டிக் காட்டுகிறார். அவன் தேவனை நம்பவில்லை என்றும் இஸ்ரவேலரின் பார்வையில் அவரைப் பரிசுத்தராக உயர்த்திக் காட்டவுமில்லை என்பதே. 'பாறையிடம் பேசுவது போதுமா ? தண்ணீர் வந்துவிடுமா ?' என்று மோசே சந்தேகித் திருக்கலாம். எப்படி இருப்பினும் மோசே விசுவாசத்தில் தடுமாறினார் என்பதை வேதம் தெளிவுபடுத்துகிறது. மோசே பதறிப்பேசினார் என்கிறது திருமறை.

"அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத் தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான்" (சங் 106:33). தனது சகோதரியின் மரணத்தினால் மோசே மனநிலை பாதிக்கப்பட்டிருந்திருப்பார். இஸ்ரவேலரின் முறு முறுப்பு இன்னும் கடுப்பேத்தியிருக்கும். காரணம் என்னவா யிருந்தாலும், பூமியிலேயே சாந்தமான மனிதர் தடுமாறினார். "நமது பலவீனத்தில் மட்டுமல்ல நமது பலத்திலும் நாம் சோதிக்கப்படலாம்" என்கிறார் ஒரு தேவ மனிதர்.

தேவன் விரல்நீட்டிக்காட்டும் மற்றொரு குற்றம் – இஸ்ரவேலரின் பார்வையில் மோசே தன்னைப் பரிசுத்தராய்க் காட்டவில்லை என்பதுதான். மோசேயின் ஒவ்வொரு செயலையும் எதிர்ச்செயலையும் மக்கள் கழுகுப் பார்வை யுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். முரட்டாட்டமான ஒரு சந்ததிக்கு முன்பாக மோசே தேவனை ஏமாற்றமடையச் செய்தார். மக்கள் நமது ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து கவனிக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் இரண்டு கண்களால் பார்க்கிறோம். ஆனால் இரண்டாயிரம் கண்கள் நம்மை நோக்கிக் கொண்டே இருக்கின்றன.

மோசே வாழ்ந்த நாட்களைவிட நமது நாட்கள் கொடூர மாயிற்றே. பாவம் ஆறாய் ஓடுகிறதே. தேவனைப் பகடியாடும் கூட்டம் பெருகிவருகிறதே. தேவன் உங்களைத் தலை வனாக வைத்திருப்பாரானால் நீங்கள் மிகுந்த கவனமா யிருப்பது நல்லது. நமது செயல்களுக்கும் எதிர்ச் செயல்களுக்கும் நாம் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். நாம் எப்போதும் அவரது பெயருக்கு மகிமை சேர்க்கவேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் மோசேயின் தோல்வி பெரும்பாடமாகும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் நாம் தேவனையே சார்ந்திருக்கவேண்டும். அவரது கிருபையையே பற்றிக் கொண்டு அவரது வழிநடத்து தலை எப்போதும் நாடுவோம். நாம் தூசு என்பதை ஆண்டவர் நினைவில் வைத்திருக்கிறார். நாம் வைத்திருக் கிறோமா ? நாம் மென்மேலும் கர்த்தரையே உறுதியாய்ப் பற்றிக் கொள்ளவேண்டுமென்பதே மோசேயின் தோல்வி கற்பிக்கும் பாடம். கர்த்தர் நமக்கு உதவி செய்து நம்மைப் பெலப்படுத்துவாரென்பதில் சந்தேகமேயில்லை. ஆமென்.

மந்திரமுமில்லை; சூனியமுமில்லை; அழைக்கப்பெற்ற
தேவப் பிரியராய் வாழும் அன்பருக்கு;
எதிரான ஆயுதங்கள் தகர்ந்துபோம்; அவர் எதிரே
வந்தது ஒரு வழியே; ஓடினதோ ஏழு வழியாய்!
பாம்பின் வினாவும், புறாவின் கபடமின்மையும்
தேவையே, இறை மக்களுக்கு; நம் எதிரி
பிசாசின் வஞ்சகத்தை முறியடித்து
வெற்றிவாகை சூட முன்னேறுவோம் வாரீர்."

சூழ்நிலை 11

மோவாப் சமவெளி

எல்லாம் நன்மைக்கே!

எண்ணாகமம் 22:1–4 – "பின்பு இஸ்ரவேல் மக்கள் பிரயாணம் பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர் தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள். ஜனங்கள் ஏராளமாயிருந்த படியி னால் மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் மக்களி நிமித்தம் கலக்கமடைந்து, மீதியானரின் மூப்பரை நோக்கி; மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்து போடும் என்றான்."

இஸ்ரவேலைப் பற்றிய பயம்

மோவாபின் அரசனாகிய பாலாக் இஸ்ரவேலைப் பார்த்து நடுக்கங்கொண்டான். இஸ்ரவேலைக் குறித்த பயம் என்பது கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம். இரண்டு காரணங்களுக்காக மோவாப் இஸ்ரவேலைக் கண்டு தொடை நடுங்கினான். அவர்கள் எமோரியருக்குச் செய்த யாவையும் மோவாபியர் கண்டிருந்தனர். இஸ்ரவேலின் கடந்தகால வெற்றி அவர்களைப் பயமுறுத்தியது மட்டுமல்ல, இஸ்ரவேலர் ஏராளமாயிருந்தனர்.

நமது கடந்தகால வெற்றி

யோசுவாவின் காலத்தில் கானானிய அரசர்கள் இஸ்ரவேலரைக் கண்டு கலங்கினரே, அதுவரை இந்நிலை நீடித்தது. ராகாபாகிய வேசி வேவுகாராரிடம் சொல்வதைக் கவனியுங்கள், *"கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தார் என்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்களென்றும் அறிவேன்" (யோசு 2:9).* பார்வோனைக் குறித்தும் எகிப்தின் சேனை களைக் குறித்தும் இஸ்ரவேல் நடுநடுங்கிய நாட்களெல்லாம் காற்றோடு போய்விட்டன. இப்போது மக்கள் இஸ்ர வேலரைக் கண்டு பீதியடைகின்றனர். இதுவே தேவன் தமது ஊழியருக்குத் தரும் சுதந்திரம்.

ஏசாயா 54:17 – "உனக்கு விரோதமாய் உருவாக்கப் படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோத மாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்து வாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும் என் னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் நம்மை வாலாக்காமல் தலையாக்குவார். அவரது ஆசீர்வாதங்கள் உசிதமானவை. தமது பிள்ளை களுக்குச் சிறந்ததையே எப்போதும் அருளுவார். அவர் மகாப்பெரிய கடவுள். உன்னதமான ஆசிகளையே நமக்கு வழங்குகிறார். சிறந்த மக்களாகத் திகழவே இஸ்ரவேலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

உபாகமம் 28:1 – "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண் மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல இனத்தாரிலும் உன்னை மேன் மையாக வைப்பார்."

தேவனது ஆசிகள் நமது வாழ்வில் பொங்கி வழிந்தோடும். கடவுள் நம்மை எப்படி ஆசீர்வதிக்கிறார் என்று கண்டு மக்கள் நமக்குப் பயப்படுவார்கள் (உபா 28:10).

வானத்து நட்சத்திரங்களைப் போல

எண்ணாகமம் 22:3 – "மக்கள் ஏராளமாயிருந்தபடியினால் மோவாப் மிகவும் பயந்து, கலக்கமடைந்து ..."

எண்ணாகமம் 22:5– "அவர்கள் பூமியின் விசாலத்தை மூடியிருக்கிறார்கள்."

மோவாபின் அரசனாகிய பாலாக் பயந்ததற்கு மற்றொரு காரணம் அவர்களது எண்ணிக்கை. ஒவ்வொரு சந்ததியிலும் பாலாக்குகளை எழுப்ப சாத்தான் தவறவில்லை. தேவனது மக்களின் வளரும் எண்ணிக்கையைப் பார்த்து இவர்கள் பயப்படுகிறார்கள். எகிப்தில் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக பார்வோன் ஆக்ரோஷமாக எழும்பியதற்கு ஒரு முக்கியக் காரணம், அவர்களது பெருக்கமே. பலர் பயத்தினால் சபையைத் துன்புறுத்துகிறார்கள். நமக்கு விரோதமாக மக்கள் வீறிட்டு எழுவதும் பயத்தினாலேயே எவ்வளவுக்கதிகமாக சபை துன்புறுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கதிகமாக அது பலத்திலும் வல்லமையிலும் பெருகும். அதிகாரிகள் சபைக்கு விரோதமாக வந்து அதைக் கூடுதல் பலமுள்ளதாக்கி விட்டுச் செல்கின்றனர். இதுதான் மோவாபிலும் நடந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

பாலாக்கின் திட்டம்

பாலாக்கைப் புரிந்து கொள்வது அவசியம். வேத வசனம் சொல்வதைக் கேளுங்கள், "*ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால் பாம்புகளைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போல கபடற்றவர்களாகவும் இருங்கள்" (மத் 10:16).* நாம் புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். பார்வோன் எதிர்த்து வந்தது போலவோ

அமலேக்கியர் பின்னிருந்து தாக்கியது போலவோ பாலாக் இஸ்ரவேலின் மேல் படையெடுத்து வரவில்லை. பாலாக் தந்திரமாய் வருகிறான். அவன் தந்திரக்காரன். நன்னெறி தத்துவங்களில் முதுகெலும்பில்லாத தேவனது ஊழியன் ஒருவனை விலைக்கு வாங்க முயற்சிக்கிறான். இந்த சந்தர்ப்பத்தில் தான் பிலேயாமை பயன்படுத்திக்கொள்ள விழைகிறான். தேவனே அச்சூழ்நிலையை மேற்கொள்ளு கிறார். தான் சொல்லுவதை மட்டுமே பிலேயாம் அரசனிடம் சொல்ல வேண்டுமென்று திரும்பத்திரும்ப எச்சரிக்கிறார். பிலேயாமும் அப்படியே செய்கிறான். பேசும் ஒரு கழுதையின் மூலமாகவும் உருவிய பட்டயத்தோடு நின்ற ஒரு தேவதூதன் மூலமாகவும் தேவன் பிலேயாமை எச்சரிக்கிறார். பிலேயாம், இஸ்ரவேலரைச் சபிக்கும்படியாக செல்கிறான். அதற்கு பதிலாக ஆண்டவன் தம் மக்களின் மேல் ஆசீர்வாத மழை பொழிகிறார். சூழல் தலைகீழாக மாறுகிறது! இப்படித்தான் கர்த்தர் கிரியை செய்கிறார்.

மக்கள் நம்மை நசுக்க எடுக்கும் முயற்சிகள் நம்மை நாற்றிசையிலும் பெருகச் செய்கிறது. மக்கள் நம்மை அமுக்கும்போது அவர்கள் நாம் அமோகமாக கனிகொடுக்க உதவுகின்றனர். நமது தோல்விக்கு அவர்கள் குழிபறிக்கும் போது, நாம் கொடிகட்டிப் பறக்க வழிவகுக்கின்றனர். மக்கள் இப்பூமியிலிருந்தே நமது பெயரை அழித்துப்போட நினை க்கும்போது, வரவிருக்கும் சந்ததிகளெல்லாம் நமது பெயரைப் பொன்னேடுகளில் பொறிக்க உதவி செய்கின்றனர். பிறர் நம்மை இரும்புப் பிடியில் வைக்க நினைத்தாலும் அதுவே நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகிறது. மக்கள் நமது புகழைச் சீரழிக்க நினைத்தால் அவர்கள் நம்மை பிரஸ்தாபமுடையவர்களாக்குகின்றனர். தேவனுக்கே மகிமை! நமது தேவன் துன்மார்க்கரின் திட்டங்களைக் கவிழ்த்து போடுகிறவர். நமது வாழ்க்கையிலும் பாலாக்குகள் தேவை. உங்கள் வாழ்க்கையிலிருக்கும் பாலாக்குகளுக்காக தேவனைத் துதியுங்கள். பாலாக்குகள் மூலமாக தேவன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆகவே கவலைப்

படாதீர்கள். தேவன் உங்களோடுதான் இருக்கிறார். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி. உங்கள் பிள்ளைகள் ஆசீர் வதிக்கப்பட்டவர்கள். உங்கள் சந்ததியாரை நமது தேவ னாகிய கர்த்தர் மறப்பதில்லை.

ஆசீர்வதிக்கப்பட்ட யோசேப்பு

ஆதியாகமம் 50:20 – "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிற படியே வெகுமக்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்."

பழைய ஏற்பாட்டில் மற்றொரு சுவாரஸ்யமான கதை யோசேப்புடையது. தேவன் அவரது வாழ்வில் விநோதமாக செயல்பட்டார். அவன் தனது சகோதரரால் அல்லல்படுத்தப்பட்டு குழிக்குள் எறியப்பட்டான். பின்பு அரபியரிடம் விற்கப்பட்டான். அரபியர் அவரை எகிப்து தேசத்தில் விற்றனர். அடுத்தபடியாக அவர் போத்திபாரின் வீட்டிற்கு மேற்பார்வையாளராக, அதிகாரியாக நியமிக்கப் பட்டான். அங்கும் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு சிறைச் சாலையில் அடைக்கப்பட்டான். தன்னுடைய வாழ்க்கையில் கடவுள் என்னதான் செய்கிறார் என்று யோசேப்பு குழம்பியிருக்கலாம். ஆனால் யோசேப்பின் வாழ்க்கையில் நடந்ததெல்லாம் நன்மைக்காகவே நடந்தது. எல்லா தோல்விகளும் மாபெரும் வெற்றிக்கு நேராக நடத்தின. தேவன் பார்ப்பவற்றை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் *"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோ 8:28)* என்ற வாக்கை விசுவாசித்து அவரை நம்பிப் பற்றிக் கொள்ளலாம்.

ஆம். எல்லாமே ஒன்றிணைந்து செயல்பட்டு நன்மையை விளைவிக்கும். வழியில் சந்திக்கும் தற்காலிகத் தோல்விகளைப் பற்றி கவலை கொள்ளாதீர். இன்றைக்கு

நீங்கள் அனுபவிக்கும் தோல்விகள் ஒருநாள் உங்களை வெற்றிக்கு வழிநடத்தும். நாம் புரிந்துகொள்ளமுடியாத வகைகளில் தேவன் செயல்படுகிறார். இப்போதைய சூழல் தோல்வியாகத் தென்படலாம். ஆனால் உங்கள் வாழ்க்கை தோல்வியாகிவிடாது. நீங்கள் வாகை சூட அழைக்கப் பட்டவர்கள். உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவியுங்கள், அவர் உங்களை வெற்றிப் பாதையில் நடத்துவார். மேற் சொல்லப்பட்ட வார்த்தையில் உறுதியாய் நில்லுங்கள் (ரோ 8:28). நிகழ்கால நெருக்கடியைத் தாண்டிச் செல்ல கர்த்தர் அருள் புரிவார்.

பிலேயாமின் போதகம்

வெளி 2:14 – "ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணு வதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு."

ஆண்டவர் சாபத்தை ஆசீர்வாதமாய் மாற்றினார்தான்; ஆனால் பாலாக்கின் மற்றொரு சூழ்ச்சியில் இஸ்ரவேலர் தடுக்கி விழுந்தனர். இஸ்ரவேலின் தேவனைக் குறித்து பிலேயாமும் சற்று அறிந்திருந்தான். அவர் பாவத்தைச் சகித்துக்கொள்ளமாட்டார் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே விக்கிரக ஆராதனை மற்றும் வேசித்தனம் என்னும் தூண்டில்களைப் போட்டு இஸ்ரவேலரை ஆசை காட்ட பாலாக்கை அவன் ஊக்குவித்தான். ஆண்டவருக்கு விரோதமாகப் பாவம் செய்தால் அப்பாவத்தின் பலன் பின்தொடர்ந்து வரும் என்பது பிலேயாமுக்கு நிச்சயம் தெரியும். இஸ்ரவேலோ பாலாக் மற்றும் பிலேயாமின் தந்திர த்தைப் புரிந்துகொள்ளவில்லை. சாத்தானின் ஆசை காட்டும் திட்டங்களைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க

வேண்டும். நமது பலவீனங்களைக் குறிவைப்பான். பின்பு நாம் வழுக்கி விழும்போது நம்மை அழித்துப்போட உத்தரவு கேட்பான். இதுவே சாத்தானின் கள்ளத்தனமான குணம். *"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச் சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேது 5:8).*

சாத்தான் பலவிதங்களில் நமக்கு ஆசை காட்டுவான். அவனது தந்திரங்களைக் குறித்து ஜாக்கிரதை. உங்கள் பலவீனங்களைக் குறித்தும் கவனமாயிருங்கள். நீங்கள் சோதிக்கப்படக்கூடிய இடங்களில் துள்ளித் திரியாதீர்கள். உங்கள் வாழ்க்கையில் ஆன்மீக வரம்புகள் இருக்கட்டும். யாரும் உங்களைச் சுலபமான இரையாக எண்ணிவிட வேண்டாம். உயரிய கொள்கைகள் உடையவர்களாய் வாழுங்கள். சவுல், பெலிஸ்தியர் மற்றும் அமலேக்கியர் போன்ற எதிரிகளிடமிருந்து தாவீதைக் கர்த்தர் காப் பாற்றினார். தேவன் அவனுடைய பாவங்களைத் தயவாய் மன்னித்தாலும் அவற்றின் விளைவுகள் அவரைத் தொடர்ந்து பிடித்தன. தன் மகன்கள் அம்னோனும் அப்சலோமும் மரிப்பதை அவனது கண்கள் கண்டன. ஆம் அருமையானவர்களே, நமது பாவங்கள் நம் பின்னே வரும். மோவாபைக் குறித்து எச்சரிக்கை. இந்தச் சம்பவம் நடக்கும்போது இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்தின் வாயிலில் இருந்தனர். ஆகவே கவனம். நாம் இளைஞரா யிருக்கும்போது ஆண்டவருக்காக வைராக்கியமாகவும் உயரிய ஆன்மீகத் தரமுடையவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் ஆண்டுகள் உருண்டோடும்போது தளர்ந்து விடுகிறோம். நடுவயது அதிர்ச்சி குறித்து விழிப்பாயிருங்கள். ஆண்டவரோடு நமது ஆன்மீக நடைபயிற்சியில் ஓய்வே கிடையாது. வாக்குப்பண்ணப்பட்ட இளைப்பாறுதலை இழந்துபோகாமலிருக்கும்படி முடிவுவரை உத்தமராய் இருப் போம். அவரது கிருபையையும் பெலத்தையும் சார்ந்து கொள்வோம். இன்னும் கொஞ்ச தூரம்தான். செய்ய

வேண்டியவை இன்னும் சொற்பமே. நித்திய இளைப்பாறுதலுக்குள் நுழைய காலமாயிற்று. அதுவரை ஆன்மீகத் தழல் அணைந்துபோகாமல் காத்துக்கொள்வோம்.

பிலிப்பியர் 1:5 – "உங்களில் நற்கரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பியிருக்கிறேன்."

ஆண்டவரின் வார்த்தைகள் உயர்ந்தவை
புத்திக்கு எட்டவில்லையே!
காய்ந்துபோன கனவுகள், வாழ்வின் கேள்விகள்
சாவின் புதிர்கள், முடிவில்லாப் பயணம்,
பயனற்றப் போராட்டம்
இவற்றின் இரகசியம்தான் என்ன?
புரியவில்லையே!

ஒருநாள் விசால தெளிந்த பார்வை கிட்டும்;
அது அவரது பாதையே சரியென்று காட்டும்.
முடிவில்தான் புரிந்துகொள்வேனோ?

சுமக்கமுடியா சிலுவைகள்,
மடங்கடிக்கப்பட்ட முயற்சிகள்,
விரயமான நற்செயல்கள்,
விடாத சோர்பு, உள்ளான களைப்பு,
ஏன் இவை?
ஆம், முடிவில்தான் புரிந்துகொள்வேன்!

– ஆசிரியர் தெரியவில்லை

சூழ்நிலை 12

பிஸ்கா

மகிமையை நோக்கி!

உபாகமம் 34:4 – "அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி; நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான். இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார்."

பயணத்தின் முடிவிற்கு வந்துவிட்டார் மோசே. கண்ணெதிரே வாக்குத்தத்த தேசம். இதைத்தானே நாற்பது ஆண்டுகளாகக் கனவு கண்டுகொண்டிருந்தார். அவரது குறியே அதுதான். அவரது வாஞ்சை அது ஒன்றே. அவரது ஏக்கம் வேறெதிலும் இல்லை. தேவனோ குறுக்கே கரம் நீட்டி அவரைத் தடுத்தார். "*நீ அங்கே போவதில்லை*" என்பதே கடவுளது கடைசி வார்த்தைகள். மோசேக்கு இது சாட்டையடிதான். மேரிபாவில் அவரது கீழ்ப்படியாமை யினிமித்தமே இது என்றார் கர்த்தர். பெரிய சவால்களைக் கடந்தும் சிக்கலான சூழ்நிலைகளைத் தாண்டியும் இஸ்ரவேலை நடத்தி வந்தவருக்கு உள்ளே பிரவேசிக்க அனுமதியில்லை. இஸ்ரவேலைப் பல துன்பங்களிலிருந்து

மீட்டவருக்குத் தடை. சாந்த சொரூபிக்குத் தடையுத்தரவு. உத்தமனுக்கு உள்ளே நுழைய வழியடைப்பு. ஆண்டவருக்கு முன்பாக மோசே புலம்புகிறார்:

உபாகமம் 3:25 – "நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன்."

மோசே தேவனிடம் கெஞ்சினார். வாக்குத்தத்த தேசத்தில் சொந்த நிலத்தை (சுதந்திரத்தை) அவர் கேட்கவில்லை. யோர்தானைத் தாண்டிச் சென்று தேசத் தைப் பார்க்க மட்டுமே கேட்டார். இதற்கு முன்பாக இஸ்ர வேலுக்காக மோசே மன்றாடியிருக்கிறார். தனது சந்ததி பெரிய தேசமாகிவிட தேவன் கொடுத்த வாக்கைக்கூட ஒதுக்கித் தள்ளினார் (யாத் 32:10). மக்கள் பட்சத்தில் நின்றார். இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் மோசேக்கு செவிகொடுத்த தேவன் இப்போது செவிகளை அடைத்துக் கொண்டார். மோசேக்கு அவர் கொடுத்த பதிலடியைப் பாருங்கள்:

"கர்த்தர் உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல் என்னை நோக்கி: போதும், இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்" என்றார் (உபா 3:26).

போதும் நிறுத்து

கிருபையே உருவான தேவனிடமிருந்து காதை உருவக்குத்தக் கூடிய பதில்! மோசே இதை எதிர்பார்த் திருக்கவே மாட்டார். ஏன் கர்த்தர் தன்னை உதாசீனப் படுத்துகிறார் என்று அவர் எண்ணியிருக்கலாம். இருப்பினும் தன் கதியை ஏற்றுக்கொண்டார். இச்சம்பவம் மோசேயின் வாழ்வில் விடைகாணமுடியாத வினாவாகவே இருந் திருக்கும்.

தேவனது புதிரான வழிகள்

தேவன் செயல்படும் விதத்தை நாம் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தாலும் அவரது வார்த்தை, *"தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீ ஆராய்ந்து அறியக்கூடுமோ?"* *(யோபு11:7)* என்கிறது. அவரது வழிகள் சிலசமயம் கண்ணாம்பூச்சி விளையாடுவதாகத்தான் தெரியும். அவரது வழிகளின் ஆழத்தை அளக்கமுடியாது, முடிவு விளக்கமளிக்கலாம். ஆனால் அவர் நமக்குப் போதுமானவர், அவர் நல்லவர் என்பது மட்டும் நிச்சயம். தேவன் நமது வாழ்க்கையில் அனுமதிக்கும் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள நாம் திராணியற்றவர்கள். நாம் மகிமையடையப் பொறுத்திருக்க வேண்டும். ஏனெனில் இப்போது நாம் குறைந்த அறிவும் புத்தியும் உடையவர்கள். ஆனால் ஒருநாள் தெளிவு பெறுவோம். எனக்கருமையானவர்களே, சோர்ந்துபோக வேண்டாம். கர்த்தர் நல்லவர். நமது மகிமையின் நாளுக்காகக் காத்திருப்போம், அது சமீபமாயிருக்கிறது.

இறுதி ஏமாற்றம்

தனது வாழ்க்கையின் இறுதி ஏமாற்றத்தை மோசே சந்திக்க வேண்டியதாயிற்று. தேவனது மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் கடைசியில் சோர்ந்துபோக வாய்ப்புண்டு. பல்லாண்டு உழைப்பு பஸ்பமாகலாம். கடந்த கால வேதனையின் பாதை பலனற்றுப் போனதாகத் தோன்றலாம். இவ்வுலகில் அவர்கள் அனுபவித்த ஆருயிர் உறவுகள் கானல் நீராகக் காட்சியளிக்கலாம். வாழ்க்கை சூன்யமாகத் தோன்றலாம். மோசேயும் அப்படித்தான் உணர்ந்திருப்பார். ஆரோனும் மிரியாமும் இல்லை, அவரது மனைவி பிள்ளைகளைக் குறித்து நாம் அதிகம் வாசிக்கவில்லை. இப்போது தேவனும் காலைவாரிவிட்டதாகத் தோன்றுகிறது. இந்தப் பிஸ்காவை நீங்கள் கடந்துவந்ததுண்டோ? தேவனுக்காக உழைத்து, ஓடாய்த் தேய்ந்து கடைசியில் அதிர்ச்சியான ஏமாற்றத்தையும் தனிமையையும் தழுவிக் கொண்டிருக்

கிறீர்களா ? உங்கள் சிறந்த சேவையை யாரும் கண்டு கொள் ளவில்லையா ? நீங்கள் பட்ட பாடுகளெல்லாம் ஒன்று மில்லாமல் போய்விட்டதுபோல் உணருகிறீர்களா ? நண்பரே, அதுதான் பிஸ்கா. இந்த இடத்திற்கு நீங்கள் புதிய விருந்தாளி யல்ல. இயேசுவும் இங்கே வந்திருக்கிறார். எலியாவும் இங்கே வந்திருக்கிறார். பவுலும் இங்கே வந்திருக்கிறார். தேவனது ஒவ்வொரு பிள்ளையும் இவ்விடத்தை சந்தித்தேயாக வேண்டும்.

எலியாவின் வாழ்க்கையில் பிஸ்கா

எலியாவிற்கும் பிஸ்கா இருந்தது. தனது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் ஏமாற்றம் அவரைக் கவ்விக்கொண்டது. கர்மேல் மலையின்மேல் தேவனது பராக்கிரமம் வெளிப்படுத்தப்பட்ட போதும் ஏசபேல் அசையவில்லை. பாகால் வழிபாடு ஒழிந்துபோகவில்லை. தேவன் தன் வாழ்க் கையில் என்ன செய்கிறாரென்று எலியாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏமாற்றம் பூதமாய் அவர்முன் எழும்பி நின்றது. தன் வாழ்க்கை வீண் போல தோன்றியது தேவனுக்கோ வேறு திட்டங்கள் இருந்தன. எலிசா என்கிற இன்னொரு தீர்க்கனைப் பயன்படுத்தவிருந்தார். அவரது நாட்களில் பாகால் வழிபாடு முடிவுக்கு வந்து ஆகாபின் குடும்பம் நியாயந்தீர்க்கப்படும். இந்த மகிமையான திருப்பத்தைக் காண எலியா உயிரோடிருக்கப்போவதில்லை. அவர் சுழல்காற்றில் எடுத்துக்கொள்ளப்படுவார். விண்ணக இரதமும் அக்கினியும் அவரைச் சுமந்துசெல்லும். அதிர வைத்தத் தீர்க்கத்தரிசிக்கு எத்தனை அதிசயமான முடிவு! அடப்பாவமே, இவர் சாவை விரும்பி அதற்காக ஜெபிக்கவும் செய்தார். தேவன் அவரது மன்றாட்டிற்கு செவிசாய்க்க வில்லை. மரணமின்றி மகிமையைத் தழுவினார் (2 இரா 2:11).

என்னே மகிமை. கடவுள் தம் ஊழியரை மகிமையாகத் தான் எடுத்துக்கொள்ளுகிறார். பெருங்கூட்டத் தின் முன்பாக அல்ல, அரண்மனையின் முற்றத்திலல்ல – ஒரே ஒருவர் முன்னிலையில் – தன் கையாள், தீர்க்கன் எலிசா! கர்த்தர் தம் ஊழியருக்காக வைத்திருக்கும் திட்டங்களை இவ்வுலகம் காணமுடியாது. மோசேயும் எலியாவும் இயேசுவுக்குக் காட்சியளித்து இவ்வுலகில் அவரது இறுதி கால ஊழியத்தைக் குறித்து உரையாடியதில் வியப்பேது முண்டோ ? இயேசுவின் நிலை என்னவாயிருக் கப்போகிறது என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் கடந்துவந்த பாதைதானே அது. அன்பரே, உங்கள் தனிமையை எண்ணித் தவிக்காதீர்கள், பரலோகக் கூட்டம் உங்களோடு உண்டு. அக்கினி இரதங் கள் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக் கின்றன. இன்னும் கொஞ்சம் காலந்தான். இன்னும் கொஞ்சம் வேலைதான், நித்திய மகிமையை அடைவீர்கள்.

இயேசுவின் வாழ்க்கையில் பிஸ்கா

இயேசுவின் வாழ்க்கையின் இறுதிக் கட்டம்– நெருக்கப்பட்டார் (யோ 12:27). கெத்செமனேயில் துடித்தார் (லூக் 22:44). இதைவிடக் கொடூரம் இன்னும் வரவிருந்தது. இயேசு அனுபவித்த வேதனையையும் தவிப்பையும் அவரது சீடர்களில் யாரும் புரிந்து கொள்ளவில்லை. அவர் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார். சீடர்களில் ஒருவன் இயேசுவை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தான். அவருக்கு நெருங்கிய சீடரில் ஒருவன் அவரைச் சபித்து மறுதலித்தான். எல் லோரும் அவரைக் கைவிட்டனர். இயேசு தன்னந்தனியே விடப்பட்டார். 'ஓசன்னா, ஓசன்னா' என்று கூச்சலிட்டக் கூட்டம் காணாமல் போனது. அருமை சீடர் அவரை விட்ட கன்றனர். நெருங்கியவர்கள் தூரமாயினர். தனியாக நிற்கவும் தனியாகப் பாடுபடவும் தனியாக மரிக்கவும் தேவன் இயேசுவை விட்டுவிட்டார். தோல்வியைப் போல் தோன்று கிறதா ? இல்லை அருமையானவர்களே, பிஸ்கா வெற்றியின் கொடுமுடி. நாம் தேவனுக்காக தனிமையாக நிற்கிறோம்.

தேவனைத் தனிமையாகத் தரிசிக்கிறோம். மட்டுமா ? அவரது தீர்மானத்தைத் தனிமையாகவே நிறைவேற்றுகிறோம். அல்லேலூயா!

பவுலின் வாழ்க்கையில் பிஸ்கா

பவுல் தன் வாழ்க்கையெல்லாம் சிறந்த நண்பர்களைச் சேர்த்தார். எப்பொழுதுமே ஒரு குழுவோடுதான் இருந்தார். பலருக்கு சீடத்துவப் பயிற்சியளித்தார். போனவிடமெல்லாம் உறவுகளைக் கட்டி எழுப்பினார். ஒரு சமயம் வந்தது. யாவரும் பவுலை விட்டுச் சென்றனர். அது அவரது இறுதிச் சிறைவாசம். அவருக்கு உண்மை நண்பரில்லை என்பதில்லை; சூழ்நிலை அவர்களைப் பிரித்து வைத்தது. சிலர் அவரைக் கைவிட்டிருந்தனர். தீமோத்தேயுவைக் காண ஏங்கின சமயம் கூட உண்டு. தீமோத்தேயுவுக்குத் தன் இறுதிக் கடிதத்தை எழுதிக்கொண்டிருந்தபோது சிறைச் சாலையின் நான்கு சுவர்களுக்கு நடுவே அடைபட்டிருந்தார். சீக்கிரமாய்த் தன்னிடம் வரும்படி அவனை அழைத்தார். இனி ஊற்றப்பட்டுப் போவதையன்றி தனக்கு வேறொன்று மில்லை என்று நம்பினார். அவர் தனது ஓட்டத்தை முடித்து வேலையை நிறைவேற்றினார். அவர் எந்தவொரு பதக்கத்திற்காகவுமல்ல, தனது தலை துண்டிக்கப் படுவதற்கே காத்திருந்தார். தனது பரலோக வீட்டிற்குப் பறந்துச் செல்லக் காத்திருந்தார். மகிமையின் மகுடம் அவருக்குத் தயாராக இருந்தது. பவுல் தனது பிஸ்காவில் மகிமை எய்தினார். "**தன் இரட்சகருக்கு முட்கிரீடம் பரிசளித்த உலகத்தின் கரங்களிலிருந்து கிறிஸ்தவ னொருவன் மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வது எத்தனை வெட்கம்**" என்றெழுதுகிறார் சார்லஸ் ஸ்பர்ஜன். உங்கள் வாழ்க்கையின் முட்கிரீடங்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

மகிமையான பிஸ்கா

பிஸ்கா அனுபவத்தை தேவன் நமது வாழ்க்கையில் அனுமதிப்பதின் நோக்கமென்ன? நம்மைக் கொடுமைப் படுத்தி அழவைத்து ரசிப்பதற்கு ஆண்டவர் என்ன அரக்கனா? நமது பிஸ்காவின் ஒவ்வொரு அம்சத்தையும் நாம் புரிந்துகொள்ள முடியாமல் போனாலும் தேவன் நல்லவர் என்பதை மனதின் ஆழத்தில் பதித்துக் கொண்டால் அதுவே போதும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மோசே மறுரூபமலையில் வாக்குத்தத்த தேசத்திற்கு வருகை தந்தார். இஸ்ரவேலை நடத்துவதற்கு யோசுவாவைத் தலைவனாக நியமிக்க மோசே பணிக்கப்பட்டார். மோசேயினுடைய வாழ்க்கையின் பிஸ்கா, யோசுவாவில் பெரும் தலைவனைப் பிறப்பித்தது. இதுவரை யோசுவா மோசேயின் நிழலிலேயே இருந்தார். இப்போது அவரே முன்னின்று நடத்தவேண்டும். யோசுவா புத்தகத்தின் முதலாம் அத்தியாயத்தில் கர்த்தர் யோசுவாவிடம் 'பலங்கொண்டு திடமனதாயிரு' என்று எத்தனை முறை சொல்லுகிறார் என்று கவனியுங்கள். எலியாவினது வாழக்கையின் பிஸ்கா எலிசாவில் மாபெரும் தீர்க்கதரிசியை உருவாக்கி ஊழியம் முன்னேறச் செய்தது. இயேசுவினது வாழ்வின் பிஸ்கா, பிதாவின் முன்னிலையில் நமக்காக இடைவிடாமல் மன்றாடும் மத்தியஸ்தரை உருவாக்கியது. *"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதவிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி 4:15).* பவுலது வாழ்வின் பிஸ்கா தீமோத்தேயுவுக்கு எழுதின அற்புதமான படைப்பாகிய இரண்டாம் கடிதத்தை நமக்களித்துள்ளது. அதையன்றி வேதத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

நண்பரே, உங்கள் பிஸ்கா உங்களைக் கரையச் செய்கிறதா? தனிமை வாட்டுகிறதா? தேவன் எங்கே என்று மலைத்து நிற்கிறீர்களா? கவலை வேண்டாம். உங்கள் இருண்ட வாழ்க்கையில் ஒளிக்கதிர்களை நெய்து கொண்டிருக்கிறார் தேவன். இப்போது நமக்குப் புரியாது.

முடிவு விளக்கம்தரும்! கடைசியில் புரிந்துகொள்வோம்!

மகிமை! அல்லேலூயா! ஆமென்!

மோகத்தால் நிறைந்து லோகத்தில் கரைந்து
மாயத்தால் உலகமே எனதென்று எண்ணினேன்;
வானத்தின் அடியில் கால் வைத்த இடமெல்லாம்
வாயால் சலிக்காமல் "நான்" என்று சொன்னேன்.

காலங்கள் கடந்தன; பாதையில் பனிச்சென்று
சாலச் சிறந்ததோர் தரிசனம் கண்டேன்;
நானென்ற சொல் இனி போதாதென்றுணர்ந்து
ஆவென்று கதறினேன், "நானும் கிறிஸ்துவும்" என்று.

மாராஜனை நோக்கிப் பார்க்கப் பார்க்க
காய்ந்தது என் மகிமை தழைத்தது அவரது
நாயாய் நான் தேய வானமாய் அவர் உயர்ந்தார்
ஓவென்று திருத்தினேன், "கிறிஸ்துவும் நானும்" என்று.

பார்த்த தரிசனம் ஆர்த்தது என்னில்
வார்த்தைகளில்லை வருணிக்க, கவ்விப்பிடித்ததென்னை;
தாழ்த்தியே தாழ் பணிந்தேன்
நானென்ன சொல்வேன், "கிறிஸ்து மட்டுமே"!

—ஆசிரியர் தெரியவில்லை

இறுதியுரை

இந்த வாழ்க்கையில் நமது சாதனைகளை வைத்து நமது வாழ்வின் வெற்றியை எடைபோட முடியாது. அது நமது சொத்துக்களோ அல்லது அந்தஸ்தோ கூட கிடையாது. வெற்றியின் அளவுகோல் நமது வாழ்வில் கடவுளின் அழைப்பை எவ்வளவு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை அடுத்ததே. உலகிற்கு முன்பாகப் புழுக்களாக வாழ்ந்து மாலையின்றி மரித்துப்போன அப்போஸ்தலரின் வாழ்க்கையைப் போல அது இருக்கலாம். இவ்வுலகம் அவர்களுக்குத் தகுதியின்றிப் போயிற்று.

வாழ ஒரே வாழ்க்கையுண்டு. இன்னொரு வாய்ப்பு கிட்டப்போவதில்லை. நாம் வாழ்வதோ தேவனது கிருபை யால். பழைய நாட்களைத் திரும்பிப் பார்ப்போமானால் சிலருக்கு இன்பமான நினைவுகளும் சிலருக்குத் துன்பமான நினைவுகளும் இருக்கும். ஆனால் இறுதியில் தேவன் மட்டுமே நிஜம். அவர் ஒருவரே போதுமானவர் என்றறிவோம். இந்தப் பாடத்தைத்தான் நாம் கற்றுக்கொள்ள கர்த்தர் விரும்புகிறார். அவர் நம்மை அழைத்த அழைப்பின் நோக்கத்தை அவர் நிச்சயமாய் நிறைவேற்றுவார். நம்மை அழைத்தவர் அவரே. அவர் அல்பாவும் ஓமேகாவுமானவர். அவர் துவக்கமும் முடிவுமானவர். நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. நாம் உண்மையற்றவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவரா யிருக்கிறார். அவர் நமது அன்பு அப்பாவாயிருப்பதால் நமது வாழ்வில் எவ்விதத் தவறும் செய்வதில்லை. அவ்வப்பொழுது நாம் வேண்டும் என்று நினைப்பது நமக்குக் கிடைக்காமற் போனாலும் நமது தேவைகளை அவர் சந்திப்பார் என்பது நிச்சயம். சில சமயங்களில் ஆண்டவர் நமது வாழ்வில் அனுமதிப்பதெல்லாவற்றையும் நாம் புரிந்துகொள்ள முடியா மல் போனாலும் அவரது அபார இரத்தமும், மாறாத நேசமும், அவரது அளவற்றக் கிருபையும் தவறாது என்பது திண்ணம். நாம் சந்தேகமின்றி அவரைப்போல் மறுரூபமாவோம். அவர்

நம்மை பலத்திலிருந்து பலத்திற்கும், கிருபையிலிருந்து கிருபைக்கும், மகிமையிலிருந்து மகிமைக்கும் கொண்டுச் செல்வார். இப்புவியில் நமது வேலை முடிந்ததும் நாமும் பவுலோடு கூட சேர்ந்து "*நல்ல போராட்டத்தைப் போராடி னேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்*" என்போம் (2 தீமோ 4:7,8).

இவ்வுலக வாழ்வை நித்திய வாழ்விற்கு ஒப்பிடவே முடியாது. ஆனால் நமது ஆன்மீகப் பயணம் வனாந்தரப் பாதைதான் என்பதில் ஐயமில்லை. அது ஓர் ஆன்மீக யுத்தமாக இருக்கும். இளைஞன் தீமோத்தேயுவைப் பவுல் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடச் சொல்லு கிறார் (1 தீமோ 6:12). நமது உடலும் உலகமும் தீய சக்திகளும் நமக்கு விரோதமாகவே இருக்கின்றன. நமக்கு தேவனது வார்த்தை, தேவனது கிருபை, தேவனது ஆவி உண்டு. தேவனது கிருபையும் வல்லமையும் போதுமானதாக இருந் தாலும் இந்த நீண்ட பயணத்தில் சில சமயம் வீழ்ச்சி யடையத்தான் செய்கிறோம். இருந்தாலும் நாம் தூசியைத் தட்டிவிட்டு எழுந்து முன்னோக்கி நடைபோட்டு ஓட்டத்தை முடிக்கவேண்டும்.

எபிரெயர் 12:1,2 – "மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கட வோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்."

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு இதே பாதையில் நமக்கு முன்பாகச் சென்றிருக்கிறார் என்பதே இப்பயணத்தில் நமக்குப் பெரும் ஆறுதல். அதே ஏமாற்றத்தைச் சந்தித்தார். அதே வேதனையை அனுபவித்தார். அதே மனநோவைப் புசித்தார். அதே சஞ்சலத்தில் தவித்தார். அதே புறக்கணிப்பை ஏற்றுக்கொண்டார். அதே சோதனையின் பாதையில் நடந்தார். அதே மரணத்தை ருசித்தார்!

யோவான் 16:33 –"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்."

வனாந்தரப் பாதையில் சென்றதன் மூலமாக இயேசு உலகத்தை ஜெயித்தார். நாமும் அப்பாதையில் இயேசுவைப் பின்தொடர்ந்துச் செல்ல வேண்டும். நாம் எப்பொழுதும் அவர் முகத்தை நாடி எந்நாளும் ஆவியில் சார்ந்து கொள்வது அவசியம். அவர் உங்களை நடத்துவார், உங்களுக்கு வழி காட்டுவார், உங்களைப் பாதுகாப்பார், உங்களுக்குப் போதிப்பார், உங்களைப் பலப்படுத்துவார், உங்களுக்கு ஆலோசனை அளிப்பார், உங்களைத் திருத்துவார், உங்களுக்கு உதவி செய்வார், உங்களைச் சுமப்பார், உங்களை ஆறுதல்படுத்தி உங்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை முடிக்க அருள் புரிவார்.

ஆமென் !

கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற
இன்றே வாசியுங்கள் ...

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிக்கை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிக்கை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ.100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிக்கையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி

✦

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

✦

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

✦

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

✦

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஓடிசா,
கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம்,
மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட்
ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

✦

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய
மொழிகளில் "ஆசீர்வாதம்" எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும்
ஒலி–ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

✦

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு
கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! *பங்கு பெறுங்கள்!* *ஆதரியுங்கள்!*

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 00 91 416 2242943, 2248943
< hq@bymonline.org >
www.bymonline.org